யா/ கொல்லங்கலட்டி

# சைவத் தமிழ் வித்தியாலயம்



150 ஆவது ஆண்டு

## நிறைவு விழா மலர்

1872 - 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யா/கொல்லங்கலட்டி
# சைவத் தமிழ் வித்தியாலயம்



## 150 ஆவது ஆண்டு
## நிறைவு விழா மலர்
## 1872 - 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நூல்: 150வது ஆண்டு நிறைவு விழா மலர்

ஆசிரியர்: மலர்க்குழு

பதிப்புரிமை: யா/கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயம்

பக்கங்கள்: 96

அச்சுப்பதிப்பு: நியூ எவகிறீன் அச்சகம் (பிறைவேட்) லிமிட்டெட்,
இல.693, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 221 9893

**மலர்க் குழு**

**கௌரவ ஆலோசகர்**

**திரு.நா.பிரியந்தன்**

(அதிபர்)

**மலராசிரியர்**

**திருமதி பி.தர்மபாலன்**

**மலர்க்குழு உறுப்பினர்கள்**

**திரு. சி.கௌரிதரன்**

**திருமதி ஜெ.ஸ்ரீதரன்**

**திருமதி ய.சிவதாசன்**

**திருமதி க.சயந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழ்த்தாய் வாழ்த்து

*வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி*
*வாழிய வாழியவே!*
*வான மளந்த தனைத்தும் அளந்திடும்*
*வண்மொழி வாழியவே!*

*ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி*
*இசைகொண்டு வாழியவே!*
*எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!*
*என்றென்றும் வாழியவே!*

*சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்*
*துலங்குக வையகமே!*
*தொல்லை வினைதரு தொல்லை யகன்று*
*சுடர்க தமிழ்நாடே!*

*வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!*
*வாழ்க தமிழ்மொழி யே!*
*வானம் அறிந்த தனைத்தும் அறிந்து*
*வளர்மொழி வாழியவே!*

**மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாடசாலைக் கீதம்

*வாழிய வாழிய சைவ வித்தியாசாலை*
*வாழிய இதன் புகழ் நாளும்*
*தாயெனத் தொழுவோம் தருபயன் பெறுவோம்*
*நேயமாய் என்றும் நினைவினில் வைப்போம்*
*(வாழிய வாழிய........)*

*தொல்புகழ் அமைந்த கொல்லங்கலட்டி*
*எனும் இடம் உள்ளனை வாழி*
*சைவமாம் அமிழ்தும் தமிழ்மொழித்தேனும்*
*சாரும் விஞ்ஞானமும் வளர்ப்பாய்*
*(வாழிய வாழிய.....)*

*வேலுப்பிள்ளை நூலறிபுலவர்*
*நிறுவியவர் புகழ் மறவோம்*
*சிற்றம்பலமாம் சீர்பணிபுரிந்தார்*
*முகாமையாளர் அவர் பெயர் நினைவோம்*
*விநாயகர் அருளால் விளங்கிடும் தாயை*
*விருப்புடன் நாள்தோறும் பணிவோம்*
*(வாழிய வாழிய.....)*

**பாடியவர்:- புலவர் ம.பார்பதிநாதசிவம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கொடிக் கீதம்

ஏறுதுபார் கொடி ஏறுதுபார் மிக
எழிலுடன் காற்றினில் அசைந்தபடி
சீர்மிகு கொல்லங்கலட்டி சைவத்தமிழ்
வித்தியாசாலையின் புகழ் கொடியே!
(ஏறுது பார்...)

நூலறி புலவராம் வேலுப்பிள்ளை தான்
நிறுவியதால் மிகப் பெருமை பெற்றே
சீலமிகும் சிற்றம் பலமவர் முகாமையால்
சிறப்புற்ற அன்னையின் புகழ் கொடியே!
(ஏறுது பார்...)

கற்றாய்ந் தொழுகெனும் மகுட வாசகம்
கண்ணாய் விளங்கிடக் கால மெல்லாம்
நற்பண்புடனே கல்வியும் ஒழுக்கமும்
கற்பித்திடுபவள் எங்களன்னை!
(ஏறுது பார்...)

மஞ்சளுடன் செந்நிறமும் கலந்திட்ட
வண்ணத்தைக் கொண்டதாம் இக் கொடியே
ஐந்து முக வீரகத்தி விநாயகன்
அருகிருந்தருளப் பறக்கிறதே!
(ஏறுது பார்...)

**ம. பா. மகாலிங்கசிவம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மகுடவாசகம்

"கற்றாய்ந் தொழுகு"

## தூரநோக்கு

தரமான கல்வியை வழங்குவதன் மூலம்
நல்வாழ்வு வாழக்கூடிய
மாணவ சமுதாயத்தை உருவாக்குதல்.

## பணிக்கூற்று

சூழல் வளங்களைப் பயன்படுத்தி நவீன
உலகை நோக்கி மாணவர்களுக்கு தரமான
கல்வியினூடாக கலாசார பண்புகளையும்
ஒற்றுமையையும் வளர்த்து உலகில்
பூரண மனிதனாக வாழ வழிகாட்டுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



எமது பாடசாலை ஸ்தாபகர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



எமது பாடசாலையின் முகாமையாளர் வே. சிற்றம்பலம் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாடசாலை தொடர்பான அடிப்படை விபரங்கள்

| | | |
|---|---|---|
| 01 | பாடசாலையின் பெயர் | யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயம் |
| 02 | ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு | 1872 |
| 03 | பாடசாலையை நிறுவியவர் | ஸ்ரீமான். ஆ.வேலுப்பிள்ளை |
| 04 | பாடசாலையின் முகவரி | கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை |
| 05 | வலயம் | வலிகாமம் |
| 06 | கோட்டக் கல்வி அலுவலகம் | தெல்லிப்பழை |
| 07 | கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் | மாவிட்டபுரம் தெற்கு, J/232 |
| 08 | உள்ளூராட்சி சபை | வலிகாமம் வடக்கு |
| 09 | பிரதேச செயலர் பிரிவு | வலிகாமம் வடக்கு |
| 10 | பாடசாலை குறியீட்டு இலக்கம் | 1013016 |
| 11 | தொகை மதிப்பீட்டு இலக்கம் | 09134 |
| 12 | பரீட்சை இலக்கம் | 11482 |
| 13 | பாடசாலை வகை | III |
| 14 | வகுப்புக்களின் பரம்பல் | 1-5 |
| 15 | மொழி மூலம் | தமிழ் |
| 16 | இல்லங்கள் | விநாயகர்<br>வேலுப்பிள்ளை<br>நாவலர் |
| 17 | தொலைபேசி இலக்கம் | 0212244637 |
| 18 | மின்னஞ்சல் முகவரி | kollankaladdystv@gmail.com |
| 19 | பா.அ. சங்க கணக்கு | கணக்கிலக்கம் 109-1-001-30065159,<br>வங்கி - மக்கள் வங்கி, சுன்னாகம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




அதிபர். திரு. நாகேஸ்வரன் பிரியந்தன் SLPS III

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கீரிமலை நகுலேஸ்வரர் ஆதீன முதல்வர் அருளிய ஆசிச் செய்தி



கொல்லங்கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆயலத்தின் அருகில் அவர் அருளால் அமைந்துள்ள யா/கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயம் 150ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதில் பெரு மகிழ்வடைகின்றேன். 1872ம் ஆண்டு சைவம், தமிழ் வளர வேண்டும் என்ற எண்ணக்கருவுடன் நிறுவுநர் திரு.ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் ஏழை மக்களும் கல்விகற்கக் கூடிய வகையில் ஆரம்பித்த பாடசாலை அவரது அயராத முயற்சியால் படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று 150வது ஆண்டு விழாவை கொண்டாடுகின்றது.

"எழுத்தறிவித்தவன் இறைவன்" என்ற கருத்துடன் ஆரம்பப் பாடசாலைகள் தமது மொழி - தமிழ், சமயம் - சைவம் என்பதை நிலைநாட்டும் அடிப்படைத் தத்துவத்துடன் வீடுவீடாகச் சென்று மாணவர்களை அழைத்து வந்து கல்வி அறிவைப் புகட்டிய பெருமை நிறுவுனர் திரு.ஆ.வேலுப்பிள்ளை அவர்களுக்கே உரியதாகும்.

இக்கல்விப் பணியைச் சிறப்புற ஆற்றும் அன்றும், இன்றும் உள்ள அதிபர்கள், ஆசிரியர்களைப் பாராட்டுவதுடன் நன்றி கூறுவது எம் கடமையாகும்.

மேலும், 150வது ஆண்டு நிறைவு காணும் இப்பாடசாலை மேன்மேலும் வளர்ச்சியடைய எல்லாம் வல்ல நகுலேஸ்வரர் பெருங் கருணையை வேண்டி அவ்வழிநின்று மனம் நிறைந்த ஆசிகளை வழங்கு கின்றேன்.

**ராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள்,**
**நகுலேஸ்வர தேவஸ்தானம்**
**கீரிமலை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாவை ஆதீன கர்த்தா மஹாராஜ ஸ்ரீ.து .ஷ.இரத்தினசபாபதிக் குருக்களின் ஆசிச்செய்தி



ஈழத்திருநாட்டின் வடபகுதியில் யாழ்ப்பாணத்தின் வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் கொல்லங்கலட்டி எனும் கிராமத்தில் சைவமும் தமிழும் தழைத்தோங்க வேண்டும் என்ற பெருநோக்குடன் ஸ்ரீமான். ஆ.வேலுப்பிள்ளை அவர்களால் 1872ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயம் வீரகத்தி விநாயகப்பெருமானதும், சிதம்பரேஸ்வரப் பெருமானதும் அருட்பிரவாகத்தினால் அன்று முதல் இன்று வரை கல்வியில் மட்டுமன்றி இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் ஏனைய முதல் தரப் பாடசாலைகளுக்கு இணையாக வளர்ச்சி பெற்று வருகின்றது. இங்கு பணியாற்றி வருகின்ற அதிபர்கள் ஊக்கத்துடனும் விடாமுயற்சியுடனும் சளைக்காது பணிபுரிபவர்களாகவும் திகழ்ந்து கல்விப்புலத்தில் மாணவர்கள் வெற்றி பெறுவதற்கு உறுதுணையாகின்றனர்.

தற்போது அதிபராகக் கடமையாற்றும் திரு.நா.பிரியந்தன் அவர்கள் சிறந்த ஆளுமைமிக்க அதிபராகச் செயற்பட்டு மாணவர்களுக்குத் தரமான கல்வியை வழங்கி அவர்களை கல்வியில் மட்டுமன்றி இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் வெற்றி பெறச் செய்வதற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றார். இவரது காலப்பகுதியில் இப்பாடசாலை மாணவவளம், ஆசிரியவளம், பௌதிகவளம் என பலவற்றாலும் வளர்ச்சி பெற்று வருகின்றமையால் புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைந்து வருகின்றனர். இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் வெற்றியீட்டுகின்றனர். இவ்வாறு வளர்ச்சி கண்டு வரும் இப்பாடசாலையானது மென்மேலும் வளர்ச்சிப் படிகளைக் கண்டு கல்வி, இணைபாடவிதானச் செயற்பாடுகள் என பலதுறைகளிலும் முதல் தரப்பாடசாலைகளுக்கு இணையாகத் திகழ வேண்டுமென, மாவைக் கந்தப் பெருமானின் தனிப் பெருங்கருணையை வேண்டி இதய பூர்வமாக ஆசிர்வதிக்கின்றேன்.

**மஹாராஜஸ்ரீ.து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள்,**
ஆதீன கர்த்தா,
மாவை ஆதீனப் பேரரசு, மாவை ஆதீனம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய சிவாச்சாரியாரின் ஆசியுரை



யா/கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு 150 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, சிறப்பு மலர் வெளியீடு செய்யப்படுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கும் கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயத் திற்கும் நீண்டகால நட்பு உண்டு. 1966 ஆம் ஆண்டளவிலே நவராத்திரி விழாவின் கடைசி நாள் ஏடு தொடக்கும் நிகழ்வு ஆலயத்தில் நடைபெற்று ஆலயக் குருக்கள். உபயகாரர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எல்லோரும் மங்கள வாத்தியத்துடன் பாடசாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டு அங்கு சிறுவர்களுக்கு நாள் வகுப்பு நடைபெறும்.

அதேபோலவே இன்றும் அதிபர்,ஆசிரியர்கள்,மாணவர்கள் ஆலயத்திற்கு வந்து விநாயகப் பெருமானைத் தரிசித்த பின்பே பாடசாலைக்குச் செல்வார்கள். 1990 ஆம் ஆண்டுக்கு முன்பு போல தரம் 10 வரை வகுப்புகள் நடைபெற்றுப் பாடசாலை வளர்ச்சி பெற எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகப் பெருமானையும் சிதம்பரேஸ்வரப் பெருமானையும் வணங்கிக் குரு ஆசியும் அருளாசியும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**சு.கணேசலிங்கம் ஐயா,**
ஆலய புனருத்தாரண சபை தலைவரும்,
ஆலய சிவாச்சாரியாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# செஞ்சொற் செல்வரின்
# ஆசிச் செய்தி



தெல்லிப்பழை கொல்லங்கலட்டிக் கிராமத்தில் கடந்த 150 ஆண்டுகளாகச் சிறந்த அறிவாலயமாக விளங்கும் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் சிறப்புக் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகின்றேன். மிகப் பழைமை வாய்ந்த இப் பாடசாலை பல அறிஞர்களது கல்விக்கு அத்திவாரமாக விளங்கியது. அனைவரும் அறிந்ததே. இப் பாடசாலையில் கற்றவர்கள் புகழ் பூத்த மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக, பேராசிரியர்களாக, வழக்கறிஞர்களாகத் திகழ்வதை யாம் அறிவோம். நல்லைநகர் நாவலர் பெருமான் சுதேசிகளே கிராமம் தோறும் சைவத் தமிழ் பாடசாலைகளை ஆரம்பியுங்கள் என விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க உருவாக்கப்பட்டதே இப் பாடசாலை. தெல்லிப்பழை பகுதியிலுள்ள வயதில் மூத்த சைவப் பாடசாலை என்ற பெருமை இப் பாடசாலையையே சாரும். இப் பாடசாலையில் அதிபர். ஆசிரியர்களாக விளங்கியவர்கள் மிக உயர்ந்த பணியாற்றியுள்ளனர். போரின் அனர்த்தங்களாலும் இடப் பெயர்வுகளாலும் இப் பாடசாலைக்கு ஏற்பட்ட இடையூறுகள் வர்ணிக்க முடியாது. எனினும் மீண்டும் தனது சொந்த இடத்தில் இப் பாடசாலை பொலிவுற்று வருவது பாராட்டுக்குரியது.

150 ஆவது ஆண்டைக் கொண்டாடும் கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயம் சூரிய சந்திரர் உள்ளவரை நிலைபெற வேண்டும். இப்பாடசாலையின் பெறுபேறுகள் எதிர்காலத்தில் வெற்றிகரமாக அமைய வேண்டும். இப் பாடசாலையின் இன்றைய அதிபர் திரு. நா.பிரியந்தன் அவர்களின் ஆற்றுப்படுத்தலில் பாடசாலைச் சமூகம் ஒருங்கிணைந்து மேன்மைபெற எல்லாம். வல்ல துர்க்கை அம்மனை பிரார்த்தித்து எனது நல்லாசிகளை வழங்குகின்றேன்.

நன்றி

**கலாநிதி. ஆறு.திருமுருகன்,**
**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வடமாகாண ஆளுநரின் வாழ்த்துச் செய்தி



நாவலரின் பணியைத் தொடர விரும்பியவர்களில் ஒருவரான திரு.ஆறுமுகம் வேலுப்பிள்ளை அவர்களால், கொல்லங்கலட்டியில் மாருதப்புரவல்லியினால் முதல் முதலாக நிறுவப்பட்ட பிள்ளையார் கோவிலின் சூழலில் 1869ஆம் ஆண்டு அவருக்குரிய அரைப் பரப்பு காணியில் கொட்டில் அமைத்து 40 பிள்ளைகளுடனும் 3 ஆசிரியர்களுடனும் சைவ வித்தியாசாலையாக ஆரம்பமாகிய இந்த பாடசாலை இன்று பெரு விருட்சமாக வளர்ந்து தனது 150ஆம் ஆண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில், திரு.வேலுப்பிள்ளையையும் அவருக்கு உறுதுணையாக இருந்து சேவை மனப்பாங்குடன் பணியாற்றிய ஆசிரியர்களையும் நினைவில் நிறுத்துவது எங்களுடைய கடமையாகும்.

வளர்ந்தவர்களின் நலன் கருதி இரவு வேளைகளில் புராண படிப்பு நடத்தி வந்தார்கள். 1872ஆம் ஆண்டு அரச அங்கீகாரம் பெறும் வரை, ஊரவர் வழங்கிய சிறு தொகைப் பணத்துடன் இவர்கள் ஆற்றிய தொண்டு மகத்தானது. 1872இல் இரு மொழி பாடசாலையான அரச அங்கீகாரம் பெற்று 1982இல் தமிழ் பாடசாலையாக மாற்றம் அடைந்தது.

1962இல் அரசினர் வித்தியாசாலையாக உருமாறிய பாடசாலை பல சாவால்களுக்கு மத்தியில் இன்று 150ஆம் ஆண்டை சிறப்பாக கொண்டாடுகின்றது. பாடசாலையின் வளர்ச்சியானது பாரிய வளர்ச்சியாகக் காணப்படுகின்றது.

கல்வியில் சிறந்த நிலையை மாணவர்கள் அடைய அரும்பாடுபட்டு உழைத்த அனைவரின் சேவை மேலும் தொடர வாழ்த்துகின்றேன்.

**திரு.ஜீவன் தியாகராஜா,**
ஆளுநர்,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயத்தின் 150 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மலரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கொல்லங்கலட்டியில் மாருதப்புரவீகவல்லியினால் முதன்முதலில் நிறுவப்பட்ட பிள்ளையார் ஆலய சூழலில் 1869 ஆம் ஆண்டு ஆலயத்திற்கு கிழக்குப்புறமாக கொட்டில் அமைத்து 40 பிள்ளைகளுடனும் மூன்று ஆசிரியர்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையாக அறிய முடிகிறது.

சைவமும் தமிழும் என்னும் உணர்வுடன் ஆரம்பிக்கப்பட்ட சைவத்தமிழ் வித்தியாலயம் தமிழ் மொழி, வடமொழி, தமிழ் இலக்கியம், சைவ சமயம், கணிதம், வரலாறு ஆகிய பாடங்கள் சிறப்பாக போதிக்கப்பட்டு வந்தமையும் மாலைவேளைகளில் வளர்ந்தோர் நலன் கருதி புராண படிப்பு நடைபெற்று வந்தமையும் குறிப்பிடத்தக்கது. 1872 ஆம் ஆண்டு அரசின் அங்கீகாரம் பெறப்பட்ட தெல்லிப்பளை கோவிற்பற்றில் நிறுவப்பட்ட முதல் பாடசாலை என்ற பெருமைக்குரிய பாடசாலையாக அறிய முடிகிறது.

**"எண் என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும்**
**கண் என்ப வாழும் உயிர்க்கு"**

என்னும் வள்ளுவனின் வாக்குக்கு அமைய இவ்வுலகில் வாழும் உயிர்களுக்கு கல்வி இன்றியமையாதது என்பதனை போற்றி பெருமைக்குரிய பாடசாலையாக திரு ஆ. வேலுப்பிள்ளை அவர்களின் பெரு முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை தரம் 05 வரைக்குமான ஆரம்ப பாடசாலையாக தனது கல்விச் செயற்பாட்டினை மேற்கொண்டு ஆரம்பக் கல்விச் செயற்பாடுகள் மட்டுமன்றி இணைப்பாடவிதானங்களிலும் சிறப்பான அடைவு மட்டத்தினை பெற்று வரும் இப்பாடசாலை மென்மேலும் வளர்ச்சியடைய திறம்பட நடாத்திக் கொண்டிருக்கும் அதிபர் திரு நா.பிரியந்தன் மற்றும் மலர்க்குழுவினரை பாராட்டி மலரும் 150 வது நூற்றாண்டு மலர் சிறப்புடன் வெளிவர எல்லாம் வல்ல கொல்லங்கலட்டி விநாயகப்பெருமானை வேண்டி என் நல்வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கின்றேன்.

நன்றி

**திரு.அம்பலவாணர் சிவபாலசுந்தரன்,**
**அரசாங்க அதிபர்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வலி வடக்கு பிரதேச செயலாளர் வாழ்த்துச் செய்தி



கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயத்தின் 150ஆவது ஆண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். சைவம், தமிழ், கலை, இலக்கியம், பண்பாடு ஆகிய சிறப்புகளை தன்னகத்தே கொண்டு விளங்கும் தெல்லிப்பளைப் பிரதேசத்தின் கொல்லங்கலட்டி கிராம அலுவலர் பிரிவில் சைவம் தமிழ் ஆகிய இரண்டையும் தாரக மந்திரமாகக் கொண்டு ஒழுக்கம் உள்ள மாணவர் சமூகத்தை உருவாக்கிய நிலையமாக இப்பாடசாலை விளங்குகின்றது.

150 வருடங்களுக்கு முன்னரே கல்வியின் தேவையறிந்த காலம் சென்ற திரு.ஆ வேலுப்பிள்ளை உபாத்தியாரால் ஸ்தாபிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று வரை பல கல்விமான்களை உருவாக்கிய பெருமைக்குரியது. கல்விச் செயற்பாடுகளில் மட்டுமன்றி இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் இப்பாடசாலை முன்னிலையில் திகழ்வது வரவேற்கத்தக்க விடயமாகும். கடந்த 30 வருட கால யுத்தம் மற்றும் இடப்பெயர்வுகள் காரணமாக வடக்கின் கல்வி நிலையில் தளம்பல் நிலை ஏற்பட்டாலும் மீள்குடியேற்றத்தின் பின் இழந்த கல்வியினை சீர் செய்வதற்காக நாம் எல்லோரும் பாடுபட வேண்டும்.

எழுத்தறிவு இல்லாத ஒருவனுக்கு கல்வி புகட்டுவது என்பது இறைவனுக்குச் செய்யும் தொண்டிலும் மேலானது. அதேபோன்று “இளமையில் கல்வி சிலையில் எழுத்து” என்ற கூற்றிற்கு ஏற்றவாறு ஆரம்பக் கல்வியென்னும் அடித்தளம் உறுதியாக இடப்படவேண்டும் என்பதோடு ஒரு மாணவனின் ஆளுமை விருத்தி, பண்பாடு போன்றவை பாடசாலையிலேயே வளர்க்கப்பட வேண்டும். இன்றைய கால சூழலுக்கு ஏற்றவாறு மாணவர்களை நல்வழிப்படுத்துவது பாடசாலைச் சமூகத்தின் கடமையாகும். ஒரு மாணவன் கல்வியிலே உயர்ந்த பெறுபேற்றைப் பெற்ற போது அவனை எப்படி பாராட்டுகிறோமோ அந்த அளவுக்கு அவன் நல்லொழுக்கமுள்ள மாணவன் என்று பெயர் நிலைத்திருக்கக் கூடிய ஒருவராக மாற்றுவது பாடசாலைச் சமூகத்தின் கடமையாகும்.

எனவே பண்பாடு நிறைந்த கல்வியலாளர்களை உருவாக்கிய கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலய அன்னையின் கல்வி செயற்பாடுகள் மென்மேலும் வளர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதோடு 150ஆவது ஆண்டு மலர் சிறப்பாக வெளிவரவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைக் கூறி நிற்கின்றேன்

**திரு. சண்முகராசா சிவஸ்ரீ,**
**பிரதேச செயலாளர்,**
பிரதேச செயலகம், தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச்செய்தி



யா/கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயத்தின் 150ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலே இந்து மதத்தினைப் பரப்பும் நோக்கிலே சமய ஆர்வலர்கள் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் சமயத்தினைப் பரப்புவதற்கு பாடசாலைகளை அமைத்து அதனூடாக சமயம் சார்ந்த போதனைகளைச் செய்து இந்து மதத்தினைப் பரப்பும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். அந்த வகையில் 1869 ஆம் ஆண்டு கொல்லங்கலட்டிப் பிள்ளையார் கோவில் சூழலில் திரு ஆறுமுகம் வேலுப்பிள்ளை அவர்கள் சிறு கொட்டில் அமைத்து 40 மாணவர்களுடனும் 03 ஆசிரியர்களுடனும் சைவ வித்தியாசாலையினை நிறுவினார். இவரே பாடசாலையின் தலைமை ஆசிரியராக இருந்து பாடசாலையை வழிநடத்தினார். ஆரம்ப காலங்களில் வறுமைக்கோட்டின் கீழிருந்த விவசாயிகளின் பிள்ளைகள் கட்டணங்கள் ஏதும் இன்றி கல்வியினைக் கற்பதற்கு இப் பாடசாலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.

இரு மொழிப் பாடசாலையாக இருந்து வந்த இப் பாடசாலை காலப் போக்கில் தமிழ் மொழி மூலப் பாடசாலையாக மாற்றப்பட்டிருந்தது. சிறு கொட்டிலில் அமைக்கப்பட்ட பாடசாலை பிற்பட்ட காலங்களில் பெரிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு சிரேஸ்ட பாடசாலையாக தராதர வகுப்பு வரை நடாத்தப்பட்டு வந்தது. அதன் பிரகாரம் 1934 ஆம் ஆண்டில் முதன் முறையாக தராதர பரீட்சைக்குத் தோற்றியவர்களில் ஒரு மாணவனும் இரு மாணவிகளும் சித்தியெய்தினர். இவ்வாறு இயங்கி வந்த பாடசாலையானது 1962 இல் அரசினால் பொறுப்பேற்கப்பட்டு மேலும் வளர்ச்சியடையத் தொடங்கியது. இத்தகைய வளர்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருந்த பாடசாலையானது 1990 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளினால் இடப்பெயர்வுகள் ஏற்பட்டு வேறு பாடசாலைகளுடன் சேர்ந்து இயங்கி வந்தது. 2011 இல் மக்கள் குடியேற அனுமதிக்கப்பட்டதன் பின்னர் இப் பாடசாலையும் தனது சொந்தக் கட்டடத்தில் மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு 2013 இல் மீண்டும். சிறப்பாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது

பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் 2019 இல் புலமைப்பரிசில் பரீட்சையில் முதல் தடவையாக இரண்டு மாணவர்கள் சித்தியெய்தினர் தொடர்ந்து 2021 இல் ஒரு மாணவரும் இப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றிருந்தார். இத்தகைய பெறு பேறுகள் இப் பாடசாலையின் கல்வி வளர்ச்சியினை காட்டி நிற்கின்றது. மாணவர்கள் கல்வியில் மட்டுமன்றி புத்தாக்கப்போட்டி, விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகள் போன்றவற்றிலும் மிளிர்கின்றமை மாணவர்கள் பல்துறைசார் திறமைகளுடன் பயின்றுவருகின்றமை புலனாகின்றது.

150ஆவது ஆண்டு நிறைவு விழாவினை ஒழுங்கமைப்பு செய்யும் விழாக் குழுவினர் மற்றும் மலர் வெளியீட்டு பணியினை ஆற்றும் குழுவினர் அனைவரையும் பாராட்டுவதுடன் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறவும் இறையாசியை வேண்டி பாராட்டி மனதார வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கெள்கின்றேன்.

**அ. உமாமகேஸ்வரன்,**
செயலாளர்,
வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார
அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணத்தின் பழம் பெரும் வரலாற்றினைக் கொண்ட பாடசாலைகளில் ஒன்றான கொல்லங் கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பாடசாலையானது சைவமும் தமிழும் எக்காலமும் நிலைத்திருக்க விழுமிய மேம்பாட்டுடன் இணைந்த சிறந்த கல்வியை வழங்குவதில் தொடந்து பணியாற்றி வருகின்றமை யாவரும் அறிந்த பேருண்மை. இப்பாடசாலை மேன்மேலும் வளர்ச்சி பெற உழைக்கின்ற அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயமானது மாணவர்களைச் சிறந்த நற்பிரஜைகளாக உருவாக்குவதில் செயற்றிறன் மிக்க சேவையினை வழங்கி வருகின்றது. இந்த வகையில் பாடசாலைச் சமூகத்தினது சிறப்பான சிந்தனையில் இந்நூல் வெளிவருவது. வரவேற்கத்தக்க விடயமாகும்.

இலத்திரனியல் ஊடகங்கள் ஆட்சிபுரியும் இன்றைய சூழலில் பழம் பெரும் பண்பாடு கொண்ட பாடசாலையிலிருந்து அச்சு ஊடகமாக பயன்மிகு தகவல்களைத் தாங்கிய வகையில் வெளிவரும் இந்நூல் சிறப்புற அமைய வாழ்த்தி நிற்கின்றேன்.

**திரு. தி. ஜோண் குயின்ரலஸ்,**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடமாகாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



யா/ கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயம் 150 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதை முன்னிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். ஆ.வேலுப்பிள்ளை ஆசிரியரினால் 1869 இல் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அப்போது இப்பாடசாலை நாற்பது மாணவர்களையும், மூன்று ஆசிரியர்களையும் கொண்டிருந்ததாக அறியமுடிகின்றது. பின்னர் 1872 இல் அரசினர் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டது. தெல்லிப்பழைக் கோவிற்பற்றில் ஆரம்பிக்கப்பட்ட முதற் சைவப்பாடசாலை என்ற பெருமையும் இப் பாடசாலைக்கே உரியது.

1950 இல் இப்பாடசாலை பெருவளர்ச்சி அடைந்த காலப்பகுதி ஆகும். நெசவு, சங்கீதம் முதலிய பாடங்களைக் கற்பிப்பதற்கான அங்கீகாரமும் இப்பாடசாலைக்குக் கிடைத்தது. அது மட்டுமன்றி மாணவர் எண்ணிக்கை முந்நூறு ஆகவும் ஆசிரியர் எண்ணிக்கை பத்தாகவும் அதிகரித்தது.

இவ்வாறு வளர்ச்சி பெற்று வந்த இப்பாடசாலை 1990களில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளுக்குப் பின் சற்றுத்தளர்ச்சியை எதிர் கொள்ளத் தொடங்கியது. 1972 ஆம் ஆண்டிலே நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிய இப்பாடசாலை இந்த ஆண்டு 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவையும் கொண்டாடுகிறது.

இப்பாடசாலையில் கற்ற மாணவர்கள் இன்று பல தொழில்களிலும் புகழ்பெற்றவர்களாகச் சமூகத்தில் நல்ல நிலையில் உள்ளார்கள் என்பதையும் நான் அறிவேன். தற்போது அதிபராகக் கடமையாற்றும் திரு. நா.பிரியந்தன் பாடசாலையை முன்னேற்றப் பல வழிகளிலும் முயற்சித்து வருகிறார்.

பாடசாலைச் சமூகத்தினரின் விருப்பமும், பங்களிப்பும் மேலோங்கி வலிகாமத்தின் மிகப்பழைய பாடசாலை மீண்டும் பெரு வளர்ச்சி பெறவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

**பொ. ரவிச்சந்திரன்,**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



வரலாற்றுச் சிறப்பு மிக்க கொல்லங்கலட்டிக் கிராமத்தில் அமைந்துள்ள யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயத்தை ஸ்தாபித்த அமரர் ஆ.வேலுப்பிள்ளை அவர்களின் உயர்ந்த சிந்தையின் நிறைவாக இப்பாடசாலை 150 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் அளவிற்கு வளர்ச்சி பெற்றுள்ளதையிட்டு அகமகிழ்வடைகின்றேன். யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயமானது ஆரம்பகாலத்தி லிருந்து படிமுறையான வளர்ச்சிகளை எய்துவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றும் அதிபர்,ஆசிரியர்களின் பணிகள் பாராட்டுதற்குரியது. தற்போது அதிபராகக் கடமையாற்றும் திரு.நா.பிரியந்தன் அவர்களின் தன்னார்வத்துடனான,ஆளுமைமிக்க சிந்தனையின் வெளிப்பாட்டி னால் இப்பாடசாலை மாணவர்கள் கல்வி,விளையாட்டு, இணைபாட விதானச் செயற்பாடுகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுவரு கின்றமை பாராட்டுதற்குரியது. இப்பாடசாலை பல நூறு ஆண்டுகள் தமது சமூகத்திற்குச் சேவையாற்றவும் ஒழுக்கம் சிந்தனை நிறைந்த சமூகத்தை உருவாக்கவும் வெளியிடப்படவுள்ள மலர் அழகாக மலர்ந்து மணம் பரப்பவும் பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து எதனையும் தூரநோக்குடன் தீர்மானித்து செயற்படுத்தும் அதிபரின் பணிசிறக்கவும் பெற்றோர்கள்,பழையமாணவர்கள்,நலன் விரும்பிகள் மேலும் தமது பணிகளை வழங்கி பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவவும் இறையாசியை வேண்டி வாழ்த்திநிற்கின்றேன்.

**திரு.வே.அரசகேசரி**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
தெல்லிப்பழைக் கோட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அதிபரின் உள்ளத்திலிருந்து...!



சைவத்தின் மீதும் தமிழின் மீதும் கொண்ட பற்றின் காரணமாகவும் தமது ஊர்ச்சிறார்களுக்கு தானத்தில் சிறந்த தானமாக விளங்கும் கல்வித் தானத்தைத் வழங்க வேண்டும் என்ற உயரிய நோக்கத் திற்காகவும் அமரர்.ஆ.வேலுப்பிள்ளை அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயம் 150ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதையிட்டு மட்டற்ற மகிழ்வடைகின்றேன். நான் இப்பாடசாலையில் அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்கும் போது முதலாவதாக இப்பாடசாலையைத் தெல்லிப்பழைக் கோட்டத்தின் முன்னணி ஆரம்பப் பாடசாலைகளில் ஒன்றாக மாற்ற வேண்டும், அடுத்து இப்பாடசாலையின் புகழை அகிலமெங்கும் பரவச் செய்வதோடு மட்டுமல்லாது அப்புகழைத் தொடர்ந்து பேணவேண்டும் என்ற நோக்கங்களுடனேயே பொறுப்பேற்றுக் கொண்டேன். எனது இந்நோக்கங்கள் நிறைவேற்றுவதற்குப் பலமுயற்சிகளை மேற் கொண்டேன். இந்நோக்கங்கள் நிறைவேறுவதற்கு வீரகத்தி விநாயகப் பெருமானது அருளும், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் போன்றோரின் பங்களிப்புகளும் காரணமாவதுடன் மிகவும் முக்கியமாக பக்கபலமாக இருப்பவர்கள் பழையமாணவர்கள் என்று கூறினால் அது மிகையாகாது. தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் வெற்றியீட்டிப் பெருமை சேர்த்துள்ளனர். வித்தியாலய அன்னையின் சாதனைகளைப் பறைசாற்றும் வகையில் நூற்று ஐம்பதாவது ஆண்டு நிறைவுவிழாமலர் வெளிவருவது பாராட்டுதற்குரியதாகும். இப்பாடசாலையில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களும் தரமானகல்வியைப் பெற்று யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ் அன்னையின் புகழை அகில மெங்கும் பரப்பவேண்டும் என்பதுடன் வித்தியாலய அன்னையின் வளர்ச்சிக்காக என்னுடன் இணைந்து செயற்படும் அனைவரையும் வாழ்த்துகிறேன். மேலும் இப்பாடசாலையை வளர்ச்சியடையச் செய்வதற்கு அனைவரும் ஒற்றுமையுடன் செயற்படவேண்டும் என இறைவனை வேண்டி வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

**திரு. நா. பிரியந்தன்,**
அதிபர்,
யா/கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளரின் வாழ்த்துச்செய்தி



ஈழத்திருநாட்டின் வடபால் வளங்கொழிக்கும் வலிகாமம் வடக்கின் கல்விச்செயற்பாடுகளில் மீள்குடியேற்றத்தின் பின்னரும் தனக்கென ஒரு இடம் பிடித்து மிளிர்கின்ற யா/கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயம் நூற்று ஐம்பதாவது ஆண்டு நிறைவை கொண்டாடுவதையிட்டு பேருவகை அடைவதோடு இப்பாடசாலைச் சமூகத்தின் வளர்ச்சிக்கு வித்திட்ட அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு கல்வி மட்டும் கை கொடுக்காது என்பதுடன் இணைபாடவிதானச் செயற்பாடுகளும் உறுதுணையாக அமையப்பெற வேண்டும் என்பது காலத்தின் தேவையாகும். அந்தவகையில் யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயம் தனது கல்விச்செயற்பாடுகளில் மட்டுமல்லாது இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறந்து விளங்குகின்றது.

செல்வங்களுள் உயர்வானது கல்விச்செல்வம். அத்தகு கல்வியை திறம்பட ஊட்டி பல்லாயிரக்கணக்கான ஆற்றலும், திறமையும், குணச்சிறப்பும் மிக்க மாணவர்களை சிறு பராயத்திலேயே உருவாக்கி, வீரகத்தி விநாயகரின் அருளாசியுடன் இன்று நூற்று ஐம்பதாவது ஆண்டு விழாக் காணும் இவ்வித்தியாலயத்தினைப் பாராட்டாமலிருக்க முடியாது.

ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் கோடி புண்ணியம் பெறும் என்கிறார் பாரதியார். ஆயிரம் ஆயிரமாக பிள்ளைகள் இங்கே ஆரம்ப கல்வியினை பயின்று கல்வி மான்களாக வெளியேறியுள்ளனர் என்றால் கொல்லங்கலட்டி சைவத்தமிழ் பாடசாலையும் ஒரு புண்ணியஸ் தானமே எனக்குறிப்பிடல் மிகையாகாது.

நூற்று ஐம்பதாவது ஆண்டு விழாவை முன்னிட்டு வெளிவருகின்ற இம் மலர் வெளியீடானது சிறப்பாக நடைபெறவும், இம்மலர் அனைவருக்கும் ஒரு பொக்கிசமாகத் திகழவும், சமூதாயம் பயன்பெற இது போன்ற நூல்கள் இன்னும் இன்னும் வெளிவர வேண்டும் என்றும் நூற்று ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் காணும் இவ்வேளையில் மனதார வாழ்த்துகின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்,**
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறப்போடு வளர்க
# எமது பாடசாலை



எமது நாட்டு வரலாற்றிலே 19ஆம் நூற்றாண்டிலே ஆங்கிலத்திற்கும் கிறிஸ்தவத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட காலத்திலே சைவத்தையும் தமிழையும் வளர்க்க நாவலர் பெருமான் பெரும்பணி ஆற்றினார். அதனைத் தொடர்ந்து பலர் வடக்கில் பல இடங்களில் கல்வி நிலையங்களை நிறுவினர். அந்த வகையில் தமிழையும், சைவத்தையும் பேணி வளர்க்க ஸ்ரீமான் ஆ.வேலுப்பிள்ளை வாத்தியார் அவர்கள் தம்மை அர்ப்பணித்து அதற்கேற்ற சூழ்நிலையில் மாணவர்களைப் பயில வேண்டுமென விரும்பி மாருதப்புரவீகவல்லியினால் அமைக்கப் பெற்ற வீரகத்தி பிள்ளையார் கோயில் முன்பாக பாடசாலையை ஆரம்பித்தார். இங்கு தமிழ் மொழி, வடமொழி, தமிழ் இலக்கணம்,கணிதம்,வரலாறு என்பன கற்பிக்கப்பட்டன. அத்துடன் புராண படனப் படிப்பும் நடாத்தப்பட்டது. இக்காலத்திலே வேலுப்பிள்ளை உபாத்தியார் அவர்கள் "சுபத்திரை விலாசம்" எனும் கவிதை நாடகத்தை எழுதி வெளியிட்டார். அரசின் உதவியோ, வள்ளல்களின் நன்கொடையோ இன்றி இப்பாடசாலையை நிறுவி நடாத்தி வந்தார்.

1915 ஆம் வருடம் ஸ்ரீமான் ஆ. வேலுப்பிள்ளை உபாத்தியாயர் அவர்களின் மறைவுக்குப் பின்னர் அவரின் மகன் திரு.வே.சிற்றம்பல உபாத்தியாயர் அவர்கள் முகாமையாளராகப் பொறுப்பேற்ற அதே நேரம் மகாஜாக் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகவும் கடமையாற்றினார். சிற்றம்பலம் உபாத்தியாயரின் காலத்திலேயே பாடசாலை பல இன்னல்களைச் சந்தித்தது நீதிமன்றம் செல்லும் நிலையிலும் சாதகமான முடிவைப் பெற்றுக்கொண்டு பாடசாலை பல துறைகளில் முன்னேற்றம் அடைந்தது. தம் முன்னோர்கள் அளித்த அரும் செல்வத்தைக் காப்பாற்றவும் அரும் பணி ஆற்றினார்.

இக்காலத்திலே தான் நானும் எனது ஆரம்பக் கல்வியை பயின்று வந்தேன். நவராத்திரி விழாக்காலங்களிலும் வீரகத்தி விநாயகருக்கு 10 நாட்களும் எமது பாடசாலையின் விழாவாகவே நடைபெற்றது.இறுதி நாள் விஜயதசமி அன்று விநாயகர் ஆலயத்தில் குருமார், ஆசிரியர்கள் இணைந்து வித்தியாரம்பம் நடைபெறும். பின்னர் பிள்ளைகள் எல்லோரும் மேள வாத்தியத்துடன் பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு வித்தியாரம்பம் நிகழ்வு இடம்பெறும். இக்காலத்தில் திரு. ப.சிவானந்த ஐயர் தலைமை ஆசிரியராகக் கடமை ஆற்றினார். தற்போது ஆலயமும் பாடசாலையும் நவராத்திரி விழாவை வேறு வேறாக நடாத்தி வருகின்றனர். இருப்பினும் ஆலயத்தில் எட்டாம் நாள் பாடசாலை விழாவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிற்றம்பல உபாத்தியார் 1962ஆம் ஆண்டு அரசாங்கம் பொறுப்பேற்கும் வரை பாடசாலையைத் திறம்பட நடாத்திவந்தார். பின்னர் கல்லூரியின் தனது ஆசிரியர் பணியை தொடர்ந்து 1967ஆம் வருடம் வைகாசி மாதம் வீரகத்தி விநாயகரின் திருவிழா முடிவுறும் நாளில் இயற்கை எய்தினார்.

பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றபின் பல அதிபர்கள் ஆசிரியர்கள் கடமை புரிந்தனர். 1971 ஆம் வருடம் திரு.வ.மகாலிங்கம் அவர்கள் அதிபராக கடமையாற்றிய காலத்தில் பாடசாலை தனது நூற்றாண்டு விழாவை கொண்டாடி மகிழ்ந்தது. பின்னர் சிலகாலம் செல்ல நாட்டில் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக பல பாடசாலைகள் இடம்பெயர்ந்தன. சில பாடசாலைகள் மூடப்பட்டன. எமது பாடசாலையும் மூடப்பட்டது.

பின்னர் நிறுவுநர் அவர்களின் சந்ததியினரும் ஊர் மக்களும் மேற்கொண்ட முயற்சியின் மூலம் பாடசாலை புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. 2012ஆம் வருடம் அதிபர் ஒருவர் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட போதும் மாணவர் இன்மையால் பாடசாலை இயங்கவில்லை. பின்னர் 2013ஆம் வருடம் அரசாங்கம் செல்வி.த.வசந்தராணி என்பவரை அதிபராக நியமித்து அவரின் விடாமுயற்சியாலும் நிறுவுநர் குடும்பம் அளித்த ஆதரவினாலும் பாடசாலை இயங்கத் தொடங்கியது. மெல்ல மெல்ல மாணவர்கள் அதிகரித்தனர். அதற்கு ஏதுவாக முன்பள்ளியும் பாடசாலை வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்குரிய ஆசிரியர்களுக்கு நிறுவுநர் குடும்பத்தினர் வேதனம் வழங்கி அனுசரணை செய்கின்றனர். பாடசாலைக்கு தேவையான கட்டுமானங்களை கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியத்தினர் (லண்டன், கனடா) செய்துள்ளனர். தளபாடங்கள் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் அன்பளிப்புச் செய்கின்றனர்.


செல்வி.த.வசந்தராணி அவர்களுக்குப் பின் அதிபராகப் பொறுப்பேற்ற திரு.நாகேஸ்வரன் பிரியந்தன் அவர்களும் பாடசாலை முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு சிறப்புமிகு அதிபராக விருது பெற்றுள்ளார். இவ்வாறு அதிபர் ஆசிரியர்கள் எமது பாடசாலைக்கு கிடைத்தது வீரகத்தி விநாயகப் பெருமானின் ஆசியும் நிறுவுநர் முகாமையாளர் அவர்களின் ஆசியும் ஊர் மக்களின் வேண்டுதலும் ஆகும்.

இன்று பாடசாலை தனது 150 வது நிறுவுனர் தினத்தைக் கொண்டாடி மகிழ்கின்றது மென்மேலும் இப்பாடசாலை உயர்தர வகுப்புகளைக் கொண்ட சிறந்த பாடசாலையாக மலர வேண்டுமென வீரகத்தி விநாயகரை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**சி.பாஸ்கரலிங்கம்,**
**நிறுவனர் அவர்களின் பேரன்**
**பழைய மாணவன்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# பழைய மாணவர் சங்கப் போசகரின் வாழ்த்துச் செய்தி



நான் எனது கல்வியை ஆரம்பித்ததும் எனது பாட்டனாரால் ஆரம்பிக்கபட்டதுமான இப்பாட சாலை இன்று 150 ஆம் ஆண்டினில் காலடி எடுத்து வைத்துள்ளது என்பதனை இட்டு மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கின்றேன். சைவமும் தமிழும் என்கின்ற கொள்கையுடன் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக ஒரு அரைப் பரப்புக் காணியை வாங்கி மூன்று ஆசிரியர்களும் பத்து மாணவர்களுமாக ஆரம்பிக்கப்பட்ட இப் பாட சாலையானது மெல்ல மெல்ல வளர்ச்சியடைந்தது. எனது தந்தையா ரான திரு.வே.சிற்றம்பலம் ஆசிரியர் அவர்களால் 1930ம்ஆண்டு பொறுப்பேற்கப்பட்டதன் பின்னர் ஆசிரியர்களின் தொகை 10 ஆகவும் மாணவர்களின் தொகை 300 ஆகவும் உயர்ந்தது. அத்துடன் நெசவு, சங்கீதம் போன்ற பாடங்களும் இணைத்துக் கொள்ளப்பட்டன. திரு.வே.சிற்றம்பலம் ஆசிரியர் முகாமையாளராய் பணியாற்றியகாலம் ஓர் பொற்காலம் என்று பாடசாலையின் முன்னாள் தலைமை ஆசிரியர் திரு.தனபாலசிங்கம் அவர்கள் கொழுந்து என்கின்ற மலரில் குறிப்பிட் டுள்ளார் என்பது நினைவு கூரத்தக்கது.

எனது பாட்டனார் ஸ்ரீமான்.வேலுப்பிள்ளை அவர்களின் மறைவிற்குப்பின் எனது பெரியப்பாவினாலும் அவரைத் தொடர்ந்து எனது தந்தையினாலும், 1872ம் ஆண்டு இப்பாடசாலையை அரசு பொறுப்பேற்கும் வரை எமது மூதாதையினராலும் தொடர்ந்து 90 வருடங்களாக நிர்வகித்து வந்தமையும் எதுவித வேதனமும் எடுக்காமல் ஊர் மக்களுக்குக் கல்வி அறிவு கிடைக்கவேண்டும் என்கின்ற ஒரே நோக்கத்திற்காக சேவையாற்றியமையும் நினைவு கூரத்தக்கது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 1990ஆம் ஆண்டு கிராம இடப்பெயர்வுடன் பாடசாலையும் இடம் பெயர்ந்து இயங்கிய நிலையில் தொடர் இடப்பெயர்வு காரணமாக இயங்க முடி யாத ஓர் நிலைமையில் 1994ஆம் ஆண்டு பாடசாலை மூடப்பட்டது.

மீள்குடியேற்றத்தின் பின்னர் 2011ஆம் ஆண்டு பாடசாலை மீளவும் ஆரம்பிக்கபட்டது. இரு மாணவர்களோடு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையை வளர்த்தெடுப்பதில் பெரும் சிரமங்களை எதிர் கொள்ளவேண்டி இருந்தன. அன்றைய அதிபராக பொறுப்பேற்றிருந்த செல்வி.த.வசந்தராணி அவர்களுடன் நேரில் வந்து சந்தித்துப் பாடசாலையின் வளர்ச்சி குறித்து என்னால் முடிந்த அனைத்து உதவி களையும் உங்களுக்கு வழங்குவேன் என்றும் எப்படியாவது பாட சாலையை மீள்எழுச்சி பெறச் செய்ய வேண்டும் எனவும் வேண்டிக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அதிபரின் பெருமுயற்சியாலும் நிறுவுனர் குடும்பத்தினர், ஒன்றியங்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் என அனைவரது கூட்டு முயற்சியாலும் இன்று இப் பாடசாலை நல்லமுறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. செல்வி.த.வசந்தராணி அதிபர் வீடு வீடாகச் சென்று மாணவர்களைச் சேர்த்திருந்தார். அவரின் கடுமையான உழைப்பே இன்றைய நிலைக்கு வித்திட்டதென்றால் அது மிகையாகாது. அதனைத் தொடர்ந்து அதிபராக பொறுப்பேற்ற திரு.நாகேஸ்வரன் பிரியந்தன் அவர்களும் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரிதும் செயலாற்றிக் கொண்டிருக்கின்றார். எம்முடன் ஓர் குடும்ப உறுப்பினர் போல் பழகுவதுடன் பாடசாலை தவிர்ந்து ஆலயம், ஊர் என அனைத்து விடயங்களிலும் தன்னை இணைத்துக் கொண்டு செயல்படுவது மகிழ்வினைத் தருகின்றது.


பாடசாலைக்கு, அதிபரின் தொடர் சேவையினைப் பாராட்டுவதுடன் நிகழவிருக்கும் 150ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு சிறப்புடன் நிகழ்வுற வாழ்த்துவதுடன் எல்லாம் வல்ல ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின் அருளும் கிடைக்க வேண்டிக்கொள்கிறேன்.

நன்றி

**சி.கமலக்கண்ணன்,**
**நிறுவுனர் குடும்பத்தினர்,**
**நிர்வாக இயக்குனர் அன்னம்மா**
**அறக்கட்டளை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின் வாழ்த்துச் செய்தி



ஆழிசூழ் அமைவிடமாம் ஈழமணித் திருநாட்டில் சைவமும் தமிழும் சந்ததியாய் வாழும் யாழ் பாடிப் புகழ் பெற்ற யாழ்ப்பாணத்தின் வடபால் வேளாண் தொழில் துலங்கும் வியர்வைகள் செல்வமாகும் கொல்லங்கலட்டி மண்ணில் கணபதியின் காவலோடு சைவத்தின் பெருமையை பறைசாற்றியபடி தன்னை நாடிவரும் குழந்தைகளுக்கு அகரத்தைத் தொடக்கிப் பாட்டோடு கதைகளையும் பண்பாட்டு நிலைகளையும், விளையாட்டு விதிகளையும் ஒருங்கேபுகுத்திப் பலரையும் அறிஞர்களாயும் ஆன்றோர் களாயும் உருவாக்கி அதன் பெருமையைத் தன்னகத்தே மறைத்து நிற்கும் தாயாம் யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயம் 150ஆவது அகவை காண்பது எமக்கு மகிழ்வைத் தருகின்றது.

என்னுடைய வாழ்வில் எத்தனை பள்ளிகளில் கற்றாலும் ஆரம்பப்பள்ளி நினைவுகள் பசுமரத்தாணி போல் உள்ளத்தே பதிவது உண்மை. அந்த வகையில் இப்பாடசாலையின் புகழை அறிகையிலே இந்த பாடசாலையின் சூழலும், கற்பித்தலும் எனக்குக் கிடைக்க வில்லையே என்ற கவலை உள்ளத்தினோரம் நெருடலைத் தருகின்றது. இதனாலேயோ என்னவோ இப்பாடசாலையில் எனது பிள்ளைகள் இருவரதும் ஆரம்பக் கல்வியைத் தொடரவைத்ததன் மூலம் இத்தாய்க்கு உள்ளன்போடு சேவையாற்றும் வாய்ப்பை இறைவன் எனக்கு அருளியுள் ளார். எனது இச்சேவையைக் காலம் காலமாய்த் தொடர்வதற்கு என் பிள்ளைகளும் உள்ளனர் என்பது எனக்குப் பெருமையைத் தருகின்றது.

படிப்படியான வளர்ச்சி காணும் இப்பள்ளியானது மாணவர்கள், மற்றும் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரது ஒத்துழைப் புடன் அதிபர், ஆசிரியர்களது பங்களிப்புடனும் பூரண வளர்ச்சிகண்டு பல ஆண்டுகாலம் எழுத்தறிவித்த, ஏற்றமிகு தாயாக என்றென்றும் நிலைத்துப் பல நூறு அகவைகள் காணக் காவலாய் இருக்கும் கண பதியை வேண்டி வாழ்த்துகின்றேன்.

வாழ்க! வாழ்க! வாழ்க!

**திரு.சு.செந்தூரன்,**
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம் (பிரித்தானியா) வாழ்த்துச் செய்தி

“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு மாடல்ல மற்றயவை” அழிவில்லாத செல்வமாகிய தான் கொண்ட கல்வி மூலமாக தனது கிராமத்துக்கு கொண்டு செல்ல விரும்பிய ஸ்ரீமான் வேலுப்பிள்ளை அவர்களால் 1872ல் ஓர் சிறிய காணித்துண்டில் பத்து மாணவர்களுடன் எமது கிராமத்தில் யாவரும் கல்வி மேம்பாடடைய வேண்டும் என்னும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டதுதான் கொல்லங்கலட்டி சைவதமிழ் வித்தியாசாலை இது நமது கிராமத்தின் அடையாளம். பல சாதனைகளுடன் பல்வேறுபட்ட சோதனைகளையும் கடந்து இன்று 150ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் எமது கிராம பாடசாலையின் விழாக் கோலம் கண்டு பூரிப்படைகின்றோம்.

கல்வித்தாயவளின் விழாவிற்காக அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் புலம்பெயர் கிராம உறவுகள் அனைவரும் ஒருமித்து கிராமமே விழாக் கோலமாகியுள்ளது மிகவும் சிறப்பு.

கொல்லங்கலட்டி தமிழ் வித்தியாசாலைக்கும் எமது ஒன்றியத் திற்கும் ஓர் நெருக்கமான உறவு நீண்ட காலமாக இருந்து வருகிறது. இன்றைய நாளில் விழாக்காணும் எமது பாடசாலையின் சிறப்புக் கண்டு நாமும் பெருமை கொள்கின்றோம். தொடர்ந்து நமது கிராம உறவு களுக்கு சைவமும் தமிழும் வளர்த்து புத்திஜீவிகளை உருவாக்கி, பல சாத னைகளைத் தொடர ஒன்றியத்தின் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

**கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம் (UK)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கொல்லங் கலட்டி மக்கள் ஒன்றியம் (கனடா) வாழ்த்துச் செய்தி

கொல்லங்கலட்டி மக்கள் பலபேருக்கு ஆரம்பக் கல்வியை வழங்கியும் சைவத்தையும் தமிழையும் வளர்த்தெடுத்ததும் ஊரின் அடையாளங்களில் ஒன் றாக விளங்குவதும் கொல்லங்கலட்டி தமிழ் வித்தியாலயமே.

இன்று தனது 150 ஆவது நிறைவு நாளை கொண் டாடுவது கொல்லங்கலட்டி மக்களுக்கு மிகவும் மகிழ்வினைத் தருகின்றது. நாமும் பாடசாலையின் வளர்ச்சிக்கு எங் களால் முடிந்த உதவிகளைச் செய்து வந்துள்ளோம். இந்தப் பாடசாலை யில் படித்த பல கொல்லங்கலட்டி மக்கள் மேற்படிப்புக்கள் படித்து வெளிநாடுகளிலும் சென்று நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளனர். நடைபெற இருக்கும் 150 ஆவது நிறைவு நாள் நிகழ்ச்சி சிறப்புடன் நடை பெற கனடாவாழ் கொல்லங்கலட்டி மக்கள் அனைவரும் வாழ்த் துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம் (கனடா)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பழைய மாணவர் சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



பழைமையும் பெருமையும் உடையதாகிய யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயம் 150வது ஆண்டு நிறைவு விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

சைவமும் தமிழும் வளர்க்க வேண்டும் என்றும் ஏழை மக்களுக்கும் கல்வி அறிவு கிடைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் 150ஆம் ஆண்டுகளுக்கு முன் தனது சொந்தக் காணியில் திரு.ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் வித்திட்ட விதை வளர்ந்து கிளை பரப்பி அவரது கனவை நனவாக்கி கிராமத்திற் பல கல்விமான்களைப் பல துறைகளில் உருவாக்கியது. 1990ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தம் காரணமாக மக்கள் கிராமத்தை விட்டு வெளியேறினார்கள். இந்நிலையில் பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டது. ஸ்ரீ வீரகத்தி விநாயகர் அருளால் மீண்டும் சொந்த இடத்தில் 2013ம் ஆண்டு மீளவும் ஒரு மாணவனுடன் பாடசாலை இயங்க ஆரம்பித்து சிறிது சிறிதாக வளர்ச்சி கண்டது. இந்நிலையில் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் பாடசாலையின் அபிவிருத்திப் பணிகள் பலவற்றில் ஈடுபட்டுள்ளனர். அதேவேளை தற்போதைய அதிபர் திரு.நா.பிரியந்தன் அவர்கள் குறைந்த மாணவர்கள் இருப்பினும் நிறைவான கல்வியினை வழங்கும் ஆர்வத்துடன் உழைக்கும் அதிபர்கள் வரிசையில் முதன்மையானவராக அவரைக் காண்கின்றேன்.

பல வருடங்களின் பின் 5ம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 02 மாணவர்கள் சித்தியெய்திக் கிராமத்திற்கும் பாடசாலைக்கும் பெருமை தேடிக் கொடுத்தனர். இப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவரில் நானும் ஒருவர் என்ற வகையில் 150ஆம் ஆண்டு விழா சிறப்புற உழைத்த அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் பாராட்டுவதுடன் மேலும் பணிகள் சிறக்க வேண்டும் என மனம் மிக மகிழ்ந்து எல்லாம் வல்ல ஸ்ரீ வீரகத்தி விநாயகர் பெருமானைப் பிராத்தித்து வாழ்த்துகின்றேன்.

**திருமதி கு.சாவித்திரிதேவி,**
**செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்.**

**"சிறப்போடு வளர்க எமது பாடசாலை"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கலையகம் எழில்மிகு
# சைவத்தமிழ் வித்தியாலயமே

எங்கள் கலையகம் எழில்மிகு சைவத்தமிழ் வித்தியாலயமே
எழிலுறக் கல்வி புகட்டியே நாளும் வாழிய வாழியவே
கொழுந்துகள் நிறைந்த கொல்லங்கலட்டியில் உதித்த நல் கலையகமே
கோதறு கல்விமான்களை தந்தொளி செய்தாய் வாழிய வாழியவே

வேலுப்பிள்ளை தந்த நற்கலையகம் மேலும் உயர்ந்திடவே
சிற்றம்பலமாய் முகாமையாளர் சீர்பணிநினைவோமே
இன்னும் இன்னும் இனிக்கும் ஐங்கரன் அருளின் மாட்சியினால்
இடர்களைந் தெங்களைக் காக்கும் கலையகம் வாழிய வாழியவே

கோபுரதரிசனம் கோடிபுண்ணியம் என்றொளி கூட்டிடவே
கோதிலாக் கல்விநலம் தரும் கலையகம் வாழிய வாழியவே
ஊரவர் மகிமை உரைக்கும் கலையகம் வாழிய வாழியவே
உமையவள் மைந்தன் ஐங்கரன் அருளால் நலன்பெற் றோங்குகவே

ஆண்டுகள் நூறு கடந்தும் அறிவொளி பயிற்றிடும் கலையகமே
அழகுறு கலைகள் பலவும் சிறந்திட பயிற்றி நலம் தருமே
எம்மவர் கல்வி ஏற்றம் தரவே எழில்மிகு நிலைகூட்டி
என்றும் பயிற்றிடும் எங்கள் கலையகம் என்றென்றும் வாழியவே

“கற்றாய்ந்தொழுகு”என்னும் பொன்மொழி கவின்றுற எழில்தரவே
காசினி மீதினில் எழில் தரு கலையகம் வாழிய வாழியவே
கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயம் வாழிய வாழியவே
இன்றும் இச் சைவத்தமிழ் வித்தியாலயம் இது இசைபெற்று ஓங்கிடவே
இன் பணிசெய்தவர் அதிபர் பிரியந்தன் அவர் பணிதனை நினைந்திடுவோம்.

**கவிஞர். சு. குகன்**
*கொல்லங்கலட்டி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மலராசிரியரின் உள்ளத்திலிருந்து



சைவமும் தமிழும் தழைத்தோங்க வேண்டும் என்ற பேரவாவுடன் யா/கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயத்தை நிறுவிய பெருந்தகையாளர் அமரர் ஆ. வேலுப்பிள்ளை அவர்களின் சிந்தையின் நிறைவாகவும் வீரகத்தி விநாயகரதும் சிதம்பரேஸ்வரப் பெருமானதும் அருட்கடாட்சத்தினாலும் இப் பாடசாலையில் கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வியை வழங்கி சிறந்த பாடசாலையாக மேலும் வளர்ச்சிபெறச் செய்ய வேண்டும் என்பதற்காக ஊக்கமும் ஆக்கமும் அளித்து ஆசிரியர்களையும், மாணவர்களையும் வழிப்படுத்தும் செயற்றிறன் மிக்கவரும் நேரிய சிந்தனை உடையவருமாகிய எமது மதிப்பார்ந்த அதிபர் திரு.நா.பிரியந்தன் அவர்களது விடாமுயற்சியி னாலும் நூற்று ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் அளவிற்கு எமது பாடசாலை சாதனை படைத்துள்ளது.

நூற்று ஐம்பதாவது ஆண்டு நிறைவில் பாடசாலையின் வளர்ச்சிப்படிகளையும், கல்விப் புலத்தில் பெற்றுக்கொண்ட சாதனை களையும் எடுத்தியம்பும் வரலாற்று ஆவணமாக மட்டுமன்றி நினைவுச் சின்னமாகவும் இந்நூல் வெளிவருவதையிட்டு மலர்க் குழுவாகிய நாம் பேருவகை அடைகின்றோம்.

**"தரமான ஆக்கங்களே மிகச் சிறந்த நூலை உருவாக்குகின்றன"** என்ற வகையில் எமது பாடசாலை ஆசிரியர்களிடமிருந்தும், கொல் லங்கலட்டி சைவத்தமிழ் அன்னையால் வளர்க்கப்பட்டு கல்விமான் களாகத் திகழும் பழைய மாணவர்களிடமிருந்தும் மலர்க் குழுவாகிய நாம் ஆக்கங்கள் கேட்டபோது ஆர்வத்துடன் தரமான ஆக்கங்களைத் தந்துதவியமையால் யா/கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலய நூற்று ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா மலர் சிறந்த நூலாக உயர்வடைந்துள்ளது என்றே கூற வேண்டும்.

ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்தி, ஆக்கங்கள் என்பவற்றைத் தந்துதவிய அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருப்பதுடன் மலர்க் குழுவின் தலைவராக இருந்து மலர் சிறப்பாக வெளிவருவதற்கு முழுமையான ஒத்துழைப்பையும், உதவியையும், ஆலோசனைகளையும் நல்கிய எமது அதிபர் மதிப்பார்ந்த திரு. நா.பிரியந்தன் அவர்களுக்கு உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் மலருக்குரிய அட்டைப் படத்தினை அழகுற வடிவமைத்துத் தந்தும் இம்மலரை அழகுற நேர்த்தியாக அச்சிட்டு வழங்கியும் உதவிய நியூ எவகிறீன் அச்சகத்தினருக்கும் பேருவகையுடன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

**திருமதி பிரமிளா தர்மபாலன் - மலர் ஆசிரியர்**
B.A (Hons) PGDE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 01. தமிழ்த்தாய் வாழ்த்து | 03 |
| 02. பாடசாலைக் கீதம் | 04 |
| 03. கொடிக் கீதம் | 05 |
| 04. மகுட வாசகம் | 06 |
| 05. பாடசாலை தொடர்பான அடிப்படை விபரங்கள் | 07 |
| 06. ஆசிச் செய்திகள் | 09 |
| 07. வாழ்த்துச் செய்திகள் | 13 |
| 08. மலராசிரியரின் உள்ளத்திலிருந்து | 32 |
| 09. அதிபர் அறிக்கை | 35 |
| 10. வயது வந்தவர்களுக்கான மருத்துவ வழிகாட்டல் | 43 |
| 11. சைவ வித்தியாசாலை வாழ்க. | 46 |
| 12. திருவிளையாடற் புராணம் புலப்படுத்தும் நடராஜர் வடிவம் | 49 |
| 13. பசுமை நிறைந்த பள்ளிப் பருவ நினைவுகள் | 54 |
| 14. சிறந்த ஆசிரியருக்குரிய பண்புகளும் கற்பித்தல் முறையும் | 58 |
| 15. வித்தியாசாலை நினைவுகளில் நான் | 60 |
| 16. போதையை ஒழிப்போம். | 63 |
| 17. கொல்லங் கலட்டியின் கல்வி விருட்சம் | 65 |
| 18. இன்றைய மாணவரும் வாசிப்புத் திறனும் | 67 |
| 19. என் நினைவுகளில் கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயம். | 71 |
| 20. ஆரம்பக் கல்வியில் தரம் - 05 புலமை பரிசில் பரீட்சை.... | 76 |
| 21. எமது பாடசாலை | 85 |
| 22. மனிதன் மனிதனாக வாழ மனவளக்கலை யோகா | 90 |
| 23. எங்களது கிராமத்துப் பாடசாலை | 94 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



**தரம் – 01**

**இருப்பவர்கள் இடமிருந்து வலம்**

ர.தருணிகா, வி.இலக்கியா, து.நிதுஜா, சு.யஸ்வினி, திரு.நா.பிரியந்தன்(அதிபர்), ல.திகழ்யன், தி.தக்ஷயன், அ.அத்வித், வி.கேதாரன்

**நிற்பவர்கள் இடமிருந்து வலம்**

டி.டிலுக்சிகா, ஜெ.பவதாரணி, யோ.டிலக்சனா, பே.ரபிநையா, தி.மதிவதனி, திருமதி.ய.சிவதாசன்(வகுப்பாசிரியர்) க.தர்சன், ஜெ.கேதுசன், கி.திபிகன், செ.நிரஞ்சன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**இருப்பவர்கள் இடமிருந்து வலம்**
ச.பிரியங்கா, ம.ஜீவிதா, மோ.அபிஷா, இ.கஸ்மிதா, திரு.நா.பிரியந்தன்(அதிபர்), ப.டில்ஸ்சான், ம.மதீஷன், கி.தருணீஸ், பி.திருசயன்

**நிற்பவர்கள் இடமிருந்து வலம்**
ம.சஸ்ரியா, சி.ஸ்ரீவர்சினி, சு.சுதர்சினி, கே.ஹரீஸ், திருமதி.பி.தர்மபாலன்(வகுப்பாசிரியர்), ர.கம்சிகன், பா.சஜீத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



**தரம் – 03**

**இருப்பவர்கள் இடமிருந்து வலம்**
சு.நிலக்ஷன், க.பிரித்திகன், க.அபிஷன்,கா.சனோஜன், திரு.நா.பிரியந்தன்(அதிபர்), ப.சஸ்மிகா, ஜெ.ஜெனிஸ்கா, யோ.யோஹாருணிகா

**நிற்பவர்கள் இடமிருந்து வலம்**
கே.மேனன், செ.ஷாகீர்த்தியன், மு.கௌஷிகன்,, திரு.சி.கௌரிதரன்(வகுப்பாசிரியர்), ஜெ.துவாரகா, ப.சஸ்மிகா, தி.தன்சிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



**தரம் – 04**

**இருப்பவர்கள் இடமிருந்து வலம்**

ச.யான்சி, பி.டல்சிகா, ஜெ.யதுஷா, திரு.நா.பிரியந்தன்(அதிபர்), சு.பிரணவிக்கா, சு.துஷ்யந்தினி, ம.பாகித்தியா

**நிற்பவர்கள் இடமிருந்து வலம்**

ம.மிதுனன், ஜெ.றிஷாத், தே.தேனுஜன், வி.லேனுஜன், செ.தாருஷன், திருமதி.ஜெ.ஸ்ரீதரன்(வகுப்பாசிரியர்), சு.துஷாரா, வா.திவ்வியன், யோ.ஒபின்சன், தி.துஷிந்தன், ம.கனிஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



**தரம் – 05**

**இருப்பவர்கள் இடமிருந்து வலம்**

கு.டஸ்மியா, உ.டோனிஷா, திரு.நா.பிரியந்தன்(அதிபர்), செ.கோபிகா, ல.மிதுஷா

**நிற்பவர்கள் இடமிருந்து வலம்**

சி.சேயாளன், க.அனுஷன், ச.பவிரதன், திருமதி.க.சயந்தன்(வகுப்பாசிரியர்) ர.துவாரகன், து.அக்ஷயன், கே.துலக்ஷன், ம.சனோஸ்காந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



முன்பள்ளி ஆசிரியர்கள்

**இருப்பவர்கள் இடமிருந்து வலம்**

திருமதி. ரி. யாழினி, திரு. நா. பிரியந்தன் (அதிபர்), செல்வி வினோதினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



முன்பள்ளி மாணவர்கள் – பிரிவு:A

**இருப்பவர்கள் இடமிருந்து வலம்**
செ.நேருசன். கு.தஸ்மின், ச.யக்சன், திரு.நா.பிரியந்தன்(அதிபர்), ஸ்.ரிக்ஷானா. கே.கஸ்ரியா, தி.அபிக்ஷா.

**நிற்பவர்கள் இடமிருந்து வலம்**
அ.பகிரதன். ம.விஸ்மன், திருமதி.ரி.யாழினி(ஆசிரியர்), உ.வினோதினி(ஆசிரியர்), ச.பிரதிஸ்க்ஷா. கு.யனுசனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



முன்பள்ளி மாணவர்கள் - பிரிவு:B,C

**இருப்பவர்கள் இடமிருந்து வலம்**

த.தக்ஷிமிகா, பா.புருசோத்மன், வி.லக்ஷன், அ.அஸ்விதா, பா.லிதுர்க்ஷிகா, உ.கவின்சிகா, திரு.நா.பிரியந்தன்(அதிபர்), ஸி.ரிஸ்மிதா, ப.சகீதரன், றா.தனுஸ்கா, பே.மகிழிசன், பி.நிரிக்ஸ், ஜ.லினுக்ஷா,சி.தர்ணிகா


**நிற்பவர்கள் இடமிருந்து வலம்**

திருமதி.ரி.யாழினி(ஆசிரியர்),கா.டினோஜா, ம.தஸ்மிதன், ச.கர்ணிகா, வே.தக்சரன், அபிஷேக், ஜெ.துவாரகேக்ஷ், த.விருசன், சு.ஜனார்த்தனிக்கா, பு.யஸ்விந், க.கம்க்ஷாயினி, இ.சனுஜன், க.பேகன், க.ஹபினேஸ், ம.சிந்துஜன், கி.கிறிஸ்ரீனா, உ.வினோதினி(ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அதிபர்கள் 1972 - 2023



திரு. வ.மகாலிங்கம்
*1971 - 1982*



திரு. மூ.நடராசா
*1982 - 1983*



திரு.வே.தனபாலசிங்கம்
*1984 - 1993*



திருமதி க.சுப்பிரமணியம்
*1993 - 1994*



திருமதி தனலிங்கம்
*1994 - 1994*



திரு. வை.விமலன்
*2013.01.02 - 23.01.2013*



செல்வி வ.தம்பிராசா
*2013.02.06 - 2017.01.02*



திரு.நா.பிரியந்தன்
*2017.01.03 - இன்றுவரை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்கள்



திருமதி
பத்மா சர்வேஸ்வரன்



திருமதி
ஸ்ரீதேவி யோகராசா



செல்வி
துவாரகா செல்வநீதி

# ஓய்வுபெற்ற ஆசிரியர்



திரு. தவபாக்கியநாதன் பத்மநாதன்

# சேவையில் உள்ளபோது காலமான ஆசிரியர்



திருமதி பு.சேகரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



மாணவத் தலைவர்கள் - 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



**பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் - 2022/2023**

**இருப்பவர்கள் இடமிருந்து வலம்**

திரு.சு.செந்தூரன்(செயலாளர்), திருமதி.ய.சிவதாசன்(ஆசிரியர் பிரதிநிதி) திரு.நா.பிரியந்தன்(அதிபர்), திருமதி.பி.தர்மபாலன்(பொருளாளர்), திருமதி.ஜெ.ஸ்ரீதரன்(ஆசிரியர் பிரதிநிதி)

**நிற்பவர்கள் இடமிருந்து வலம்**

திருமதி.இ.இவானி(பெற்றோர் பிரதிநிதி) திருமதி.ஜெ.சத்தியவாணி(பழையமாணவர் பிரதிநிதி) , திருமதி.சு. தவநிதியம் (பழையமாணவர் பிரதிநிதி), திருமதி.சி.வசிகலா(பெற்றோர் பிரதிநிதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



**பழைய மாணவர் சங்கம் – 2022/2023**

**இருப்பவர்கள் இடமிருந்து வலம்**

திரு.இராசரத்தினம் இராசரஞ்சன்(உபசெயலாளர்), திரு.சிற்றம்பலம் கமலக்கண்ணன் (போசகர்), திரு.கணேசலிங்கம் சிவரூபன்(பொருளாளர்), திருநாகேஸ்வரன் பிரியந்தன்(தலைவர்), திருமதி.சாவித்திரிதேவி குகநேசன்(செயலாளர்), கந்தப்பிள்ளை துரைசிங்கம்(உபதலைவர்)

**நிற்பவர்கள் இடமிருந்து வலம்**

திரு.பாலசுப்பிரமணியம் ஜெயசுந்தராராஜா (உறுப்பினர்) திரு.சங்கரப்பிள்ளை பத்மராசா(உறுப்பினர்) திருசிவகுரு தியாகராசா(உறுப்பினர்)
திருமதி.இராசேசரத்தினம் விக்கினேஸ்வரன் (உறுப்பினர்) திருமதி.பகீரதி சக்திகுமரன் (உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



**திரு.நா.பிரியந்தன்,**
அதிபர், யா/கொல்லங்கலட்டி
சைவத் தமிழ்வித்தியாலயம்.

# அதிபர் அறிக்கை

எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகரை வணங்கி. 150 ஆண்டுகளுக்கு முன்னரே இலவசக் கல்வியின் தேவையை உணர்ந்து இப்பாடசாலையை ஸ்தாபித்த ஸ்ரீமான்.ஆ.வேலுப்பிள்ளை அவர்களை நினைந்து, கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயத்தின் 150ஆவது ஆண்டு நிறைவு விழாவிற்கு பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு.தி.ஜோண் குயின்ரஸ் ஐயா அவர்களே சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கின்ற வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் கல்வி நிர்வாகம் உயர்திரு சி.மதியழகன் ஐயா அவர்களே, கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கின்ற தெல்லிப்பழைக் கோட்டக்கல்வி பணிப்பாளர் திரு.வே.அரசகேசரி ஐயா அவர்களே கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பழையமாணவர் சங்க போசகரும் அன்னம்மா அறக்கட்டளையின் நிர்வாக இயக்குனருமாகிய திரு.சி.கமலக்கண்ணன் ஐயா அவர்களே ஆசியுரை வழங்க வந்திருக்கின்ற செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஐயா அவர்களே, நினைவு பேருரை ஆற்ற வந்திருக்கின்ற பழைய மாணவனும் ஓய்வு நிலை கோட்டக்கல்வி பணிப்பாளருமாகிய திரு.ச.சிவானந்தராஜா ஐயா அவர்களே அயற்பாடசாலை அதிபர்களே பழைய மாணவர்சங்கப் பிரதிநிதிகளே, பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களே, அன்புக்குரிய பெற்றோர்களே, பழையமாணவர்களே, எமது பாட சாலை மாணவர்களே நிகழ்நிலை ஊடாக இந்நிகழ்வுகளைக் கண்டுகளித்துக் கொண் டிருக்கின்ற உலகெங்கும் பரந்து வாழுகின்ற பழைய மாணவர்களே, நலன்விரும்பிகளே உங்கள் அனைவருக்கும் இனிய காலை வணங்கங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலக் கல்விக்கும் கிறிஸ்தவ மதத்திற்கும் முன்னுரிமை வழங்கப்பட்டு வந்தது. சைவமும் தமிழும் என்ற நாவலரின் கோஷத்திற்கு அமைவாகக் கிராமங்கள் தோறும் கல்விமான்கள் பலர் தாமாக முன்வந்து சைவப் பாட சாலைகளை நிறுவினார்கள். அந்த வகையிலே ஸ்ரீமான் ஆ.வேலுப்பிள்ளை அவர்களும் கொல்லங்கலட்டிக் கிராமத்தில் தமக்குச் சொந்தமான நிலத்தில் கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலையை நிறுவினார். வறிய மாணவர்களின் நலன் கருதி இலவசக் கல்வியை ஸ்ரீமான் ஆ.வேலுப்பிள்ளை அவர்களும், அவரோடு இணைந்த ஆசிரியர்களும் வழங்கி வந்தனர். 1872 இல் இப்பாடசாலை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையாக மாற்றம் பெற்றது. 1930 ஆம் ஆண்டு திரு.வே.சிற்றம்பலம் அவர்கள் பாடசாலை முகாமையாளராகப் பொறுப்பேற்று பாடசாலையை சகல வழிகளிலும் முன்னேற்றினார். 1961 இல் அரசாங்கம் பாடசாலையைப் பொறுப்பேற்றுக்கொண்டது. 1962 இல் பாடசாலையின் தேவை கருதிப் புதிதாகக் காணி கொள்வனவு செய்யப்பட்டதுடன் புதிய கட்டடமும் அமைக்கப்பட்டது. 1972 இல் அப்போதைய அதிபர் திரு.வ.மஹாலிங்கம் அவர்களின் தலைமையில் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டதுடன் நூற்றாண்டு மலரும் வெளியிட்டு வைக்கப் பட்டது. 1990 இல் ஏற்பட்ட போர்ச் சூழல் மற்றும் இடப்பெயர்வுகள் காரணமாகப் பாடசாலை பல்வேறு இடங்களில் இயங்கி வந்தது

தொடர்ச்சியான இடப்பெயர்வுகள் காரணமாகப் பல்வேறு நெருக்கடியின் மத்தியில் பாடசாலையை நடாத்த வேண்டிய சூழல் ஏற்பட்டது. தொடர்ச்சியான நெருக்கடிகள் காரண மாக வலிகாமம் வடக்கில் இயங்கி வந்த பத்துக்கு மேற்பட்ட பாடசாலைகளைத் தற்காலிகமாக மூடுவது என்ற தீர்மானத்தை அப்போதைய கல்வி அதிகாரிகள் மேற்கொண்டனர். பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் மூடப்பட்ட பாடசாலைகளில் ஒன்றாக எமது பாடசாலையும் அமைந்தது. இதற்கு எதிராகப் பாடசாலைச் சமூகம் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் பயனற்றவை ஆகியது.

2011 இல் கொல்லங்கலட்டிக் கிராமத்தில் மீள்குடியேற்றம் இடம்பெற்றது. அதன் பின் பாடசாலை மீள ஆரம்பிக்க வேண்டும் எனக் கொல்லங்கலட்டிக் கிராமத்தைச் சேர்ந்த பலர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக 02.01.2013 இல் பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டது. திரு.வை.விமலன் அவர்கள் அதிபராகக் கடமையேற்றுக் கொண்டார். அன்றைய தினமே தரம்-1 இற்கு புதிய மாணவர் ஒருவர் இணைத்துக் கொள்ளப்பட்டார். பாடசாலைக்குத் தொடர்ச்சியாக மாணவர்கள் எவரும் இணையாமை காரணமாக தரம் 1 இல் இணைந்து கொண்ட மாணவரும் 23.01.2013 இல் வேறு பாடசாலைக்கு அனுமதி பெற்றுச் சென்றமை காரணமாக பாடசாலையைத் தொடர்ந்து நடாத்திச் செல்வதில் நெருக்கடி நிலை ஏற்பட்டது. திரு.வை.விமலன் அவர்களும் 01.02.2013 இல் வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். 06.02.2013 இல் செல்வி.வ.தம்பிராசா அவர்கள் ஆசிரியராக நியமிக்கப்பட்டு பாடசாலைப் பொறுப்புகள் அவரிடம் கையளிக்கப்பட்டது. அப்போது வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்த திரு.செ.சந்திரராஜா அவர்களின் தலைமையில் கொல்லங்கலட்டிக் கிராம சேவகர் அலுவலகத்தில் பாடசாலையின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக கிராமத்தவர்களுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது. இக் கலந்துரையாடலில் முதலாம், இரண்டாம் வகுப்புகளை ஆரம்பிப்பதற்கும் மற்றும் பாடசாலை வளாகத்தில் முன்பள்ளி ஒன்றை நடாத்திச் செல்வதற்குமான ஆலோசனை வலயக் கல்விப் பணிப்பாளரால் வழங்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாடசாலை வளர்ச்சிக்கு செல்வி.வசந்தராணி அவர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்தார். அந்த வகையிலே பாடசாலையோடு இணைந்ததாக முன்பள்ளி ஒன்றினையும் பதிவு செய்து நடாத்திச் செல்வதற்கான அனுமதியையும் பெற்றுக் கொண்டமை பாடசாலை வளர்ச்சியின் அடித்தளமாக அமைந்தது.

2013 ஆம் ஆண்டு பாடசாலை மீள அரம்பிக்கப்பட்ட பின்னர் 18.02.2013 இல் திருமதி பு.சேகரர் ஆசிரியரும், 23.08.2013 இல் திரு.த.பத்மநாதன் ஆசிரியரும் கற்பித்தல் செயற்பாடுகளில் இணைந்து கொண்டனர்

16.05.2014 இல் திருமதி ச.பத்மா ஆசிரியரும், திருமதி.ஸ்ரீ.யோகராசா ஆசிரியரும் இணைந்து கொண்டனர். இவர்கள் எமது பாடசாலையில் இணைந்து கொண்டபின் ஆசிரிய ஆளணித் தேவை ஓரளவு பூர்த்திசெய்யப்பட்டது.

2017 இல் எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி வந்த திருமதி.பு.சேகரர் அவர்களின் மறைவு பாடசாலைக்கு பேரிழப்பாக அமைந்தது.

03.01.2017 இல் அதிபராக நான் பொறுப்பேற்றுக் கொண்டேன். அப்போது 29 மாணவர்கள் கல்வி கற்று வந்தார்கள். 1-5 வகுப்புகள் காணப்பட்ட போதும் மூன்று ஆசிரியர்களே கற்பித்தல் பணியில் ஈடுபட்டிருந்தனர். வலயக் கல்விப் பணிப்பாளரிடம் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக 2018.03.14இல் திருமதி.ஜெ.ஸ்ரீதரன் ஆசிரியரும், 2019.02.01 இல் திருமதி.ய.சிவதாசன் ஆசிரியரும், 2019.02.27 இல் திருமதி.பி.தர்மபாலன் ஆசிரியரும் 28.06.2019 இல் ஆங்கில பாட ஆசிரியராக செல்வி.துவாரகா செல்வநீதி அவர்களும் இணைந்து கொண்டனர்.

செல்வி துவாரகா செல்வநீதி 2021 இல் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு பயிற்சிக்காகச் சென்றார்.7 வருடசேவைக்காலத்தைப் பூர்த்திசெய்ததன் அடிப்படையில் திருமதி.ச.பத்மா ஆசிரியரும் திருமதி.ஸ்ரீ.யோகராசா ஆசிரியரும் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றனர்.

22.11.2021 இல் திருமதி.க.சயந்தன் ஆசிரியரும் 18.04.2022 இல் திரு.சி.கௌரீ தரன் ஆசிரியரும் இணைந்து கொண்டனர்

தொடர்ச்சியான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெற்று வந்த வேளை முதன் முறையாக மீள் குடியேற்றத்தின் பின்னர் 2019ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் இரண்டு பேர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுச் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்தனர். செல்வன் ரி.டனுஸ்கர் 167 புள்ளிகளையும் செல்வி.பே.கம்சாயினி 165 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டனர். 2021 இல் செல்வன்.கி.ராம்பிரசாத் 149 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தார். 2019, 2021 ஆகிய வருடங்களில் இம்மாணவர்களின் சாதனைக்குக் காரணமாக இருந்த ஆசிரியர் திருமதி.ஜெ.ஸ்ரீதரன் அவர்களுக்கும், அம்மாணவர்களுக்குக் கற்பித்தல் பணியிலீடுபட்ட அனைத்து ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கும் பாராட்டுக்கள் உரித்தாகுக!.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

| ஆண்டு | தோற்றியோர் | வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | | 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | | 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | அதிகமாக பெற்றோர் எண்ணிக்கை | சதவீதம் |
| 2016 | 04 | - | - | 02 | 50% | 04 | 100% |
| 2017 | 02 | - | - | - | - | 02 | 100% |
| 2018 | 05 | - | - | 04 | 80% | 05 | 100% |
| 2019 | 07 | 02 | 29% | 06 | 85% | 07 | 100% |
| 2020 | 06 | - | - | 04 | 67% | 05 | 83% |
| 2021 | 11 | 01 | 9% | 06 | 54% | 10 | 91% |
| 2022 | 11 | - | - | 05 | 45% | 07 | 64% |

கற்றல் செயற்பாடுகளுக்கு இணையாக இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் மாணவர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டி வந்தனர். அந்த வகையில்

2017 இல் நடைபெற்ற கோட்ட மட்ட திருக்குறள் மனனப் போட்டியில் தரம்-4 மாணவி செல்வி.ந.குகன்ஜா 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

2018 இல் நடைபெற்ற கோட்ட மட்ட தமிழ்மொழித்தினப் போட்டியில் செல்வி.சி.தருணிகா சித்திரம் வரைதலில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட அதேவேளை ஆக்கத்திறன் வெளிப்பாடு - தரம் - 5 மாணவி செல்வி.வ.அஸ்விகா மூன்றாமிடத்தினையும், எழுத்தாக்கப் போட்டியில் செல்வி.ந.குகன்ஜா மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டார்.

கோட்ட மட்டச் செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் தரம் 2,3,4 கலப்பு அணி மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டது.

2019 இல் கோட்ட மட்ட தமிழ்மொழித்தினப் போட்டியில் செல்வன்.ரி.டனுஸ்கர் எழுத்தாக்கப் போட்டியில் மூன்றாமிடத்தினைப் பெற்றுக்கொண்டார்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை நடாத்திய வாசிப்பு மாதப் போட்டியில் தரம் -5 குழுப்பாடல் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.


படம் பார்த்து வசனம் அமைப்பதில் செல்வி.ல.மிதுசா 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

சைவத்துக்கும் தமிழுக்கும் முன்னுரிமை வழங்கும் பாடசாலை என்ற வகையில் இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் தைப்பொங்கல் விழா, ஆடிப்பிறப்பு, நவராத்திரி பூசைகள், சமய குரவர்களின் குருபூசைத் தினங்கள் என்பன கொண்டாடப்பட்டு வருகின்றது. நவராத்திரி காலங்களில் மாணவர்களுக்கான போட்டிகள் நடாத்தப்படுவதுடன் பரிசில்களும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

புதிய மாணவர்களை இணைத்துக்கொள்வது பாரிய சவாலாக உள்ளபோதிலும் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடனும் பெற்றோர், பழையமாணவர்களின் பங்களிப்புடனும் மாணவர் தொகை படிப்படியாக அதிகரித்து வருகின்றது.

| ஆண்டு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 2014 | 08 | 07 | 15 |
| 2015 | 11 | 13 | 24 |
| 2016 | 14 | 15 | 29 |
| 2017 | 15 | 18 | 33 |
| 2018 | 14 | 21 | 35 |
| 2019 | 23 | 25 | 48 |
| 2020 | 27 | 25 | 52 |
| 2021 | 33 | 33 | 66 |
| 2022 | 38 | 36 | 74 |




பாடசாலையின் வளர்ச்சியில் பிரதான பங்காளர்களாக இருப்பவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள்,நிறுவுனர் குடும்பத்தவர்கள் மற்றும் பழையமாணவர்களாவர். இவர்கள் தாமகவே முன்வந்து பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிவருகின்றனர். எமது பாடசாலையின் வளர்ச்சிக்குப் பலமான பழைய மாணவர் சங்கம் அமைந்திருப்பது மிகப்பெரும் வரப்பிரசாதமாகும். முழுமையாக பழையமாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் இவ்விழா நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**பாடசாலையின் எதிர்கால தேவைகளாக**

- ஆரம்பக்கல்வி ஆசிரியர் - 1
- ஆங்கிலபாட ஆசிரியர் - 1
- மேலைத்தேய வாத்தியக் கருவிகள்
- அனைத்து வகுப்புக்களுக்குமான திறன் பலகை பொருத்துதல்
- அலுவலகத்திருத்தம்
- பாடசாலையுடன் சேர்த்து இயக்கப்பட்டு வருகின்ற முன்பள்ளிக்கான காணி, கட்டட வசதி

நூற்று ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு நிதியுதவி வழங்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பழைய மாணவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிதியுதவி வழங்கியவர்கள்: (அறிக்கை தயாராகும் வரை)

- நிறுவுனர் சிலை மற்றும் முகாமையாளர் சிலை அமைப்பு - திரு.க.காங்யேன்
- சரஸ்வதி சிலை அமைப்பு - அமரர்கள் இராசையா புவனேஸ்வரி ஞாபகார்த்தமாக அவர்களது பிள்ளைகள்
- வாகனத் தரிப்பிடம் அமைப்பு - நடராஜா குடும்பம்
- பாடசாலைக் கட்டடங்களுக்கான வர்ணம் பூசுதல் - V.T.நடராஜா குடும்பம்
- மதில் அமைத்தல் - அ.குகதாஸ்,S.இராமச்சந்திரன்
- திறன் பலகை (Smart panel) கொள்வனவு - கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம் - லண்டன்
- பாடசாலைக் கீதம் மற்றும் கொடிக்கீதம் இசையமைத்து ஒலிப்பதிவு செய்தல்- அன்னம்மா அறக்கட்டளை
- விளையாட்டு முற்றம் வர்ணம் பூசுதல் சங்கரப்பிள்ளை, திரு. நடராஜா.
- விளையாட்டு முற்றும் மணல் பரவுதல் - S.K.S. குடும்ப நிதியம்
- நினைவுச் சின்னம் வழங்குதல் - கௌரி சங்கர் அருணா
- பரிசில்கள் Dr.தேனுகா
- நிகழ்வுக்கான கொட்டகை,மேடை,ஒலி,ஒளியமைப்பு - திரு.க.தயாபரன்
- பாடசாலைச் சுற்றாடல் அழகுபடுத்தல் - பழையமாணவர் சங்கம்
- இவற்றுக்கு மேலதிகமாக ஆண்டு விழா சிறப்புற அமைய நிதியுதவி வழங்கியவர்கள்

    - திரு. இ. கரிகரன் (பிரான்ஸ்)
    - திருமதி ஜீவராணி பராபரன் (இலணடன்)
    - நவரட்ணம் குடும்பம் (யசோ கனடா)
    - வே. சொக்கன் (இலண்டன்)
    - திருமதி. சா. குகனேசன்
    - திருமதி. சி. கெங்காதரன்
    - திரு.வ. பாலச்சந்திரன்
    - திரு. சி. தியாகராஜா
    - திரு. ச. பத்மராசா
    - திருமதி. இ. விக்கினேஸ்வரன்
    - திரு. த. துரைசிங்கம்
    - திரு. க. சிவரூபன்
    - மல்லிகாதேவி ஞானேந்திரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஞாபகார்த்தமாக கஜவாணி, கஜனிகா ஆகியோர் சார்பில் ராஜ்குமார் கமலாதேவி
    - ச. பொன்னுத்துரை ஞாபகார்த்தமாகப் பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எமது அழைப்பையேற்று வருகை தந்து சிறப்பித்துக்கொண்டிருக்கின்ற இந் நிகழ்வின் பிரதம விருந்தினரும் வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளருமாகிய திரு.தி.யோண் குயின்ரஸ் ஐயா அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள் கின்றேன். சிறப்பு விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக்கொண்டிருக்கின்ற வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு.சி.மதியழகன் ஐயா அவர்களுக்கும், கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.வே.அரசகேசரி அவர்களுக்கும்,

கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் பழையமாணவன் திரு.சி.கமலக்கண்ணன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின் றேன். ஆசியுரை வழங்கிய செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன் அவர்களுக்கும் நினைவுப்பேருரை ஆற்ற வந்திருக்கின்ற பழைய மாணவன் திரு.ச.சிவானந்தராஜா அவர்களுக்கும் உளமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

நூற்றாண்டு மலர் சிறப்புற அமைய ஆசிச் செய்தி வழங்கியவர்கள், வாழ்த்துச்செய்தி வழங்கியவர்கள், ஆக்கங்களை வழங்கிய பழையமாணவர்கள், எமது பாடசாலை ஆசிரியர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிறைவாக இவ்விழா சிறப்புற அமைய ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோர், ஆசிரியர்கள், பழையமாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் நன்றி கூறி அதிபர் அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி
வணக்கம்

**திரு. நா. பிரியந்தன்,**
அதிபர்,
யா/கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொன்மொழிகள்

1. தொழில் இல்லாத கல்விநீரின்றி வாடும் மரத்தைபோன்றது.!

2. கல்வி என்பதுபல மூட்டை நூல்களை வாசிப்பது இல்லை.. அடக்கம்... ஒழுங்கு.... அறம்... மற்றும் நீதி இவற்றின் முன்மாதிரி ஆகும்.!

3. படிப்பு, படிப்பு என்று பலரும் படித்துக்கொண்டே இருக்கிறார்கள். சிலர் நமது சிந்தனை சக்தியை இழப்பது வரை படிக்கிறார்கள். படிப்பதை நிறுத்திவிட்டு முதலில் படித்ததைப் பற்றி சிந்தியுங்கள்.

4. ஒழுக்கம் உண்டாகாத இலக்கியக் கல்வியால் ஒருவித பயனும் கிடையாது.

5. மாணவனுக்கு சிறந்த பாடப்புத்தகம் அவனுடைய ஆசானே என்பது உறுதியான நம்பிக்கை.

6. கணிதம் சந்தோஷத்தை கூட்டவோ... கவலையை கழிக்கவோ நமக்கு கற்றுத் தருவதில்லை.... ஆனால் அனைத்து பிரச்சனைக்கும் தீர்வு உண்டு என்பதை கற்றுத் தருகின்றது.

7. கல்வி என்பது பெருமைக்காக தேடிப் பெறுவது அல்ல... பெற்றதைக் கொண்டு பெருமை தேடிக் கொள்வதாகும்.

8. கற்பது கடினம் அதை விடக் கடினமானது கற்றதை மறப்பது.

9. மாணவர்களை மதிப்பதில் தான் கல்வியின் ரகசியம் அடங்கி இருக்கின்றது.

10. பிறவி திறமையை வளர்ப்பதற்காகவே கல்வியறிவு பயன்பட வேண்டும்.

11. இளமைக் காலத்தில் கல்வியை புறக்கணித்தவன் எதிர்கால வாழ்வை இழந்தவன் ஆகிறான்.

12. எடுத்தால் குறைவது செல்வம்... கொடுத்தால் வளர்வது கல்வி.

13. அறிவு புகட்டாத கல்வி... சாமர்த்தியமாய் கழித்த சோம்பலேயாகும்.

14. வாழ்க்கை அனுபமில்லாத எவரும் கல்வி கற்றவராக முடியாது.

15. கல்வி என்பது தகவல்களை சேகரிப்பதல்ல... அது சிந்திப்பதற்காக மூளையை பயிற்றுவிப்பது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**2019, 2021 ஆம் ஆண்டுகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



Dr. இ.சாந்தினி
லண்டன்.


# வயது வந்தவர்களுக்கான மருத்துவ வழிகாட்டல்




40 வயதுக்கு மேற்பட்டோர் இரத்தப் பரிசோதனை, சலரோகம் (குருதியில் சர்க்கரை இருக்கா) குளுக்கோஸ் (Glucose) Hbaic கிளைகோகமா குளோபின் குடும்ப உறுப்பினர் சலரோகம், இருதய நோய் மாரடைப்பில் பாதிக்கப்பட்டிருப்பின் 40 வயதின் முன் இரத்த பரிசோதனை செய்வது அவசியம்.

உடல்நிறை Blood Pressure (இரத்த அழுத்தம்) இரத்தப் பரிசோதனை செய்த பின் மருத்துவரை அணுகி ஆலோசனை கேட்டல் நல்லது.

Body Massinder = நிறை - உடல்நிறை உயரம் × உயரம் உடல் பருமன் குறிப்பிட்ட உயரத்திற்கு குறிப்பிட்ட நிறை காணப்படுதல் அவசியம்.



சலரோகம், கொலஸ்ரோல் (Cholesterol) பிளட்பிறசர் வராமல் தடுப்பதற்கு மாச்சத்தை குறைத்து கிழமைக்கு 3மணி நேரம் நடப்பது நல்லது. துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்தல் நல்லது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



கணினி பாவிப்பது 45 நிமிடத்திற்குமேல் பாவிக்க கூடாது. பிள்ளைகள் ஓடிவிளையாடுவது மூளை வளர்ச்சிக்கு பேச்சு விருத்தி (மழலை பேச்சு) நன்றாக இருக்கும் Computer game தவிர்த்து மைதானத்தில் விளையாடுதல் வேண்டும்

சலரோகம் உறுதிப்படுத்தி ஆறு மாதத்திற்கு ஒருமுறை இரத்தப் பரிசோதனை HPAIC செய்துவைத்தியரின் ஆலோசனைப்படி மருந்து எடுத்து குறைக்க வேண்டும். HPAIC (Glycohamoglu) 07க்கு உள் இருத்தல் நல்லது மேலாக சலரோகம், இரத்த அழுத்தம் Cholesterol கண்டுபிடிக்கப்பட்டால் அரச வைத்தியசாலையை நாடி மருந்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். கிளினிக் (Clinic) மூலம் இரத்த பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை செய்துகொண் டால் உடல் நலத்துடன் நோய் கட்டுப்பாடாக நீண்ட நாட்கள் வாழ முடியும்.




இளைப்பு, களைப்பு, உடல்நிறைகுறைவு, நெஞ்செரிவு, இரத்தம் மலத்தில் காணப்பட்டால் உடனேயே வைத்தியரை நாடி பரிசோதனை செய்து நோயை கண்டுபிடித்தல் நல்லது.

பசியின்மை எடை (Weight loss) குறைவு, மயக்கம், வயிற்றோட்டம், (Diarrhea) மலச்சிக்கல் இருந்தால் வைத்தியரை நாடுவது நல்லது.

குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்டோர் கூடிய சீக்கிரத்தில் வைத்திய ஆலோசனை பெறவேண்டும். எந்தநோயும் விரைவில் கண்டுபிடித்து குணமாக்குவதற்கு சாத்தியம் உண்டு. நீர் சத்தும் அவசியம் நமது பருமனில் 75% நீராகும்.

## 45 வயது முதல் 100 வயதுவரை உள்ளவர்களுக்குத் தேவையான சுகாதாரக் குறிப்புகள்

01. பகல் நேரத்தில் அதிகதண்ணீர் குடிக்கவும் ஆனால் இரவில் குறைவாகக் குடிக்கவும்.
02. பகலில் இரண்டுகப் கோப்பிக்குமேல் குடிக்கவேண்டாம். முற்றிலும் நிறுத்துவது நன்று.
03. எண்ணெய் உணவுவகைகளை குறைத்து உண்ணுங்கள்.
04. சிறந்த தூக்கநேரம் இரவு 10 மணிமுதல் காலை 6 மணிவரை.
05. குளிர்ந்த நீருடன் மருந்துகளை உட்கொள்ளாதீர்கள்.
06. மருந்தைச் சூடானநீருடன் உட்கொள்ளுங்கள்.
07. அறைவெப்ப நிலைத் தண்ணீரை மட்டும் குடியுங்கள்.
08. ஒரு நாளைக்கு 8 மணிநேரம் தூங்க முயற்சி செய்யுங்கள்.
09. உணவில் குறைக்கவேண்டியவை.
    உப்பு,சர்க்கரை, இறைச்சி சிவப்பு இறைச்சி குறிப்பாக வறுத்த சிவப்பு இறைச்சி, பாற்பொருட்கள், மாச்சத்துள்ளபொருட்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

10. உணவில் அதிகரிக்கவேண்டியஉணவுகள்
கீரை, பீன்ஸ், பழங்கள், தானியங்கள் (குரக்கன், சாமை, தினை, கடலை, பருப்பு, பயறு, சோயா போன்றவை)

11. உயர் இரத்த அழுத்தம்

I. இயல்பானது $\frac{120}{80}$

இயல்பானகட்டுப்பாடு $\frac{130}{85}$

உயர்வானது $\frac{140}{90}$, அதை விட உயர்வானது $\frac{150}{95}$

II. பள்ஸ் PULSC 72 தர நிலை, 60 - 8 PM சாதாரணம்

III. உடல் வெப்பநிலை $98.4^{\circ}C$ சாதாரணம், $99.0^{\circ}F$ மேல் காய்ச்சல்


12. மாரடைப்பைக்குறைப்பதற்குசலரோகம், இரத்தஅழுத்தம் Cholesterol (கொழுப்பு) இல்லாமல் இருப்பதுநல்லதுமேலும் சூடானநீர் அருந்துங்கள் ஆரோக்கியத்திற்கு நல்லது இரவில் ஒருகப் சூடானநீரைபடுக்கைக்குமுன் அருந்துங்கள் இது மாரடைப்பு,பக்கவாதம் ஏற்படாமல் இருக்கஉதவும்.

நன்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



**கணேசலிங்கம் காங்கேயன்** Msc
நிறுவுனர் பூட்டன், பழைய மாணவன்.

# சைவ வித்தியாசாலை வாழ்க

இலங்கை வரலாற்றில் 19ம் நூற்றாண்டு முக்கியமான திருப்பு முனையாகும். கல்வித்துறையில் மாற்றங்கள் ஏற்பட்ட காலம். அரசின் உதவியுடன் மிஷனரிகள் பாடசாலைகளை அமைத்து ஆங்கிலத்திற்கும் கிறிஸ்தவ சமயத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. கிறிஸ்தவ பாதிரிமார் நினைத்தபடி கல்வி தொடங்கிய காலத்தின் நிலையைமாற்ற ஆறுமுகநாவலர் இன எழுச்சிக்கு வழிகோலினார். அவரைத் தொடர்ந்தனர் வடக்கில் உள்ள சைவத்தமிழர்கள்.

திரு.ஆறுமுகம் வேலுப்பிள்ளை உபாத்தியாயர் அவர்கள் நாவலர் பணியைத் தொடர 1872ஆம் ஆண்டு எமது கிராமமாகிய கொல்லங்கலட்டி யில் முப்பது மாணவர்களுடன் ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். எவ் வளவோ சிரமங்களுக்கு மத்தியில் தனது சொந்தப் பணத்தில் ஆரம்பித்தார். தெல்லிப்பழைக் கோவில் பற்றில் ஆரம்பிக்கப்பட்ட முதல் சைவத்தமிழ்ப் பாடசாலை இதுவாகும். வேலுப்பிள்ளை உபாத்தியாயருக்கு உதவியாக இருந்தவர்கள் வேதன உபாத்தியாயர், தண்டிகை உபாத்தியாயர் என்போர் ஆவார்.

வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கும் இப்பாடசாலைக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. ஏனெனில் இவை இரண்டும் ஒரே காலத்தில் ஆரம்பமாயின. வேலுப்பிள்ளை உபாத்தியாயர் சமயப் பற்று, தமிழ்ப் பற்றுள்ளவர். ஆங்கில அறிவும் உள்ளவர். அவரின் முயற்சியால் சமயம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தமிழ், இலக்கணம், வரலாறு என்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன. வேலுப்பிள்ளை உபாத்தியாயர் 1915ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் இறைவனடி சேர்ந்தார். இவரது உறவினர்களான ஆ. கார்த்திகேசு, சூ. கந்தப்பிள்ளை, அவரது மனைவியார் வள்ளிப்பிள்ளை ஆகியோர் முகாமையாளர்களாகக் கடமையாற்றினார்கள்.

1930ஆம் ஆண்டு வேலுப்பிள்ளை உபாத்தியாயரின் மகன் திரு. வே. சிற்றம்பலம் ஆசிரியர் முகாமையாளராகப் பதவி ஏற்றார். இவர் மகாஜனக் கல்லூரியில் ஆசிரியராக, பொற்கால அதிபராக இருந்த திரு.து.ஜெயரத்தினம் அதிபருடன் கடமையாற்றியவர். இவரது முகாமைத்துவ காலத்தில் இப்பாடசாலை பல வழிகளிலும் வளர்ச்சியடைந்தது. அதாவது ஆரம்ப பாடசாலை பிரதம பாடசாலை ஆகியது. 6ஆம், 7ஆம் தர வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. பிரதான மண்டபம் கட்டப்பட்டது. 1931 இல் கனிஸ்ட பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது. 1932 இல் சிரேஸ்ட பாடசாலையாகியது. ஆங்கில பாடத்திற்கு ஆசிரியர் நியமிக்கப்பட்டதுடன் தையல், மனையியல் பாடங்களும் கற்பிக்கப்பட்டன. 1936 இல் இப்பாடசாலையில் 300 மாணவர்களும் 10 ஆசிரியர்களும் காணப்பட்டனர். இது எங்கள் பாடசாலையின் ஒரு எழுச்சிக் காலமாக அமைந்தது.

பணம் கொடுத்து கற்க முடியாத வசதி குறைந்த மாணவர்களுக்கு வாழ வழிகாட்டும் கலங்கரை விளக்காக இப்பாடசாலை தன் இலட்சியப் பாதையில் சென்று வளர்ந்தது. நெசவும் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டது. க.பொ.த சாதாரணதர வகுப்புக்களுக்கு நெசவும், சங்கீதமும் போதிக்கப்பட்டது. 1962 இல் அரசினர் பாடசாலையாகியது பெருமைக்குரிய விடயமாகும்.

பின்னர் இவர்களைத் தொடர்ந்து வந்த திரு. வ. மகாலிங்கம் மற்றும் திரு. வே. தனபாலசிங்கம் ஆகிய அதிபர்கள் காலத்திலும் பாடசாலை பெரிய வளர்ச்சி கண்டது. பின்பு நாட்டில் ஏற்பட்ட சீரற்ற நிலை காரணமாக பாடசாலை இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. 1990ம் ஆண்டு காலப்பகுதியில் மக்கள் ஊரை விட்டு இடம் பெயர்ந்து செல்ல பாடசாலையும் பல இடங்களில் இயங்கி மாணவர் எண்ணிக்கையும் குறைந்து செல்ல 1994 ஆம் ஆண்டு பாடசாலையை மேலும் இயக்க முடியாமல் மூடப்பட்டது. பல கனவுகளுடனும் தூரநோக்குடனும் சமூக அக்கறையுடனும் எமது பெரியோர்களால் நிர்மாணிக்கப்பட்ட பாடசாலை மூடப்பட்டது என்பது நிறுவியவர் குடும்பம் ஆகிய எமக்கும் ஆழ்ந்த கவலையைத் தந்தது.

இவ்வாறான வேளையில் இப்பாடசாலையை எப்படியாவது திரும்ப திறக்க வேண்டும் என்று எல்லோரும் மனதில் உறுதி கொண்டோம். எனது தந்தையும் வேலுப்பிள்ளை உபாத்தியாயரின் பேரனும் ஆகிய மறைந்த சட்டத்தரணி திரு. V.S.கனேசலிங்கமும், வேலுப்பிள்ளை உபாத்தியாயரின் பூட்டனும் சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினரும் ஆகிய நடராஜா இரவிராஜ் அவர்களும் கல்வித் திணைக்களம் சென்று பல முயற்சி களை எடுத்தார்கள். ஆனால் அது உடனே சாத்தியம் இல்லை என்றும் "மக்கள் மீள்குடியேறும் பொழுது நீங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டால் அப் பாடசாலையை மீண்டும் திறப்பதற்கு நாங்கள் அனுமதிப்போம்" என்று கல்வித் திணைக்களத்தினால் உறுதிமொழி வழங்கப்பட்டது.

இவ்வாறான காலத்தில் வீரகத்தி விநாயகர் அருளினால் எமது தந்தை உட்பட பல வழக்கறிஞர்களின் முயற்சியினால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த (மாவை சேனாதிராஜா வழக்காளி) வலி வடக்கு மக்கள் மீள் குடியேற்றம் தொடர்பான வழக்கும் 2010ஆம் ஆண்டு வெற்றி பெற்று மக்கள் மீள் குடியேற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

2011 ஆம் ஆண்டு ஆரம்பமாகியது. மறுபடியும் எனது தந்தையாரும் ஓய்வு பெற்ற அதிபர் திரு. வே.தனபாலசிங்கமும் கல்வித் திணைக்களத்திடம் தொடர்பு கொண்டனர். இதன் பயனாக பாடசாலை புதிய அதிபரிடம் கையளிக்கப்பட்டு மறு உயிர் பெற்றது. அதை தனது வாழ்வில் ஒரு பொன்னாளாக எமது தந்தையார் நினைவு கூறுவார்.

முதன் முதலாக புதிய அதிபருடன் பாடசாலைக்குச் சென்று பார்த்த பொழுது அங்கு கால்நடைகள் கட்டப்பட்டு இடிந்த கட்டிடமாக பாடசாலை இருந்தது இன்றும் எமது மனங்களில் இருக்கின்றது. இத் தருணத்தில் தான் வெறுமனே ஐந்து பிள்ளைகளுடன் செல்வி. வசந்தராணி தம்பிராசா (2013.02.06 - 2017.01.02 காலப் பகுதியில்) அதிபராக நியமிக் கப்பட்டார். குறைந்த மாணவர்கள் எண் ணிக்கையால் அரசாங்கத்திடம் இருந்து பாடசாலைக்கு தேவையான அனைத்து உதவிகளையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்பட்டது. அதிபரின் வேண்டு கோளின்படி பாடசாலை விளையாட்டுப் போட்டி, நிறுவுனர் தினம், வருடாந்த பரி சளிப்பு விழா, போன்ற நிகழ்வுகளுக்கு தேவை யான நிதி உதவிகளை பாடசாலைக்கு வழங்குவதற்கு எமக்குச் சந்தர்ப்பம் கிடைத் தது. பாடசாலை நூலகத்தின் தேவைகருதி அதிபர் எம்மிடம் நூலகத்தை அமைத்து அதற்கு தேவையான புத்தகங்களையும், அதற்குரிய தளபாடங்களையும் தந்துதவு மாறு கேட்டுக் கொண்டதன் விளைவாக மீண்டும் எமக்கும் பாடசாலைக்கும் இடை யிலான உறவை வலுப்படுத்தினார். இதற் கமைவாக 2014ஆம் ஆண்டு எமது தந்தையின் நினைவாக நூலகம் திறக்கப் பட்டு இந்தியா விலிருந்து புத்தகங்கள் பெறப் பட்டு உத்தியோக பூர்வமாக பாடசாலைக் குக் கையளிக்கப்பட்டது. அதேபோன்று பாட சாலை மாணவர்களின் முன்னேற்றத்திற் காக கணினிகள், நிழற்பிரதி இயந்திரங்கள் இரண்டு மற்றும் பாடசாலை பாதுகாப்பிற் கான கண்காணிப்புக் கமராக்கள் (சிசிடிவி கமரா) அன்பளிப்பாக வழங்கும் வாய்ப்பும் எமக்குக் கிடைத்தது.

இதனை விட அன்று 5 மாணவர் களுடன் தொடங்கிய இப்பாடசாலை இன்று 70இற்கும் மேற்பட்ட மாணவர்களுடன் வளர்ந்து இருப்பது எமக்கு பெருமையாக வும் மனதிற்கு நிறைவாகவும் இருக்கின் றது. எமது பூட்டனார், பேரனார் அவர்களின் குறிக்கோள், உழைப்பு, முயற்சி, அர்ப் பணிப்பு எம்மை எப்பொழுதும் பாடசா லையை ஒரு அரிய சொத்தாக நினைக்க வைக்கின்றது. தற்போதைய அதிபர் திரு.நாகேஸ்வரன் பிரியந்தன் அவர்களின் வழிகாட்டலில் பாடசாலை மேலும் வளர்ச்சி யடைந்து வருகின்றது. இன்று இப்பாட சாலை மாணவர்களின் புலமைப்பரிசில் பெறுபேறுகள், இதர போட்டிகள் மற்றும் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர்களின் திறமைகளை வெளிக் கொணரும் கலைக்கூடமாகத் திகழ்வது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

150 ஆவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கும் இத் தருணத்தில் பாடசாலை நிறுவுனர் மற்றும் முகாமையாளரின் உருவச்சிலை களை பழைய மாணவர் சங்கத்தினூடாக நிர்மாணித்து திறந்து வைப்பதற்கு நிறுவிய வரின் பூட்டனும் பழைய மாணவனும் ஆகிய எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றமை மனநிறைவைத் தருகின்றது. நூற்றாண்டைக் கடந்து வந்த இப் பாட சாலை இன்னும் பல நூற்றாண்டுகள் நிலைத்து மேலும் பல மாணவர்களுக்குக் கல்விச் செல்வத்தை வழங்க எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகர் அருள் புரிவாராக!

வாழிய வாழிய சைவவித்தியாசாலை
வாழிய இதன் புகழ் நாளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



செயற்பட்டு மகிழ்வோம் அணி : தரம் – 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





திரு.சி. கௌரிதரன் M.A
ஆசிரியர்
யா/கொல்லங்கலட்டி
சைவத்தமிழ் வித்தியாலயம்.

# திருவிளையாடற் புராணம் புலப்படுத்தும் நடராஜர் வடிவம்

சிவாலயமே சைவப்பண்பாட்டின் உறைவிடம். அங்கு பல்வேறு நிலைகளில் இடம்பெறும் சிவனது மூர்த்தங்கள் காலங்காலமாக சைவப் பாரம்பரியத்தின் பண்பாட்டுத் துறைகளை வளம்படுத்துவதில் பெருந் துணை புரிந்து வந்துள்ளன. சிவாகமங்கள் சுட்டும் முழுமுதற் பொருளாகிய சிவனை வழிபடுவதற்கும், சமய உணர்வினை உள்ளத்தில் வளர்த்தற்கும் சிவாலயத்தில் சிறப்புப் பெறும் சிவமூர்த்தங்கள் அடிப்படையாக விளங்குகின்றன. அச் சிவமூர்த்தங்களின் தெய்வீக வரலாற்றினை அறிவதற்குத் தலபுராணங்கள் பெரிதும் துணை புரிகின்றன. சிவன் திருக்கோலம் கொள்ளும் போது சிறப்பாகப் பொருந்தியுள்ள உருவ உறுப்புக்களின் பெயர்க்காரணம், பெயருக்கான கதை மரபுகள் போன்ற இன்னோரன்ன விடயங்களைத் தலபுராணங்கள் நன்கு புலப்படுத்துகின்றன. சிவனைப்பற்றித் தலபுராணங்கள் குறிப்பிடும் எண்ணற்ற பெயர்கள் அவரது வீரச் செயல்களையும் தெய்வீக மரபுகளையும் அடிப்படையாகக் கொண்டவை.

முக்கண்களாக சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய முச்சுடர்களைக் கொண்டு இறைவன் விளங்குகின்றான். அது மட்டுமின்றி இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி என முச்சக்திகளையும் முக்கண்களைக் கொண்டு விளங்குகின்றான். என காமிகாகமம் குறிப்பிடுகிறது. பட்டினத்தடிகளார் முக்கண் என்பது "முத்தீ வேள்வியில் தொக்கது என்னிடை என்பது ஓர் சுருக்கே" என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நெற்றிக்கண் - ஒப்பற்ற தனிப் பெரும் கடவுள் தன்மையாக விளங்குவதைக் குறிப்பிடுகிறது. ஆன்மாக்கள் சிவனின் பெருங்கருணையை உணர்வதற்கு சிவன் காட்டும் அருட் பார்வை என்பதனை மாணிக்கவாசகர் "கண்ணுதலான் தன் கருணை கண் காட்ட வந்து எய்தி" என்கிறார்.

குனித்த புருவம் - அடியார்களின் குறைகளை குறிப்பால் உணரும் தன்மையை விளக்குவது.

குமிண் சிரிப்பு - புன்முறுவல் காட்டி முப்புரங்களை எரியூட்டினார். புன்முறுவல் ஆன்மாக்களின் மூவினைகளையும் அறுத்து ஆட்கொள்வதாகும்.

செவிகள் - வலது செவியினூடாக உடுக்கை ஒலியை ஏற்று உலகை சிருஷ்டிக் கின்றார். இடது செவியினூடாக மான் ஒலியை ஏற்கின்றார். மான் அகங்காரத்தைச் சுட்டும் ஆன்மாக்கள் அவற்றை அழித்து அடக்கியாளுகின்றார்.

திருமுகம் - எல்லையற்ற ஆனந்தமான தலைமை நயத்தையும் அழகையும் பிரதிபலிக்கின்றது.

திருநீறு - முடிந்த முடிவாக அமைவது. அதனை இறைவன் மேனியில் தரித்து இருப்பது தானும் தன்னைச் சாரும் பொருளும் அனாதி நித்தியமானவை என்பதை அறிவித்ததற்காகும்.

பனித்தசடை - திருமூலரின் கூற்றுப்படி "நுண்சிகை ஞானமாம்" ஒன்றுபட்டு இணைந்த ஞானத்தைச் சுட்டுகின்றது. இதில் விரிந்த சடை உயிர்களுக்கு ஞான மார்க்கத்தைப் போதிக்கும் முறைகளை உணர்த்துகின்றது.

பிறைச்சந்திரன் - தம்மை சரணடைந்துள்ளவர்களை அரவணைத்து அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் இயல்பினைச் சுட்டுவதாகும். மேலும் ஆன்மாக்களின் வினைகளைக் கெடுத்து அபயம் அளித்தலையும் சுட்டும்.

கங்காதேவி - பரமனின் பேராற்றலை விளக்குவதாகும். இறைவனின் எண் குணங்களில் முடிவிலாற்றலுடைமை எனும் குணத்தை உணர்த்துவதாகும்.

ஊமத்தம் பூ - விருப்பு வெறுப்பற்ற தன்மையைக் குறிப்பது.

திருமேனி - இறைவன் மல அழுக்கற்றவன், தூய்மையான தன்மையைக் கொண்டவன் என்பதை உணர்த்தும்.

திருக்கரங்கள் - சிவனின் அருட்கடாட்சம் எங்கும் வியாபித்துப் பரந்திருப்பதை அவரின் 4,8,16 திருக்கரங்கள் உணர்த்தி நிற்கின்றன. குறிப்பாக அவரின் நான்கு திருக்கர அமைப்பினை நோக்கும் போது இறைவனின் உயர்ந்த ஆற்றல்களை அவை வெளிப்படுத்திக் காட்டுகின்றன.

1. வலது முன்கரம் - பிறவித் துன்பக் கடலில் அழுந்துகின்ற ஆன்மாக்களுக்கு அபயமளித்தல் உயிர்களைக் காக்கும் அபய முத்திரையாக விளங்குதல்.
2. வலது பின்கரம் - துடியேந்திய கர அமைப்பானது ஏழிசையின் தோற்றத்தையும் தநு, கரண, புவன, போகங்கள் உருவாக்கப்படும் தத்துவத்தையும் உணர்த்துவதாக அமைந்துள்ளது.
3. இடது முன்கரம் - வரதஹஸ்தமாக குஞ்சித பாதத்தினை நோக்கியதாகக் கைத்தலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அமையும். இது மலபந்தத்தில் கட்டுண்ட ஆன்மாக்களை மலபரிபாகம் செய்து பேரின்பமான மோட்சத்தைக் காட்டி நிற்பதை உணர்த்துகின்றது.

4. இடது பின்கரம் - நெருப்பினைப் பிடித்த கரம் ஆன்மாக்கள் தாங்கி நிற்கும் பிறவியுடலை மாற்றும் சங்காரத் தொழிலின் வெளிப்பாடாக அமைகின்றது.
5. குஞ்சிதபாதம் - ஆன்மாக்களை இறைவனின் திருத்தாளினை அடைய உதவும் திறத்தினை உணர்த்துவதாகும். ஆன்மாக்களுக்கு முத்தி இன்பத்தை அருளுவதாகும்.
6. முயலகன் மீது பதிந்த பாதம் - முயலகன் ஆணவம் அழியா மலமாகும். முக்தி நிலையில் கூட வறுத்த வித்து முளைதிறன் அற்றுக் கிடப்பது போல இருக்கும். முயலகன் மீது பதித்த பாதம் ஆணவமலம் சார்ந்த ஆன்மாக்களை மலபரிபாகம் செய்து மறைக்கும் தன்மையை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

அணிகலன்கள் - இறைவனின் அவையவங்களை அலங்கரிக்கும் அணிகலன்கள் ஒவ்வொன்றும் அவனின் மேலான அருளாற்றல்களை விளக்குவதாய் அமைகின்றது.

1. உபவீதம் - மார்பில் குறுக்காக அடிவயிற்றுப்பகுதிவரை தொங்குவது. இதனைப் பூனூல் எனவும் குறிப்பிடுவர். இது அநாதாரங்களில் எழும் குண்டலின சக்தியைக் குறிப்பதாகும்.
2. உதரபந்தனம் - வேதத்தினையும் அதன் உள்ளமைப்பினையும் பரஞானத்தையும் சுட்டுவதாகும்.
3. கபாலமாலை - இறைவன் பிரம கற்பங்களைக் கடந்த என்றும் நித்தியமானவனாய் விளங்குகின்றான் என்பதைச் சுட்டுகின்றது.
4. பாம்பணி – சடை, கழுத்து, வயிறு, கால் போன்றவற்றில் பாம்புகளை அணிந்துள்ளார். பாம்பு காற்றை உணவாக உட்கொண்டு பொறி உணர்வுகளை அடக்கும் ஒன்றாக விளங்குகிறது. இது யோக மார்க்கத்தின் அடையாளமாகும்.
5. சிலம்பு - "மறை சிலம்பு ஆர்ப்ப" என்பதில் சிலம்பு நான்மறைகளாக விளங்குவதைச் சுட்டுகின்றது.
6. கழல் - ஆன்மாக்களின் கன்ம வினைகளை வேரறுத்து விடுவதாகும்.
7. பத்ர, நக்ர குண்டலங்கள் - இடது காதில் பத்ர தோடும் வலது காதில் நக்ர குழையும் அணிந்திருப்பது ஆணும் பெண்ணுமாய் அமைந்து இருக்கும் இவ்வுலகம் தன்பரத்து வமே என்பதை உணத்துவதாகும்.

திருவாசி - ஓங்கார தத்துவமாய் அமைவது நடராஜர் சிவாயநம எனும் திருவைந்தெழுத்தாக திருவாசியினுள் அமைந்திருப்பது. ஓங்கார தத்துவமாக விளங்குவதைச் சுட்டுகின்றது.

சைவசமய மரபின்படி நடராஜர் ஆடாவிட்டால் பிரபஞ்ச இயக்கமே நின்றுவிடும் என்பது நம்பிக்கையாகும்.

ஏழுவகைத் தாண்டவங்களும் ஐந்தொழில்களும் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

1. காளிகா தாண்டவம் - படைத்தல்
2. கௌரி தாண்டவம் - காத்தல்
3. சந்தியா தாண்டவம் - காத்தல்
4. சங்கார தாண்டவம் - அழித்தல்
5. திரிபுர தாண்டவம் - மறைத்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

6. ஊர்த்துவ தாண்டவம் - அருளல்
7. ஆனந்த தாண்டவம் - ஐந்தொழில்கள்.

சிவன் ஆடிய சிவானந்தக்கூத்து, பொற் பதிக்கூத்து, பொன்தில்லைக்கூத்து, அற்புதக்கூத்து முதலியவை தத்துவ நோக்கம் கொண்டவை யாகும். வேதங்களும் ஆகமங்களும் கீதங்கள், கிளரண்டங்கள், பூதங்கள், புவனம், தேவர், அசுரர், சித்தர், மூன்று மூர்த்திகள், பன்னிரு சூரியர்கள், பதினொரு ருத்திரர்கள், எட்டு வசுக்கள் ஆனந்தக் கூத்தினால் இயங்குகின்றனர் என்பதைத் திருமந்திரத்தில் திருக்கூத்து தரிசனத்தில் பாடல் ஒன்றில் குறிப்பிடுகின்றார்.

வேதங்கள் ஆட மிகு ஆகம மாடக்
கீதங்கள் ஆடக் கிளரண்டம் ஏழாடப்
பூதங்கள் ஆடப் புவன முழுதாட
நாதங் கொண்டாடினான் ஞானானந்தக் கூத்தே

தெய்வ வடிவங்களில் நாதாந்த நடனத்தை வெளிப்பாடு செய்யும் நடராஜ வடிவம் மிகவும் பிரசித்தமானது. இந்நுண்கலைகளில் விக்கிரகக் கலை சிறப்பிடம் பெறுகிறது. இந்த விக்கிரகக் கலை வளர்ச்சியின் உன்னத நிலையைக் காட்டி நிற்பது நடராஜ வடிவமாகும். நடராஜ விக்கிரகம் கோயில் வழிபாட்டில் சல, அசல விக்கிரக வழிபாட்டிற்குப் பொருளாகின்றது. திருவாதிரை விரதம், திருவெம்பாவை ஓதும் மரபு, நடராஜ அபிடேகங்கள், தைப்பூசம் போன்ற விசேட நாட்களில் நடராஜ வழிபாடு இயற்றப்பட்டு வருகின்றது.

சோழ அரசர் காலத்தில் நடராஜ வடிவம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. விக்கிரகக் கலையின் பொற்காலம் அது. சோழரின் பெரு மதிப்புள்ள போற்றத்தக்க கோயிலாக சிதம்பரம் நடராஜர் கோயில் அமைந்திருந்தது. நடராஜ வடிவத்தை நோக்கும் போது சமயஞானமும் நடனக்கலையும் விக்கிரகக் கலையும் விஞ்ஞான ரீதியாக ஒத்துக்கொள்ளக்கூடிய தொழில்நுட்பமும் பொதிந்ததாக காணப்படுவது வியக்கற்பாலது.

அழகியற்கலை நிறைந்து பொலிந்து விளங்கும் நடராஜ திருவுருவம் கண்களுக்கு விருந்தாய் அமைவதோடு ஆன்மாக்களை இன்புறச் செய்து ஆனந்த ஆத்மீக அனுபவத்தை உண்டாக்குவது. தீய எண்ணங்களை அகற்றி நல்லெண்ணங்களைத் தோற்றுவிப்பது, ஈற்றில் வீடு பேற்றை அடைவிப்பது நடராஜ வடிவமாகும்.

தலபுராண மரபில் புதுவளர்ச்சியாகத் தோன்றியவை மதுரைத் திருவிளையாடற் புராணங்கள் ஆகும். அவையாவன.

1. பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணம்.
2. செல்லி நகர்ப் பெரும் பற்றப் புலியூர் நம்பி பாடிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்.

இவை இரண்டும் மதுரைக்கு இறைவனாகிய சுந்தரபாண்டியன் அடியவர்க்கு எளிதின் அருள் வழங்கிய நிகழ்ச்சிகளைத் திருவிளையாடல் எனும் மையக்கருத்து அமையத் தொகுத்து அதனையே மதுரைத் தல புராணம் ஆக்கித் திருவிளையாடற் புராணம் எனும் பெயரால் வழங்கப்படுகிறது. மதுரைத் திருவிளையாடல்களாக வலை வீசியது, பன்றிக் குட்டிகளுக்கு இரங்கியது, கௌரி வீட்டில் பாலனாகியது, கருக்குருவிக்கு நரி பரியாகியது, யானை எய்தது, மண் சுமந்தது, போன்ற மாணிக்கவாசகர் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளும் உள்ளன. சம்பந்தர் வரலாற்றில் சமணரை வெற்றி கொண்ட நிகழ்ச்சியும் உள்ளது.

இறைவன் வெள்ளியம்பலத்தின் கண் கால் மாறியாடிய திருவிளையாடலும் முக்கியத்துவம் பெறுகின்றது. இராஜசேகர பாண்டியன் நடனக்கலையைக் கற்றபோது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தன்னுடம்பில் மிக்க நோவை அடைந்து இறைவனுக்கு ஊன்றிய வலது திருவடி நோகுமே என்றெண்ணி இறைவனுக்கு அளவில்லாத பூசைகள் செய்து மெய்ஞ்ஞானக்கூத்தைக் கண்டு களித்து இறைவா, உமது ஊன்றிய காலைத் தூக்கி தூக்கிய காலை ஊன்றி மாறியாடி என் வருத்தம் போகச்செய்ய வேண்டும் என்று வேண்டினான். இல்லாவிடின் சாவேன் என முயற்சித்தான். உடனே இறைவன் இடக்காலை ஊன்றி வலக்காலைத் தூக்கி மாறி ஆட இராஜசேகர பாண்டியன் வணங்கி எம்பெருமானே இப்படியே எக்காலமும் இந்தத் திரு நடனத்தை எல்லோருங்கண்டு தரிசிக்க வெள்ளியம்பலத்திலே நின்றருள வேண்டும் என வேண்டினான். அப்படியே அன்று முதல் இன்றளவும் கால்மாறியபடியே கடவுள் நின்றருளினார்.

சோமசுந்தரக் கடவுளாகிய பாண்டியன் மீனாட்சிதேவியைத் திருமணம் செய்த பின் திருமணத்திற்கு வந்த பூலோகத்தரசர்களையும் தேவர்களையும் இருடிகளையும் மற்றவர் களையும் உணவுண்ண வாருங்கள் என அழைக்க யாவரும் விரைந்து பொற்றாமரைத் தீர்த்தத்தில் குளித்து வந்தனர். அப்போது வியாக்கிர பாதரும் பதஞ்சலி முனிவரும் வந்து சோமசுந்தரக் கடவுளை வணங்கித் தங்கள் திருநடனத்தை தரிசித்து உண்பதே இங்கு செய்கிறோம் உலகமெல்லாம் உருவாகிய ஒருவருக்கு திருச்சிற்றம்பலம் இதயமாகும். இந்த மதுரை துவாதசாந்தமாகும் என அருளிச் செய்தார். அத்துடன் அரைக்கு மேல் ஏழுலகம் என்றும் அரைக்குக் கீழ் ஏழுலகமென்றும் கூறினார். கடல் போன்ற நிறத்தினையுடைய முயலகன் மீது வடவாக்கினி போன்ற கண்கள் பிதுங்க முதுகு நெரிய வலது காலை ஊன்றி எட்டுத்திக்கையுங் கடந்துள்ள பத்துத் திருக்கரங்களும் அவற்றில் பலம் பொருந்திய ஆயுதங்களும் தேவ மகளிரின் மாங்கல்யம் காத்த நீலகண்டமும் சங்குக்குழையணிந்த காதுகளும் செவ்வானம் போன்ற சடையும் திருவெண்ணீறும் திருநேத்திரமும் அரவக்கச்சும் ஆதிலராகத்தின் முன் போன்ற பல் பிரகாசிக்கின்ற மார்பும் திருப்பார்வையும் புன்முறுவலும் தோன்ற ஆடும் போது சடையிலுள்ள கங்கையலம்புச ஓசையும் கொன்றை மாலையில் வண்டுகள் ஆரவாரிக்கும் ஓசையும் மங்கல வாத்தியங்களின் ஓசையும் வேத மந்திர ஓசையும் அக்கினியின் ஓசையும் சிலம்பின் ஓசையும் எவ்விடங்களிலும் நிரம்பி அடியார் களின் இரண்டு காதுகளிலும் அமுதத்தைச் சொரிய மலராகிதனாகிய சோமசுந்தரக்கடவுள் திருநடனஞ் செய்தார் அத்திருநடனம் விளக்கப்பட்டுள்ளது. திருக் கல்யாணத்திற்கு வந்த தேவர், மாந்தர் எனப் பலருங்கண்டு களித்தனர். இப்பெருமான் திருநடனத்தை திரு வாதிரைத் தினமுதல் பின்வருந் திருவாதிரை வரை பொற்றாமரைத் தீர்த்தத்தில் குளித்து தரிசித்து அவ்விடத்தில் அமர்ந்திருந்து நூற்றெட்டுத்தரம் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஜெபித்து அம்மதுரையில் வசிக்கின்றவர்கள் நினைத்த வரத்தை பெறுவார்கள் என்று கூறப்படுகின்றது.

மேற்காட்டிய வகையில் திருவிளையாடற் புராணம் நடராஜ வடிவத்தைப் புலப்படுத்தும் பல சந்தர்ப்பங்களை நாம் நோக்கலாம். நடராஜ வடிவத்தின் மாண்பினை அறிந்து நடராஜப் பெருமானைத் தினந்தோறும் தரிசித்து உய்வோமாக.

அடிக்குறிப்பு:

1. இந்து கலைக்களஞ்சியம்
2. அண்ணாமலை. சு திருவிளையாடல் சொற்பொழிவுகள்
3. கல்யாண சுந்தர முதலியார் திருவிளையாடற் புராணம் - கால் மாறியாடிய படலம்
4. சுந்தரராமன் நீ. சீ. திருவிளையாடற்புராணம் திருவிளையாடலில் அடியார் மாண்பு
5. சக்தி பெருமான் திருவிளையாடற் சொற்பொழிவுகள்
6. கல்யாண சுந்தரர் திருவிளையாடற் புராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



**சங்கரப்பிள்ளை நகுலேஸ்வரன்**
தலைவர், மாவை கிளானை ஞான வைரவர்
ஆலய பரிபாலன சபை, கிளானை, கொல்லங்கலட்டி



# பசுமை நிறைந்த பள்ளிப் பருவ நினைவுகள்

கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயம் 150ஆம் ஆண்டுகள் காலத்தால் அழியாது நிலைத்து நிற்கும் பெயர் எனது வாழ்வில் எழுபத்தெட்டு ஆண்டுகள் கடந்துள்ளன. நான் எண்களையும் எழுத்தை யும் அறிந்து கொள்வதற்கான அத்திபாரம் இடப்பட்ட இடம். 1940 களின் இறுதிக்காலமாக அல்லது 1950ம் ஆண்டுகளின ஆரம்பமாக இருக்கலாம் நான் விருவறிந்து பள்ளிக்கூடத்திற்குள் காலடியெடுத்து வைத்த காலம். ஊர்ப் பேச்சு வழக்கில் வேலுப்பிள்ளை வாத்தியாருடைய பள்ளிக்கூடம் என நிறுவியவருடைய நினைவினை நிலைக்க வைக்கும் பண்புடன் பள்ளிக்கூடத்தின் பெயர் அப்படிப் பேச்சு வழக்கில் நிலைத்திருந்த காலம்.

எனது இளமைப்பருவத்தில் எனது பார்வைக்கு மிகவும் பிர மாண்டமாகத் தெரிந்த பாடசாலையின் மண்டபம். இன்னமும் மனதில் அழியாது நிலைத்து நிற்கும் படிமம் பாரிய அந்த மண்டபத்தின் தெற்குப் பக்க அகண்ட நெடிய சுவரில் தடித்த எழுத்தில் பதித்திருந்த பாடசாலையின் பெயர் அதனுடன் இணைந்து உயர் திரு. வேலுப்பிள்ளை என ஸ்தாபகரின் பெயர், ஸ்தாபித்த ஆண்டு 1872 இவை பள்ளிக் கூடத்தின் நிறுவுனரையும் அவர் அதற்காக கால்கோளிட்ட காலத்தினையும் நினைவில் நிறுத்தும் மரபு.

இதனுடைய நீட்சிதான் நிறுவுனருடைய வழிவந்த பேரன் திரு. கமலக்கண்ணனுடன் ஊர் கூடி முன்னெடுக்கும் 150 ஆவது ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவினையொட்டிய பாடசாலை மேம் பாட்டு முயற்சிகள் பெரிதும் போற்ற வேண்டி யவை. இந்த சந்தர்ப்பத்தில் இந்த சிறிய செய்தியைப் பதிவிட எனக்குக் கிடைத்த வாய்ப்பையிட்டு நானும் பெருமைப்படுகின் றேன். ஊரவர் பலருமே சொல்லிப் பெரு மைப்படும் விடயம் பிள்ளையார் கோவிலும் கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலையும் எங்களது இரு கண்கள். எங்களது வாழ்வு டன் பின்னிப் பிணைந்து விட்டவை. எனது வளரிளம் பிள்ளைப் பருவ காலம் 1948ஆம் ஆண்டுகளில் இன்று பிறந்த பிள்ளை சுயமாக எழுந்து நடந்தால் போதும் play school லில் சேர்த்து விடுவது போல முன்னைய காலத்தில் மூன்று வயதென் றால் வித்தியாரம்பம் ஏடு தொடக்கல் என்பது ஒரு நியதியாகக் கடைப்பிடிக்கப்பட்ட காலம்.

நான் பள்ளிக்கூடத்தில் சேர்ந்த காலத்தில் பெரியார் கந்தையா வாத்தியார் அவர்கள் அதிபராகப் பணியாற்றிய காலம். அவருடைய கம்பீரமான தோற்றம் இன்ன மும் எனது மனதில் நிழலாடுகின்றது. எப் பொழுதுமே தூய வெள்ளை வேட்டி நன்கு அழுத்திய நாசனல் மேலாடை கழுத்தைச் சுற்றி மாலையாக முழங்கால் வரை நீண் டிருக்கும் உத்தரீயம் (சால்வை) தினசரி தொலை தூரத்திலிருந்து அதுவும் பள்ளிக் கூடத்திற்கு நேரந்தவறாமல் நீண்ட நடையி லேயே வந்து சேருவது வழமை. நாங்கள் எங்களது பிற்காலப் பயிற்சிகளில் கற்றுத் தெரிந்து கொண்ட தலைமைத்துவம் (leadership quality) என்கின்ற இந்தப் பண்புகளை அந்தக் காலத்திலேயே அவர் களிடத்திலே துலங்கிய விடயத்தினை, அவர்கள் அந்த நாட்களில் பள்ளிக்கூடத் தினை நிர்வாகஞ் செய்த முறைமைகளை, முகாமைத்துவத் திறனை நினைத்து நாங் கள் அதிசயிக்கவும் பெருமை கொள்ளவும் வேண்டும். அதிபராக இருந்த கந்தையா வாத்தியார் மட்டுமல்ல ஏனைய அனைவரி டத்திலும் நாங்கள் இன்றும் நினைத்துப் பெருமை கொள்ள வேண்டிய அளவிற்கு ஆளுமைப் பண்புகளை கொண்டவர்களாக இருந்துள்ளார்கள்.

நெடிதுயர்ந்த தோற்றத்துடன் உடலை முற்றாக மூடிய வெள்ளை ஆடை தரித்த அதிபர் கந்தையா வாத்தியாரிடத்தில் நாங்கள் பார்த்த பண்புகளில் எதுவுங் குறை வற்றதாக சைவப் பெரியார் ஏரம்பு வாத்தி யாரிடத்துங்கண்டோம். தோற்றத்தில் குறு முனி அகத்தியர் போல அரை நிர்வாணத் தினை தூய வெண்ணிற ஆடையால் (சால்வை) போர்த்தி மறைத்தப்படி முதிர்ந்த ஞானிக்குரிய தோற்றப் பொலிவுடன் மெலிது ஊர்ந்த நடையும் அவர் மாணவர்களுக்குத் தமிழை அழுகுற கற்பிக்கும் பாங்கும் மனதை விட்டகலாத நினைவுகள். சின்னத் துரை வாத்தியார் இவரும் அளவெட்டியி லிருந்து அம்பனைச் சந்தி வழியாக நடையி லேயே பள்ளிக் கூடம் வந்து சேருவார். தூய வெண்ணிற கதர் உடை நிமிர்ந்த நடை எப்பொழுதுமே இவரது தோளில் பாரிய புத்த கச் சுமை இருக்கும். இவர் ஒரு நடமாடும் கொப்பி, புத்தகக் கடை ஆனால் ஒரு இலாப நோக்கங் கொண்ட கொப்பி, புத்தக வியா பாரி அல்ல.

நீண்ட காலம் மாணவர்களது புத் தகங்கள் கொப்பிகள் எழுது பொருட்களுக் கான சேவை வழங்குனாராக இவரது பணி அமைந்திருந்தது. வார இறுதி நாட்களில் யாழ்ப்பாணப் பட்டணத்திலுள்ள கடைகளுக் குச் சென்று தேவையானவற்றை கொள் வனவு செய்து வருவதை வழமையாகக் கொண்டிருந்தார். நாங்கள் கொல்லங்கலட் டிப் பாடசாலையை விட்டு மகாஜனானக் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்த காலத்திலும் எங்களது வழிப்பயணத்தில் தொடர்ந்தும் சின்னத்துரை வாத்தியாரை அவருடைய புத்தகச் சுமையுடன் அவரைக் கடந்து போவதும் ஒரு நீண்டநாளைய சந்தோசமான நிகழ்வு ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பா என்ற பெயருடன் மூன்று ஆசிரியர்கள், மாணவர்கள் தங்களுக்குள் இருவரை அவர்களது உடல் குறைபாடு களை அடைமொழியாக வைத்து அடை யாளப்படுத்திக் கொள்வார்கள். அடுத்தவரை அவரது ஊர்ப் பெயரை அடை மொழியாகக் கொண்டு அடையாளப்படுத்துவது வழமை. மாப்பாண செல்லப்பா வாத்தியார் கூடுதலாக உயர் வகுப்பு மாணவர்களுக்கு கல்வி கற் பிப்பது வழமை. திடகாத்திரமான உடற்கட் டமைப்பு. வயது கூடிய மாணவர்களுக்கு விளையாட்டுக்களைப் பயிற்றுவிப்பார். பிள்ளையார் கோவில் தெற்கு வீதிதான் ஓட்டப் பந்தயத்திற்கான ஓடு பாதை. செல்லப்பா வாத்தியார் வேட்டியை மடித்துக் கட்டியபடி இளவயது மாணவர்கள் எட்ட முடியாத தூரத்தில் அவர்களைப் பின்தள்ளி ஓடுவார்.

ஆரம்பத்தில் இரண்டு பெண் ஆசிரி யைகள் பாக்கியம் ஆசிரியை மற்றவர் நல்லம்மா ஆசிரியை அந்த நாட்களில் ஆசிரியைகளை அக்கா என்றே அழைப்பது வழமை. பாக்கியம் ஆசிரியை தினசரி ஒற் றைத் திருக்கை வண்டியிலே பாடசா லைக்கு வந்து போவதை வழமையாகக் கொண்டிருந்தார். நல்ல இளங்காளையைப் பூட்டிய திருக்கல் வண்டியில் அவர் கணவர் மிக வேகமாக வண்டியை ஓட்டி வருவதும் எங்களுக்கு மிகவும் இரசனை மிகுந்த காட்சியாகவே இருக்கும். பாக்கியம் ஆசி ரியை சற்று கடும்பிடியானவர் எப்பொழு துமே மாணவர்களை அதட்டி உருட்டிக் கொண்டே இருப்பார்.

அடுத்தவர் நல்லம்மா ஆசிரியை இவர் மிகவும் அமைதியான பண்பைக் கொண்டவர். தானுண்டு தன் வேலை களுண்டு என எப்பொழுதுமே ஒதுங்கியி ருக்கும் பண்புடையவர். அவர் சற்று தொலை தூரத்திலிருந்து தினசரி பயணிப் பவர். இணுவிலிலிருந்து மாவிட்டபுரம் வரை பஸ் பிரயாணம் தொடர்ந்து பாட சாலை வரை நடைப்பயணம். இவர் நெசவு ஆசிரியை. பள்ளிக்கூடத்தின் தலைவாயி லாக அமைந்திருந்த பாரிய மண்டபத்தை அடுத்து நீண்ட கொட்டகை அதில் கிழக் குப்பக்கமாக சலாகைகளால் சட்டமிட்டு அறை போலத் தடுக்கப்பட்டிருந்த இடத்திற் குள்தான் நெசவுக் கற்கைக்கான இடம். அதற்குள் கைத்தறிகள் இரண்டு இருந்தன. கைதறிகள் இரண்டும் இருந்த இடத்தை அண்மித்ததுதான் எனது புதுப் பிரவேசமாக அமைந்த அரிவரி வகுப்பு. எனது அரிவரி வகுப்புக் காலம் முழுவதும் அசைவியக்கம் எதுவுமற்ற நிலையிலிருந்த தறிகள் இரண் டையுமே வெறித்துப் பார்ப்பதும் புரியாத புதி ராக அலுத்துப் போவதும் வழமையாக விருந்தது.

எங்களுடைய கொல்லங்கலட்டிப் பாடசாலை ஆசிரியர்கள் நல்லாசிரியர்கள் என்கின்ற வரன்முறைக்கு முன் உதாரண மானவர்கள். நடையாக நடந்து அதுவும் பாடசாலைக்கு நேரந் தவறாது வருகை தருவதும் உரிய நேரம் வரை பாடசாலை யில் தரித்து இருப்பதும் அலுப்புச் சலிப்பின் றிப் பாடம் நடத்துவதும் இவையெல்லாம் இவர்களுக்கு எப்படித்தான் சாத்தியமாகியது இல்லை எப்படித்தான் சாத்தியமாக்கிக் கொண்டார்கள்.

மரபார்ந்த விடயமாக மூன்று வயதில் ஏடு தொடக்கியிருந்தாலும் பல நாட்களின் பின்னர்தான் அரிவரி வகுப்பில் சின்னத்துரை வாத்தியார் கையில் நான் ஒப் படைக்கப்பட்டேன். ஒப்படைக்கப்பட்டேன். என்பதற்கான கருத்து என்னவெனில் அரிவரி வகுப்பில் பிள்ளைகளை இணைக் கும் பெற்றோர்களிடத்தில் இருந்த சின்னத் துரை வாத்தியார் பற்றிய அதீத நம்பிக்கை. பள்ளிக்கான ஆயத்த நிலை அற்ற. புதிதாகப் பள்ளியில் தங்களை இணைத்துக் கொள் வதற்குப் பழக்கப்படாத பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

(தொடர்ந்தும் அழுகுணிகளாக இருப்பவர் கள்) எந்தவித செயற்பாடுகளிலும் ஈடுபடு வதில் ஆர்வமற்றவர்கள் செயற்பாட்டுத் திறன் அற்றவர்கள் இவர்களை கையாளுந் திறன் வரப் பெற்றவர். சின்னத்துரை வாத்தி யார். எனது கொல்லங்கலட்டிப் பாடசாலை யுடனான முதல் உறவும் இணைப்பும் இவருடனேயே தொடங்கியது.

என்னுடைய இளமைக்கால மனப் பதிவுகள் பலவற்றிற்கும் காலப் போக்கில் தான் என்னால் சரியான அர்த்தங்களைப் புரிந்து கொள்ள முடிந்தது. பள்ளிக்காலத்தில் விசேட நிகழ்வுகளின் பொழுது பிரதானமாக நவராத்திரி விழாக்காலங்களில் பாடசாலை விழாக்கோலத்துடன் களைகட்டி இருப்பது வழமை. ஒன்பது நாட்களும் பிள்ளையார் கோவிலில் அம்மன் வாயிலிலேயே மாண வர்களெல்லோருமே கூடி வழிபாடுகளில் ஈடுபடுவது வழமை. முக்கியமாக விஜய தசமி அன்று பிள்ளையார் கோவிலிலே வித்தியாரம்பத்திற்கான ஆரம்ப நிகழ்வுகள் முடிவுற்றதும் பிள்ளைகளும் பெற்றோர் களும் பாடசாலை மண்டபத்திற்குள் ஒன்று கூடுவது வழமை. நாள் படிப்பு என்றொரு மரபார்ந்த நிகழ்வு.

இதற்கான முன்னாயத்தங்களில் ஆசிரியர்களும் உயர் வகுப்பில் கற்கும் வளர்ந்த மாணவர்களும் ஈடுபடுவார்கள். வழமையாக அதிபரை விட இன்னுமொரு பெரியார் முன்னின்று எல்லாவற்றையுமே வழிநடத்துவார். பாடசாலையின் காரியங் களிலெல்லாம் கோயிலிற்கும், பள்ளிக்கூடத் திற்கும், வீட்டிற்குமிடையே முக்கோணமாக குடு குடு நடையில் தலையாரியாகச் செயற் படுகின்றார். தினசரி நாங்கள் அவரைப் பார்க்கின்றோம். எப்படி அதிபர் கந்தையா வாத்தியாரின் நடை, உடை பாவனை களைக் கண்டோமோ, உயரிய தோற்றம் இல்லாவிடத்திலும் மற்றெவ்வகையிலும் சோடை போகாத தோரணையை ஊகித் தால் அதிபருக்கும் மேலாக தலையாரியாகச் செயற்படுந் தோரணை இதற்கான பின் புலத்தை நாங்கள் பிற்காலத்தில்தான் தெரிந்து கொண்டோம். பள்ளிக்கூடத்திற் கென ஒரு முகாமையாளர் என்றொரு பதவி நிலை இருப்பதையும் நாங்கள் தலையாரி என அறிந்து கொண்டவர் பெரியார் நிறுவுனர் பெருந்தகை வேலுப்பிள்ளை அவர்களின் புதல்வர் சிற்றம்பல வாத்தியார் அவர்தான் முகாமையாளராக செயலாற்று கிறாரென்பதையும் அறிந்து கொண்டோம்.

நாங்கள் மிக மோசமான யுத்த நெருக்கடிகளுக்குள் தப்பிப் பிழைத்தவர்கள். 2009ஆவது ஆண்டு வரை நாங்கள் எங்களுடைய இடங்களுக்கு மீளவும் திரும்புவோமா என்ற நம்பிக்கையை இழந்த நிலையில் வாழ்ந்திருந்தோம். 2009ஆம் ஆண்டின் இறுதியில் நாங்கள் எங்களது இடங்களுக்கு திரும்பிய பின்ன ரும். மிக நீண்டகாலமாக கொல்லங்கலட்டிப் பாடசாலை மனித நடமாட்டமற்ற கட்டடங் கள், குட்டிச் சுவர்களுடன் இப்படியே நீடிக் குமோ! என்ற மனப்பீதி பலருக்கும் இருந் தது. அதிகம் பரபரப்பின்றி மீண்டும் துளிர் விடத் தொடங்கியுள்ளது. இன்று நிறுவுனர் வழிவந்த திரு. கமலக்கண்ணனின் தூண்டு தல்களும், முன்னூடுகளும் ஊரையுங் கூட்டி நிற்கின்றது. இப்பாடசாலை பெரு விருட்சமாகி நிழல்பரப்பி நிலைத்து நிற்க ஊர்கூடி நீரூற்றியும் உரமிட்டும் வளர்த்திடு வோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. கலாராணி சுகர்ணாராஜ்
MR in Tamil
யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை



# சிறந்த ஆசிரியருக்குரிய பண்புகளும் கற்பித்தல் முறையும்

**"கடமையோர் இன்பம்"** என்பது போலவே **"இன்பம் ஒரு கடமை"** இதுவே ஆசிரியத்துவத்தின் தொனியாக அமைய வேண்டும். **"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்"** என்பது முதுமொழி. ஆசிரியர் கடவுளுக்குச் சமமானவர் உண்மைதான் இறைவனால் படைக்கப்பட்ட குழந்தைகளை நன்னெறிப்படுத்தி ஊக்குவிப்பவன் ஆசிரியனே ஆவான். ஆசிரியத் தொழில் புனிதம் மிக்கது. **"நல்ல ஆசிரியர் இறக்கும் வரைமாணவன்"** அதாவது ஆசிரியர்கள் அறிவை வளர்க்கும் நூல்களைத் தொடர்ந்தும் கற்றவண்ணம் இருக்க வேண்டும். நல்ல ஆசிரியருக்குரிய பண்புகளையும் கற்பித்தல் முறை எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றியும் நன்னூல் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

**நல்லாசிரியருக்குரிய பண்புகள் :-**

**"குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை**
**கலைபயில் தெளிவு கட்டுரை வண்மை**
**நிலமலை நிறை கோல் மலர் நிகர்மாட்சியும்**
**உலகியலறிவோடுயர் குணமினை யாவும்**
**அமைபவன் நூலுரை யாசிரியனே"**

பண்பான உயர் குடியில் பிறந்தவனாகவும், உயிர்கள் மீது இரக்கமுடையவனாகவும், கடவுள் பக்தி உடையவனாகவும், பெருந் தகைமையும் பல நூல்களைக் கற்ற தேர்ச்சியும் கூற எடுத்துக் கொண்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பொருளை மாணவர் எளிதில் உணரும்படி சொல்லும் வன்மையும், நிலத்தையும், மலையையும், தராசுக் கோலையும், பூவையும் ஒத்திருக்கின்ற குணங்களும் போன்ற நற்குணங்கள் பெற்றிருப்பவரே நூலைக் கற்பிக்கும் ஆசிரியர் ஆவார்.

**நிலம் - ஆசிரியர்**

நிலமானது பெருஞ் சுமைகளைத் தாங்கும் வல்லமையுடையது மனிதர்கள் தன்னைத் தோண்டினாலும், கொத்தினாலும் பொறுக்கும் தன்மையுடையது. அதே வேளை மனிதர்கள் செய்யும் முயற்சி களுக்கு பயனைத் தருவது. அதேபோல நல்லதொரு ஆசிரியர் நிறைந்த கல்வி உடையவராகவும், சில முரட்டு மாணவர் களின் இகழ்ச்சியைப் பொறுக்கும் இயல் புடையவராகவும், மாணவர்கள் செய்யும் முயற்சிக்குத் தக்க அவர்களுக்கு பயனைத் தருபவராகவும் இருத்தல் வேண்டும்.

**மலை - ஆசிரியர்**

மலையானது எப்படிப்பட்ட வலிமை யுடையவரானும் அசைக்கப்படாத உரு வத்தை உடையது. தூரத்திலிருந்து காணக் கூடிய உயர்ச்சியுடையது. மழையற்ற வரண்ட காலத்திலும் நீர் வளத்தைக் கொடுக்கக் கூடியது. அதேபோல் நல்லாசிரிய ரானவர் நிறைந்த புலமையை உடையோ ராலும் அசைக்க முடியாத கல்வி அறிவுடை யோராகவும், நெடுந்தொலைவில் உள்ளவ ராலும் அறியப்படும் உயர்ச்சி உள்ளவராக வும், பொருளாதார வசதியற்ற பிள்ளை களுக்கு கல்வி வழங்கும் கொடை உள்ளம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**தராசுக்கோல்**

தராசுக் கோலானது பொருளின் அளவை ஐயமின்றி சரியாகக் காட்டும். இரு தட்டுகளுக்கும் நடுவே நின்று உண்மை அளவைக் காட்டும் அதேபோல ஆசிரியரும் தம்மிடம் கல்வி பயிலும் மாணவர்களின் சந்தேகங்களை தீர்க்க வேண்டும்.

**பூ - ஆசிரியர்**

பூவானது மங்கள காரியங்கள் அனைத்திலும் பயன்படுவது. தான் இல்லாது எச்செயலையும் அழகு செய்யாது. காண்பவருக்கு மகிழ்ச்சியளிப்பது. மெல்லிய குணமுடையது. மலர்தற்கே உரிய காலத் தில் முகம் (இதழானது) விரிவது. அதே போல் ஓர் ஆசிரியர் இல்லாமல் நல்ல நிகழ் வுகள் சிறப்பாக நடைபெற முடியாத நிலையை அவர் சமூகத்தில் ஏற்படுத்த வேண்டும். கண்டோர் மகிழ்ச்சி அடையும் வண்ணம் இருக்க வேண்டும். மென்மை யான குணமுடையவராகவும் கற்பிக்கும் காலத்திலே முகமலர்ச்சி உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**கற்பித்தல் முறை :-**

ஆசிரியர் மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது உரிய காலத்தையும் இடத்தையும் செவ்வையாக ஆராய்ந்து பார்த்து தூய்மையான இடத்தில் இருந்து தான் வழிபடும் கடவுளைத் துதித்து கற்பிக் கும் பொருளை மனதிலே முன்னிறுத்தி விரைந்து சொல்லாமலும், கோபிக்காமலும், விருப்போடும் முகம் மலர்ந்து தனது அன்பு என்னும் கூரிய ஆயுதத்தால் மாணவர் களது கவனத்தைப் பெற்று அவர்களது மனங்கள் ஏற்றுக்கொள்ளும்படி மாறு பாடில் லாத மனத்துடன் மகிழ்வோடு கற்பிக்க வேண்டும்.

இதனை,

**"ஈதலியல்பே யியம்பும் காலைக்**
**காலமு மிடனும் வா விதி நோக்கிச்**
**சிறந்துழியிருந்து தன் தெய்வம் வாழ்த்தி**
**உரைக்கப்படும் பொருளுள்ளத் தமைத்து**
**விரையான் வெகுளான் விரும்பி**
**முகமலர்ந்து**
**கொள்வோன் கொள்வகை**
**யறிந்தவனுளங்கொள"**

என நன்னூலார் குறிப்பிடுவது மனங்கொளத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





**திருமதி சிவராணி கங்காதரன்**
சட்டதரணியும்
பிரசித்த நொத்தாரிசும்

# வித்தியாசாலை நினைவுகளில் நான்

நூற்றைம்பது வருடங்கள் கடந்த இன்னமும் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் உன்னதத்தின் இருப்பிடமாக விளங்கும் எனது பாடசாலையில் நானும் ஒரு ஆரம்பக் கல்வி மாணவியாக இருந்திருக்கின்றேன் எனும் போது சொல்லமுடியாத அன்பு இப்பாடசாலையில் எனக்கு ஏற்படுகிறது. சின்னஞ்சிறுவர்களாக ஆடிப்பாடித்திரிந்த அந்த நாட்களை நினைத்திடும் வேளை என்னை அந்தக் காலத்திற்கே அழைத்துச் செல்கிறது. நானும் சக மாணவிகளும் திருநீற்றுடன் காலை வேளையில் பாடசாலைக்குச் சென்று விடுவோம். கதைகள் சொல்வதும் எங்கள் வீட்டு சங்கதிகளைப் பகிர்ந்து அளவளாவுவதும் எமது பொழுது போக்காக இருந்தாலும் வாத்தியார் வகுப்பறைக்குள் நுழைந்ததும் தங்கப்பதுமைகள் போல அமைதியாகிவிடுவோம். பாடங்களில் அதிக கவனம் செலுத்தி மிகக் கவனமாகப் பாடங்களோடு ஒன்றித்துப்போய்விடுவோம். பசுமரத்து ஆணி போலப் பதியும் அந்தப் பாடவிதானங்களை வீட்டுக்குச்சென்று அம்மாவிடம் பகிர்ந்து கொள்ளும் போது அளவில்லாத ஆனந்தம் அடைவோம். படிப்பிலும் விளையாட்டுகளிலும் முதன்மை பெற்று வரும் எமக்கு ஆசிரியர்களே பேருதவியாக இருப்பார்கள். எனது தந்தை கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாலயத்தில் கற்பிற்கும் அன்பான ஆசிரியர். அவரது ஊக்கமளிக்கும் மனப்பான்மை எனக்கு இன்னமும் உற்சாகத்தை தரும். அப்பாவினது அன்பும் கண்டிப்பும் என்னுள் ஒரு உத்வேகத்தை வளர்த்தது. இன்று நான் ஒரு சட்டத்தரணியாகவும் பிரசித்த நொத்தாரிசு ஆகவும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பதில் நீதவான் ஆகவும் கடமை புரிகின்றேன் என்றால் அன்று என்னை வழிநடத்தியவர்களையே சாரும்.

ஞாபகங்கள் நேசிக்கபட இந்தப் பாடசாலை எனக்குள் ஆணிவேராக ஊன்றிவிட்டது. படிப்படியாக சமுதாயத்தில் முன்னேற்றம் கண்டு நிற்பதற்கு அன்று எனது ஞாபகமாகி நினைவாகி எனக்கு ஓர் உத்வேகத் தன்மையை உயிராக்கி வெளிப்படுத்திய ஆசிரியப் பெருந்தகைகளுடன் எனது தந்தையின் அறிவுரைகளும் தான் காரணம். ஒரு நூற்றாண்டைக் கடந்து இன்று நூற்றி ஐம்பதாவது வருடமதில் கால் பதிக்கும் என் பாடசாலை ஒரு வரலாற்றுச்சான்று. ஏராளமான கல்வியாளர்களை உருவாக்கித் தலைநிமிர்ந்து நிற்கும் சைவப்பாடசாலையாக மிளிர்ந்து நிற்கின்றது. இன்று எங்கள் பாடசாலையில் ஆரம்பக்கல்வி கற்றவர்கள் பலர் வித்துவான்கள், டாக்டர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்களாக, வருபவர்களுக்கு இப்பாடசாலையால் தான் பெருமை உண்டாகி உள்ளது.

"கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்கு தக" எனும் முதுமொழிவாக்கு எம் இதயத்தில் குடிகொண்டதாகும். "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்க்கு தோன்றலின் தோன்றாமை நன்று" மொழியும் சமயமும் வலிமைகுன்றி நின்ற அந்நாளில் திருநீற்றின் மகிமை பெருமை பெற்றது என்பதற்கமைய முன்னால் எங்





கள் பாடசாலையின் குலதெய்வமாக வீரகத்தி பிள்ளையார் பளிங்குக்கல் ஒளி போல் விளங்குகின்றார்.


"நீறில்லா நெற்றி பாழ் என்ற வார்த்தை அமுதத்தை அடிக்கடி எமக்குப் புகட்டிப் பாடசாலை வருகையிலேயே நாம் புனிதமான வெண்ணீறு அணிந்து பாடசாலைக்கு வருகை தருவோம். அந்தக் கற்கையின் உண்மை இன்று வரை திருநீற்றுடனேயே வாழ்கின்றோம்.

புகழும் பெருமையும் புனிதமான வாழ்க்கையும் அறமும் தமிழும் அருகிடாச் செல்வமாக வித்தாகி விருதுகளாக, ஆலமரமாக நாம் வாழ்வதற்கு எமது சிறார்காலம் மறக்கமுடியாத ஒரு பொற்காலமாகும். 25 வருடங்களாக மாணவர்களை விருட்சங்களாக வளர்த்த ஆசிரியப் பெருந்தகையாளர்களது கல்வி கற்பித்துத் தந்த நாட்கள் எமக்குள் பல கதை பேசுகிறது. திருவாளர் சிவானந்தையர், திருவாளர் சின்னத்துரை, ஆசிரியர் சங்கரப்பிள்ளை, திருவாளர் ஆ.க.சுப்பிரமணியம் எனது தந்தையார் மற்றும் தாய் போல திருமதி ப.கந்தையா இவர்களது உடல் மறைந்தாலும் விதைத்த விதைகள் அறுவடையாகிக் கொண்டிருக்கின்றது என்றால் நாம் எவ்வளவு பெருமையுடையவர்களாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதற்கு இதை விட என்ன சான்று வேண்டும்.

ஆத்மீக ஞானத்தைப் பெற அறிவுரைக் கருத்துக்களை அள்ளி விதைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



தெளித்த ஞானம் உறுதியாக என்றும் நாம் நல்ல சமுதாயத்தைக் கட்டியெழுப்ப அத்தி வாரக் கல்வி ஆரம்பக் கல்வி அமைந்துவிட் டால் உருவான பெருமையாளர்களாக நாம் மாறி விடுவோம் என்பது உறுதி. எமது தந்தையார் வறுமையாக வாழ்ந்த பிள்ளை களுக்கு கொப்பி, புத்தகங்கள், பேனைகள், பென்சில்கள் இலவசமாகக் கொடுத்துக் கிராமப் பிள்ளைகளுக்கு அறிவையும் ஞானத்தையும் புகட்டியுள்ளார். எமது தந்தையார் ஆற்றிய பணி மிகையாகாது. அதனால் எங்கள் வீடு இன்றும் "வாத்தியார் வீடு" என்ற பட்டப்பெயருடன் உள்ளது. அவ ரின் விதை தான் இன்று எங்களின் குடும் பத்தாருக்கு அறிவுத்தகைமையை உண் டாக்கிய வித்தாகும் என்பது மிகையாகாது.

இனிவரும் காலத்து மாணவ மணிகளே துணிந்து கற்றுக்கொள் ளுங்கள். பெருமை பொருந்திய மேதகு அறிவாளர்களை பல துறைகளில் எமது அன்னையாக விளங்கும் கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாசாலை தலை நிமிர்ந்து நிற்கிறாள். உங்கள் வழி நிற்ப வர்கள் என்னைப் போன்றவர்கள் துணை யாகி நின்று பல வழிகளில் உதவியவர்கள் விதைத்தவைகள் தான் அறுவடையாகும். உங்கள் வழியும் என்னைப்போன்றவர் ஆசிர்வாதமும் எப்போதும் இந்த மண்ணுக் குக் கிடைத்தால் நாம் என்றும் உயர்வான வர்களே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media










பரிசளிப்பு விழாவின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



ஆரம்பப்பிரிவு மாணவர்களின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



கால்கோல் விழாவின் போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



தைப்பொங்கல் விழாவின் போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media







நவராத்திரி நிகழ்வுகளின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



நவராத்திரி நிகழ்வுகளின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



**திருமதி. கஜனி சஜந்தன்** (B.F.A, P.GDE)
ஆசிரியர், யா/கொல்லங்கலட்டி
சைவத்தமிழ் வித்தியாலயம்

# போதையை ஒழிப்போம்



போதை வஸ்து எனப்படும்
பொல்லாத அரக்கன்
பாதை மாற்ற முயலுவான்
மயங்கி விடாதே மனிதா !!!

மயங்கியவர் இயங்கவில்லை
இயங்கியவர் மயங்கவில்லை
இயன்றளவு தவிர்த்திடுவீர்
இனிய வாழ்வு பெற்றிடுவீர்

வியாபாரம் சூடுபிடிக்க
யோசனையும் இல்லாமல்
எதிர்காலத் தலைவர்களை
நாசமாக்கும் ஒரு மருந்து

முதல் நாளில் ஐந்து ரூபாய்
மாசநாளில் பத்து ரூபாய்
சில நாளில் 50 ஆகும்
வரும் நாளில் நூறாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பஞ்சுமிட்டாய் போன்றதில்
கலக்கப்பட்ட அம் மருந்து
ஐந்து ரூபாய்க்கு விற்கப்பட்டு
கைகளில் நடமாடிற்று

செலவிற்கோ பணமில்லை
மனதிற்கோ மருந்தெண்ணம்
களவிற்கோ தூண்டிவிடும்
கண்மணி அளவு மருந்து

ஈழ வள நாட்டிலே
வடமாகாணத்திலே
ஞானம் பெற்றோர்கள்
அதிகமாக அறிந்து

யாரோ ஏவிய எறிகணைபோல
யாழ்குடாநாட்டிலே வந்ததுவே
பாரே பயந்திடும் போதைப் பொருள்
பொருளேன் வந்ததுவே நம் நாட்டிற்கு வந்ததுவே

கல்வி கற்கும் சமூகத்தை
கட்டிப்போட வந்ததுவே
நல்ல வித்தைகளைக் கற்று
நல்ல தேர்ச்சி பெற்ற போது

விண்ணில் இருந்து விழும்
விண் கற்களைப் போலவே
சொல்லொணாத் துன்பங்களை
மண்ணில் வந்திணைந்த

போதையை வென்றழித்து நல்
பாதையைக் காட்டுவீர்
பேதையர் போல் இல்லாது
மேதையராய் எண்ணிடுவீர்

நாம் வாழும் சமூகம்
நல்லபடி இருக்க
மேல் காணும் வழியை
சொன்ன படி நடப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



தி. உருத்திரகோடீஸ்வரக் குருக்கள்
வீரகத்தி விநாயகர் வடக்கு வீதி,
கொல்லங் கலட்டி, தெல்லிப்பழை.

# கொல்லங் கலட்டியின் கல்வி விருட்சம்

19ஆம் நூற்றாண்டின் கிறிஸ்தவமிஷனரிமார் நாட்டில் பல பாகங்களிலும் பாடசாலைகளை ஸ்தாபித்து கல்விகற்க வைத்தனர் அவர்கள் தமது கல்வித் தொண்டினால் மக்களிடையே நன் மதிப்பை வளர்த்து தமது சமயத்தைப் பரப்பினர்.

இதை நன்கறிந்த ஆறுமுகநாவலர் அவர்கள் நமது சைவசமயம் அழியாது பரவ வேண்டுமானால் முதலில் தக்கபாடசாலைகளை ஊர்கள் தோறும் ஸ்தாபித்து எண், எழுத்துடன் சமய ஞானத்தையும் போதிக்க வேண்டும் என்று முடிவுக்குவந்தார்.

வண்ணார் பண்ணையிலும் கோப்பாயிலும் பாடசாலைகளை ஸ்தாபித்து சைவப் பிள்ளைகள் தமது சமய சூழலில் கல்வி கற்றுத்தேற அடிகோலினார். நாவலரின் முயற்சியினால் தூண்டப்பட்ட பல பெரியார்கள் நாட்டின் பல பாகங்களிலும் பாடசாலைகளைக் கட்டியெழுப்பிக் கல்விக்கும் சமயத்திற்கும் தொணடாற்றினார்கள்.

தமது ஊரான கொல்லங்கலட்டியிலும் வீரகத்திவிநாயகர் ஆலய ஆதினகர்த்தா பொன்னையாதேசிகர் அம்பலவாணதேசிகர் விநாயகர் ஆலய வாசலில் சமயஞானத்தையும் புராண இதிகாசங்களையும் கற்பித்து வந்தார். அதேவேளை எம்மூர் கல்விமான் ஆறுமுகம் வேலுப்பிள்ளை ஆசிரியரும் அம்பலவாணதேசிகரும் நட்பாகவும் சக பாடியாகவும் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடனும் இருந்தபடியால் ஆறுமுகம் வேலுப்பிள்ளை அவர்கள் பாடசாலையை ஸ்தாபிப்பதற்கு உதவியளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆசிரியர் ஆறுமுகம் வேலுப்பிள்ளை அவர்கள் சுவாமிநாதகந்தையா அவர்களிடமிருந்து காணிகளை படிப்படியாக விலைக்கு வாங்கி அதில் சிறிய சிறிய கொட்டில்களை அமைத்து பாடசாலையை தகுந்த ஆசிரியர்களை பணிக்கமர்த்தி நடாத்தி வந்தார். இவர் அமரரான பிறகு திரு.வே. சிற்றம்பலம் ஆசிரியர் ஓட்டினால் கூரைபோடப்பட்ட பெரிய மண்ட பத்தினை அமைத்தார். இவரும் பின்னர் காணிகளை வாங்கி மொத்தம் மூன்று பரப்பு காணியில் பாடசாலையினை கிரா மத்தின் மத்தியில் நடாத்தி வந்த இக்காலப் பகுதியில் இது கந்தையா ஆசிரியர் முதன்மை ஆசிரியராக கடமை ஆற்றினார். அவர் இளைப்பாறிய பின்னர் பண்டிதர் பிரம்மஸ்ரீ ப.சிவானந்தையர் முதன்மை ஆசிரியராக இருந்தார்.

1960ஆம் ஆண்டு முகாமையாளராக திரு.வே.சிற்றம்பலம் ஆசிரியர் அவர்கள் பாடசாலையை அரசாங்கத்திடம் கையளித்தார். தலைமையாசிரியர் சிவானந்தையா இளைப்பாறிய பின்னர் திரு ஆ.காசிநாதர் பதில் தலைமை ஆசிரியராக கடமை ஆற்றினார். திரு.பொன்னையா அம்பலவானதேசிகரின் பேரன் திரு.வ.மகாலிங்கம் 1971ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்றார்.

1972ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பாடசாலை நூற்றாண்டு விழா சிறப்பாக நடந்தது இக்காலப் பகுதியில் பிள்ளைகள் விளையாட, விவசாயம் செய்ய இட வசதி இல்லாதபடியால் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ. திரு.சா.ஜே. வே.செல்வநாயகம் அவர்களின் பாராளுமன்ற நிதி ஒதுக்கீட்டில் நான்கு பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டதுடன் அதில் விஞ்ஞானஆய்வுகூடம்,பாலர் வகுப்பு என்பன 80 அடி கட்டடத்தில் அமைக்கப்பட்டது.

பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ. ஆ.அமிர்தலிங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அதிபர் அலுவலகம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டதுடன் ஓலைக் கொட்டிலாக இருந்த வகுப்பறையும் கட்டடமாக மாற்றப்பட்டு 40 அடி கட்டடமாகக்கட்டப்பட்டது. மேலும் இவரது நிதி ஒதுக்கீட்டின் கீழ் இரண்டு பரப்புக் காணிகொள்வனவு செய்யப்பட்டு விளையாட்டு மைதானமும் பெருப்பிக்கப்பட்டது.

இக்காலப் பகுதியில் 355 பிள்ளைகள் கல்விகற்றதுடன் சமயம்,தமிழ், விஞ்ஞானம், கணிதம், விவசாயம் மற்றும் ஆங்கில பாடங்களுக்கான ஆசிரியர்களுடன் மாணவர்களுக்கு கல்வியானது சிறப்பாக புகட்டப்பட்டது. முன்பு கல்விப்பொதுத் தராதரப் பரீட்சைக்கு மாணவர்கள் வேறு பாடசாலைகளுக்கு சென்று பரீட்சை எழுதிய நிலைமாறி 1970 ஆம் ஆண்டின் பின் இப்பாடசாலையிலேயே பரீட்சைநிலையம் அமைக்கப்பட்டு மாணவர்கள் பரீட்சை எழுதினார்கள்.

திரு.வ. மகாலிங்கம் அவர்கள் அதிபர் பதவியிலிருந்து 22.04.1982 இல் இளைப்பாறியபின்னர் திரு.மூ.நடராசா அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். பின்பு திரு.வே.தனபாலசிங்கம் அதிபராக கடமை ஆற்றினார். இதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட யுத்தசூழ்நிலை காரணமாக 1990 ஆம் ஆண்டுமுதல் 22 வருடங்களுக்கு மேலாக இயங்காமல் இருந்த இப் பாடசாலையானது மீள்குடியேற்றத்தின் பின்னர் மீள ஆரம்பிக்கப்பட்டபோது செல்வி. வ.தம்பிராசா அதிபராக கடமையாற்றினார். இவர் இடமாற்றலாகி சென்ற பின் திரு.நா. பிரியந்தன் அதிபராகப் பொறுப்பேற்றார். இவரது தலைமையின் கீழ் தற்போது சிறப்பாக இயங்கிவரும் இப்பாடசாலையானது 150 ஆவது ஆண்டில் தடம் பதித்து 150 ஆவது ஆண்டு விழா கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைவதுடன் எமது இப் பாடசாலை இக் கிராமத்திற்கு மேலும் சிறந்த கல்விச்சேவையை வழங்கவேண்டும் என வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



ஆசிரியர்கள் மாணவர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வுவின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media






சுகாதார வழிகாட்டலின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media







கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கியபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



பெற்றோர் விழிப்புணர்வுக் கூட்டங்களின்போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



**திருமதி. யசோதமலர் சிவதாசன் (B.A, PGDE)**
ஆசிரியர், யா/கொல்லங்கலட்டி
சைவத்தமிழ் வித்தியாலயம்.

# இன்றைய மாணவரும் வாசிப்புத் திறனும்

இயந்திர யுகமும் அவசர கதியும் வாழ்வாகிப் போய்விட்ட இக்கால கட்டத்திலே சமூக மாற்றங்கள் விரைவாகவும் தொடர்ச்சியாகவும் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. **"மாற்றம் ஒன்றே மாறாதது"** என்பது நியதி அதனால் மாற்றங்கள் வரவேற்கப்பட வேண்டியன என்று கூறப்படுகின்றது. நடைபெறும் மாற்றங்கள் அனைத்தும் மனித குலமேம்பாட்டிற்கும் உயர்வுக்கும் உகந்தனதானா? என்பதும் விமர்சனத்துக்குரியது.

கல்வி என்பது உருமாற்றும் வல்லமை மிக்க மனித உரிமை ஆகும். கல்வியின் பயன் அறிவு. அவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் அறிவு **"அற்றங் காக்கும் கருவியாக"** அமைய வேண்டும் என்பது வள்ளுவர் வாக்கு. **"வாழ்க் கைக்கு உறுதுணையாவது தூய நற்கல்வியே"** என்பது திருமூலர் கூற்று இத்தகைய கல்வியின் ஆணிவேராக, அடித்தளமாக அமைவது வாசிக்கும் பழக்கமே ஆகும். **"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"** என்பது முதுமொழி இளமைப் பருவத்தில் கற்கும் கல்வி சிந்தாது, சிதறாது மனதில் நன்றாகப் பதியும் எனவே மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் என்பது இளமை யிலேயே அரும்பி, வளர்ந்து, முதிர்ச்சி பெறுதல் வேண்டும். அதனாலேயே புதிய கல்விக் கொள்கையில் வாசிப்பிற்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கப்படு கின்றது. மாணவர்கள் பாட நூல்களைக் கற்பதோடு மட்டுமே நின்று விடாது வேறுபல நூல்களையும் வாசித்தல் வேண்டும். இதனையே **"கண்டதும் கற் கப் பண்டிதன் ஆவான்"** எனும் முதுமொழி உணர்த்தி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இன்றைய சிறுவர்களே எதிர் காலத்தலைவர்கள், அவர்களை அறிவுச் செல்வர்களாக உருவாக்க வேண்டு மானால், அவர்களின் வாசிப்புத் திறன் விருத்தி செய்யப்படல் வேண்டும். எழுத் தறிவை வலுப்படுத்த அடிப்படைத்திறன் களான கேட்டல், வாசித்தல், எழுதுதல் என் பனவற்றுள் வாசிப்பு என்பது இன்று கற்றல் சார்ந்த செயற்பாடுகளில் முக்கிய பங்காற்று கின்றது. நவீன கல்விக்கு அடிப்படை வாசிப்பே தான் எல்லா வகையான பாடங்களையும் கற்பதற்கு வாசிப்பு ஓர் ஊடகமாகிறது நன் றாக வாசிக்கவும், கிரகிக்கவும் தெரிந்த பிள் ளைகளே இன்று கல்வியில் உச்சந்தொட்டு நிற்பதை எமது அனுபவ ரீதியாக நாம் கண்டுகொள்கின்றோம்.

வாசிப்புப் பழக்கத்தை மாணவர் கள் சிறுவயதிலிருந்தே கைக்கொள்ள வேண்டும். நவீன உலகின் மாற்றங் களைப் புரிந்து பொருந்தி வாழ்வதற்கும் வாசிப்புப் பழக்கம் அடிப்படையாகின்றது.

இன்றைய நவீன உலகில் நாம் வாசிப்புப்பழக்கத்தில் ஈடுபடுகின்றோமா? இதைச்சரிவரக் கடைப்பிடிக்கின்றோமா? என வினாவின் இல்லை என்பதே பதிலாக அமைகின்றது. முன்பு கிராமத்திற்குக் கிரா மம் சிறிய நூலகங்கள் போன்று வாசிக சாலைகள் காணப்பட்டன. அவை சனசமூக நிலையங்களாக இன்று மாற்றமடைந்து இயங்கிக் கொண்டிருக்கின்றன எனினும் இவற்றில் வாசிக்கும் பழக்கம் அருகி வரு வது கண்கூடு.

வாசிப்பதை அன்றாடப் பழக்கமா கக் கொள்கின்ற மாணவர்களே கிரகித்தல் திறன், நுண்ணறிவுத்திறன், அறிவுத்திறன் முதலியவற்றில் தனித்துவ ஆற்றல் மிக்கவர் களாகத் திகழ்கின்றனர். இவர்களாலேயே எந்தப்பரீட்சைகளையும் பயமின்றி வெற்றி கரமாக எதிர் கொள்ள முடிகிறது.



தகவல்களை திரட்டுதல் மொழி விருத்தி, பொழுது போக்கு, இரசனை, ஆத்ம திருப்தி போன்ற பல்வேறு அம்சங்கள் வாசிப்புப் பழக்கத்தினாலேயே அடையப்படு கின்றன.


மாணவர்களிடையே சுயகற்றல், கற்கக்கற்றல் போன்றவற்றை வலுவடையச் செய்தல் அவசியமாகும். இதற்கு வாசிப்புப் பழக்கமே முக்கிய கருவூலமாகிறது.

இன்று மாணவர்கள் மத்தியிலே இலத்திரனியல் சாதனங்கள் பெரிதும் செல் வாக்குச் செலுத்துகின்றன. பாலர் பருவம் முதல் பல்கலைக்கழக மாணவர் வரை "ஸ்மாட்போன்" கைகளில் தவழ்கின்றது. இதனால் சிறந்த பொழுது போக்காக காணப்பட்ட வாசிப்பு அற்றுப்போய் கணினி விளையாட்டுக்களில் அவர்களின் ஆர்வம் அதிகரித்துச் செல்வதோடு,அதனால் உடற் பருமன் அதிகரித்தல், கண்பார்வைக் குறை பாடு, தகாத நண்பர்களின் சேர்க்கை, தற் கொலை முயற்சிகள் என்பன சமூகத்தில் குறிப்பாக மாணவர்கள் மத்தியில் ஏற்படு வதை நாம் அவதானிக்கின்றோம்.

வாசிக்கும் பழக்கம் வளர்ச்சி பெறும் போதுதான் மாணவர்களின் அறிவு விசாலிக்கிறது அவர்தம் கல்வியும் செழுமை பெறுகிறது. எண்ணம், சொல், செயல் என்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



வற்றில் நன்மை ஏற்பட நிறைய விடயங் களை நாம் வாசிக்க வேண்டும். உலகப் புகழ் பெற்ற மேதைகளை நாம் நோக்கி னால் ஒவ்வொருவரின் வெற்றிக்குப் பின்னாலும் பல நூல்களே இருந்துள்ளன என்பதை அறிய முடிகின்றது.

பிள்ளைகள் மட்டத்தில் வாசிப்பில் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டிய முதற் கடமை பெற்றோருக்கு உண்டு. சிறுவயது முதலே நல்ல படங்களுடன் கூடிய பெரிய எழுத்துக்களில் அமைந்த புத்தகங்களை வாங்கிக் கொடுத்து பிள்ளைகளின் வாசிப்பு ஆர்வத்தை தூண்ட வேண்டும். அத்துடன் தாம் வாசித்து இரசித்த விடயங்களை பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்வதன் மூலமும் அவர்களை வாசிக்கச் செய்யலாம். பிறந்தநாள் பரிசில்களாக நீதிக்கதைகள் அமைந்த புத்தகங்களை பரிசளிப்பதன் மூலமும் வாசிக்கும் விடயங்கள் தொடர்பாக வெகுமதிகளை வழங்குதல் மூலமும் வாசிப்பு நாட்டத்தினை ஏற்படுத்த முடியும்.

**"அன்பான பெற்றோரும் அலுமாரி நிறையப் புத்தகங்களும் வாய்க்கப் பெறும் பிள்ளைகளே உண்மையான அதிஸ்டசாலி களாவர்"**

மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் பணியில் ஆசிரியரின் பங்கும் அளப்பரியதாகும். மாணவர்கள் வகுப்பறை நூலகத்தைப் பயன்படுத்த வழிப்படுத்த வேண்டும். தினமும் ஒவ்வொரு மாணவர் களையும் ஏதாவது ஒரு விடயத்தை வாசிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கி ஊக்கு விக்க வேண்டும். காலைப்பிரார்த்தனை யின் பின் மாணவர்களை பத்திரிகைச் செய்தி வாசிக்க வைத்து மீண்டும் அவற் றைக் கேட்டு கிரகித்துக் கொள்வதற்கு ஊக்கப்படுத்த வேண்டும். வகுப்பறையில் மாணவர்களிடையே வாசிப்புப் போட்டி களை நடாத்தி சிறிய பரிசில்களை வழங்க லாம். வாரத்தில் இரு தடவை பாடசாலை நூலகத்திற்கு அழைத்துச் சென்று வாசிப்ப தற்கு வழிப்படுத்தலாம். மாணவர்மன்ற நிகழ்வுகளில் கதைகள், கட்டுரைகள், புதிர் கள், விடுகதைகள் போன்றவற்றை வாசிக்க லாம். சிறுவர்களை கவரும் விதத்தில் அழகான படங்கள் மூலமான கதைகள், விளையாட்டுக்களுடன் தொடர்பான நொடிகள், புதிர்கள் என்பவற்றை வாசிக்க வழங்கலாம். மேலும் வாசிப்பில் இடர்படும் மாணவர்களை இனங்கண்டு பயிற்சிகளை யும் ஊக்குவிப்புக்களையும் வழங்குவது சிறந்த பயனைத்தரும்.

மாணவர்களின் வாசிப்புத் திறனில் நூலகம் சிறந்த பங்காற்றுகிறது இந்த வகையில் புதிய கல்விச் சீர்திருத்தம் வாசிப் புப் பழக்கத்தினை ஏற்படுத்தும் வகையிலே திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் வாசிப்புப் பழக்கத்தினை மாணவர் மத்தியில் தூண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

டும் வண்ணம் அனைத்து வசதிகளையும் கொண்ட நவீன நூலகங்கள் பாடசாலை களில் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது. நூலகத்திற்கு வருகின்றவர் களது தேவைகளைக் கேட்டறிந்து நூல் களை மாணவர்களுக்கு வழங்கும் சேவை களை அறிவித்தல் வேண்டும்.

பாடசாலை நூலகங்கள் தவிர்ந்த பிரதேச சபைகளால் நிறுவப்பட்ட நூலகங் கள் பலவும் இன்று வாசிப்புக்குத் துணை செய்பவையாக அமைந்துள்ளன. குறிப்பாக "மாணவர் பகுதி" தனியே ஒழுங்கமைக்கப் பட்டு வாசிப்பதற்கு உகந்த நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டும் உள்ளன. அவற்றை மாணவர்கள் சிறந்த முறையில் பயன்படுத் திக் கொள்ள வேண்டும்.

இன்று இளைஞர்கள் மத்தியிலே இணையப்பாவனையானது அதிகரித்துக் காணப்படுகின்றது என்ற குற்றச்சாட்டுக்கள் காணப்படினும் அதனை அவர்கள் ஆக்க பூர்வமான செயற்பாடுகளுக்கும் பயன் படுத்த முடியும். வாசிப்பு என்பது வெறுமனே புத்தகங்களையும், பத்திரிகைகளையும் வாசிப்பதை மட்டும் குறிக்காது தற்போது எமக்கு வேண்டிய விடயங்கள் யாவற்றை யும் இணையத்தில் வாசிக்க முடியும். E-லேனிங் எனும் ஒரு பகுதி வாசிப்பவர்களுக் காகவே உருவாக்கப்பட்டுள்ளது. உலகில் பல பாகங்களிலிருந்தும் வெளிவரும் நாவல்கள், சிறுகதைகள், ஆய்வுக்கட்டுரை கள் பத்திரிகைகள் என்பவற்றை இன்ரநெற் மூலம் வாசிக்க கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது. இன்ரநெற் ஓர் அவசியமான பய னுள்ள தளமாகும். மாணவர்கள் இன்ர நெற் பயன்படுத்தும் போது பெற்றோர் ஆசி ரியர்களின் கண்காணிப்பு அவசியமாகின் றது. ஏனெனில் மாணவர்களை தவறான வழியில் திசை திருப்பக்கூடிய விடயங்களும் அதில் உள்ளன. எனினும் உரிய முறை யில் இணையத்தைப் பயன்படுத்தினால் அதன் உச்சப்பயனைப் பெறமுடியும்.

இன்று மாணவர்கள் மத்தியிலே இணையப்பாவனை,போதைவஸ்துப்பாவ னை என்பனவற்றால் நெறிபிறழ்வான நடத்தைக் கோலங்கள் பல வெளிப்படுகின் றன என்ற குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின் றன. **"எந்தக்குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே"** எனும் பாடல் வரிகளை மனதிலிருத்தி வயதுக்கு ஏற்ற விடயங்களை மாணவர்கள் வாசிப் பதற்கு வழிப்படுத்த வேண்டும். கவிதை, கட்டுரை, சிறுகதை, பாடல் முதலிய இலக்கி யம் சார்ந்த விடயங்களை வாசிக்கவும் அவற்றினை ஆக்கவும் வழிப்படுத்துவ தோடு அவற்றுக்கான போட்டிகளையும் நடாத்தி ஊக்குவிக்க வேண்டும்.

**"வாசிப்பதால் மனிதன் பூரணமடை கின்றான்"** எனும் கூற்றிற்கிணங்க மாண வர்கள் பல்வேறு விடயங்களை வாசிக்கப் பழக வேண்டும். வாசிப்புப் பழக்கத்தை சிறு வயதிலிருந்து ஊக்குவிக்கும் பொறுப்பை பெற்றோர்களும், ஆசிரியர்களும், சமூகத்த வரும் ஏற்றுப் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

"வாசிப்பை நேசிப்போம் நல்லதொரு
அறிவுச்சமூகத்தை உருவாக்குவோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



**திருமதி அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன்**
முன்னாள் ஆசிரியர் ஆலோசகர்,
வலிகாமம் கல்வி வலயம்.



## என் நினைவுகளில்

# கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயம்

2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட மிகத் தொன்மையான ஐந்து ஈஸ்வரங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வரத்தையும் சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லி பாடி வீடு அமைத்து வாழ்ந்த மாவிட்டபுரத்தையும் வடக்கு எல்லையாகக் கொண்டது கொல்லங்கலட்டிக் கிராமம். கிராமத்தின் மத்தியில் வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் அருகில் கொல்லங்கலட்டி சைவத்தமிழ்ப் பாடசாலை அமைந்துள்ளது. தமிழருவி சண்முகசுந்தரனார் சைவமும் தமிழும் வளர்த்த பெருமை பெற்றது கொல்லங்கலட்டிக் கிராமம் என சரவணமுத்து ஐயா நினைவுமலரில் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்து எமது சைவத்தமிழ்ப் பாடசாலையின் பெருமையை எடுத்துக்காட்டுகின்றது எனக் கூறலாம்.

கி.பி எட்டாம் நூற்றாண்டில் சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லி முதன்முதலாக கொல்லங்கலட்டியில் விநாயகர் விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்து தற்பொழுது உள்ள கேணியின் பக்கத்தில் இருந்த மரத்தின் கீழ் வைத்து வழிபட்டு வந்தார். அவர் வழிபட்ட விநாயகர் விக்கிரகத்தை வைத்து நிர்மாணிக்கப்பட்ட வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் அருளினால் கொல்லங் கலட்டி மண்ணில் திரு.ஆ. வேலுப்பிள்ளை, விசுவநாத முதலியார், குமாரசாமி (அப்பர் பிறக்கிறாசி), மண்ணியல் வல்லுநர் கந்தையா, குமாரவேலு பொன்னம்பலம், சங்கரப்பிள்ளை போன்ற பல கல்விமான்களும் அறிஞர்களும் தோன்றினர். அக்கால அந்நிய ஆட்சியாளர்கள் சைவத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தமிழையும் புறக்கணித்துக் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதிலும் மதமாற்றம் செய் வதிலும் ஈடுபட்டனர். இந்நிலை கண்டு, கொதித்து எழுந்த ஆறுமுக நாவலர் சைவத் தையும், தமிழையும் அழியாது காப்பாற்றப் பல பாடசாலைகளை நிறுவினார். திண் ணைப் பள்ளிக்கூடங்களை உருவாக்கு கின்ற நாவலரின் திண்ணைப் பள்ளியில் கற்ற ஆறுமுகம் வேலுப்பிள்ளை நாவலர் பணியைத் தொடரக் கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கு அருகில் ஒரு பள்ளியை நிறுவ எண்ணி 1869 ஆம் ஆண்டு தமது அரைப் பரப்புக் காணியில் கொட்டில் அமைத்துச் சைவ வித்தியா சாலையை நிறுவினார். இவ்வாறு உரு வாக்கப்பட்ட எமது பாடசாலை தெல்லிப் பழை கோவில்பற்றில் நிறுவப்பட்ட முதல் சைவத் தமிழ்ப் பாடசாலை என்ற பெரு மைக்குரிய பாடசாலையாகும். 1934 ஆம் ஆண்டுக்குபின் இப் பாடசாலை சிரேஷ்ட பாடசாலையாக வளர்ச்சி பெற்றது.

என் வீட்டிற்கு அருகில் அமைந் துள்ள கொல்லங்கலட்டி சைவத்தமிழ் பாடசாலையில் 1950களில் எனது ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்தேன். வீரகத்தி விநா யகர் ஆலயத்தில் நவராத்திரி தினத்தில் அம்பலவாணக் குருக்கள் முன்னிலையில் ஏரம்பு உபாத்தியாயர் ஏடு தொடக்க முதன் முதலாகக் கொல்லங்கலட்டி சைவத்தமிழ் பாடசாலைக்குச் சென்ற சிறப்பு நிகழ்வு இன் றும் எனது பசுமையான நினைவுகளில் ஒன்றாகும்.

பாடசாலைக்குச் சென்ற காலத்தில் 60 அடி நீளமான மூன்று வாசல்கள் கொண்ட பிரதான கட்டடமும், தென் மூலையில் அதனுடன் இணைந்த சிறிய அறையும் அமைந்திருந்தது. பிரதான கட்டடத்தின் வெளியே வட மேற்கு மூலை யில் வெளியான அதிபர் அறையும் கட்டடத் தின் கிழக்கே நெசவுக்கொட்டில் அறையும்



அமைந்திருந்தது. இவை எனது ஆரம்பப் பாடசாலைக் கட்டடம் பற்றிய நினைவுப் பதிவுகளாகும். 1990 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழலால் இக்கட்டடங்கள் யாவும் அழிவடைந்தமை வேதனை தரும் விடயமாகும். சிதைவடைந்த இக் கட்டடத் தைப் பார்வையிட்ட வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் திரு.த.குரு குலராஜா அவர்கள் கட்டடத்தைத் தாங்கி இருந்த உருண்டை வடிவமான பிரமாண்ட மான தூண்களும் கட்டட அமைப்பும் புரா தன கட்டடக்கலை சார்ந்ததாக இருப்பதால் இவற்றைப் பாதுகாத்துக் கட்டடம் எழுப்பப் பட்டால் எமது புராதன வரலாறு நிலைத்து நிற்கும் என ஆலோசனை கூறிச் சென் றமை என் மனதில் உள்ள பதிவுகளாகும்.

1950ஆம் ஆண்டு காலப்பகுதியில் திரு.கந்தையா உபாத்தியாயர் தலைமையா சிரியராக விளங்கினார். எனது மூன்றாம் தர வகுப்பறை மண்டபத்தின் தென்மேற்கு மூலையில் அமைந்திருந்தது. வகுப்பு ஆசிரி யர் திரு.சிவானந்த ஐயர் ஆவார். அவரை நாம் எல்லோரும் "ஐயா உபாத்தியார்" என


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அழைப்போம். பூநூலும் வேட்டியும் அணிந்து நெற்றியிலே திருநீற்றுக் குறிகளும் சந்தனப்பொட்டும் தரித்த அவரின் சைவத் தோற்றத்தை என்றுமே மறக்க முடியாது. அவரிடமே முதன்முதலாக ஆங்கிலப் பாடத்தைக் கற்றேன். வகுப்பு மாணவர்கள் சைவப் பண்பாடும் ஒழுக்கமும் உடையவர்கள். மூன்றாம் தர வகுப்பில் முதல் தர மாணவனாக வள்ளிகாந்தன் திகழ்ந்தார். இவர் பாராளுமன்ற உறுப்பினர் வன்னிய சிங்கத்தின் மருமகனாவார். திரு.வன்னியசிங்கம் குடும்பமும் எங்கள் பாடசாலைக்கு அண்மையிலேயே வசித்து வந்தனர். பாடசாலைக்கு அருகில் ஓர் ஐக்கிய பண்டகசாலை அமைய வேண்டும் என விரும்பிக் கேணிக்கு அருகில் திரு.கு. வன்னியசிங்கம் அவர்கள் தனது நான்கு பரப்புக் காணியை அன்பளிப்பாக வழங்கியமை இங்கு நினைவு கொள்வது பொருத்தமானது. அப்பண்டகசாலை இப்பொழுது அழிவடைந்த நிலையில் உள்ளது.


ஐம்பதுகளில் ஆசிரியர்களாகப் பணிபுரிந்த சின்னத்துரை உபாத்தியாயர், செல்லப்பா உபாத்தியாயர், சுப்பிரமணியம் உபாத்தியாயர், ஏரம்பு உபாத்தியாயர், பருவதம் அக்கா ஆசிரியை ஆகியோரின் கற்பித்தல் நுட்பமே எனது கல்வியில் அத்திவாரமாக அமைந்தது. பருவதம் அக்கா ஆசிரியை அளவெட்டியிலிருந்து கூடார மடித்த திருக்கை வண்டியில் வருவதைப் பார்த்து ரசிக்கும் சிறுவர்களில் நானும் ஒருத்தி. சங்கிலித் தையல், சோம் தையல், காக்காத் தையல் என அவர் பயிற்றுவித்த தையற் கலைகள் இன்றும் பயன்படும் கலைகளாக உள்ளன. புத்தகங்கள், கொப்பிகள் வாங்கும் கடையாக சின்னத்துரை உபாத்தியாயர் விளங்கினார். மாணவர்களுக்குத் தேவையான கொப்பி,புத்தகம் யாவற்றையும் தன் கையில் சுமந்து அளவெட்டியிலிருந்து நடந்து வரும் ஆசிரியர் சேவையை யாரும் மறக்க முடியாது. இவ்வாசிரியர்கள் அனைவரும் எமக்குச் சமய உணர்வை வளர்த்தெடுத்த பெருமைக்குரியவர்கள் எனக் கூறினால் அது மிகையாகாது.

அக்கால ஒன்பதாம் தர (S.S.C) வகுப்புகளில் கிளானையைச் சேர்ந்த அன்னலட்சுமி,பாக்கியம் ஆகியோருடன் கனகரத்தினம், மணியம், செனகரத்தினம் ஆகிய சில மாணவர்களின் செயற்பாடுகள், கல்விச் சேவைகள் மறக்க முடியாதவை. ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் காலை நேரம் விநாயகர் ஆலயத்திற்கு மாணவர்களை அழைத்துச் சென்று "நமச்சிவாய வாழ்க" எனும் திருப்பதிகத்தைச் சொல்லிக் கொடுப்பார்கள். நவராத்திரி தினங்களில் பிள்ளைகளை ஆலயத்திற்கு அழைத்துச் சென்று இருவர் இருவராகச் சோடி சேர்ந்து நவராத்திரித் தோத்திரப் பாடல்களை மாறி மாறி பாட வைப்பார்கள். இந்நிகழ்வின் போது பாடிய "சீர்கொண்ட பரமவானந்த சிற்சொருப பாடல் வரிகள் என்றும் மறக்க முடியாத இனிமையான வரிகளாகும்.

பாடசாலை நிறுவியவர் தினம் வழமையாகப் பிரதான மண்டபத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



நடைபெறும். சிறுவர்களது கும்மி நடனம், கோலாட்டம், வரலாற்று நாடகம், பேச்சு, பாடசாலைக் கீதம் போன்ற நிகழ்வுகள் மேடையேற்றப்படும் பிரதம விருந்தினராக திரு.அப்பையா பிள்ளை அமிர்தலிங்கம் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கியமை மிகவும் சிறப்பாக அமைந்திருந்ததைக் காண முடிந்தது. ஆரம்ப வகுப்பு மாணவி களான பேபிசரோஜா, பரிமளலட்சுமி ஆகியோரால் "போற்றி புகழுதும் போற்றி புகழுதும் ஆனை மாமலை ஞான பாதமே" எனத் தொடங்கும் பாடசாலைக் கீதம் பாடப் பட்டது. இக் கீதம் திரு.சிற்றம்பலம் அவர்கள் முகாமையாளராக இருந்த காலத்தில் இயற்றப்பட்டது. ஆயினும் 1972ஆம் ஆண்டு புதியதோர் பாடசாலைக்கீதம் இயற்றப்பட்டு இன்று நடைமுறைப்படுத்தப் படுவதைப் பார்க்க முடிகின்றது.

இவ் வித்தியாலயத்தில் நவராத்திரி காலம் மிகவும் குதூகலம் அளிக்கும் காலமாகும். பாடசாலை நூலக நூல்கள் யாவும் பூசையில் வைக்கப்படும். விழாக் களில் பிள்ளைகள் கவிகள் பாடுவார்கள் நவராத்திரி இறுதிநாள் பன்னீர் வாழை வெட்டப்படும். அன்று பிள்ளையார் வாசலில் ஏடு தொடக்கப்பட்டு மாணவர்கள் மேள வாத்தியங்களுடன் பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டு முதல் நாள் படிப்பு ஆரம்பமாகும். இது கண்கொள்ளாக் காட்சியாகும். இப்படியான காட்சியை வேறு எங்கும் காண முடியாது.

திரு.வே.தனபாலசிங்கம் அதிபர் தலைமையில் 04.04.1988 ஆம் ஆண்டு திங்கட்கிழமை பாடசாலை மண்டபத்தில் நிறுவியவர் தின விழாவில் நான் விருந்தின ராகக் கலந்து கொண்டு நிறுவியவர் நினை வுரை ஆற்றியமை எனக்குக் கிடைக்க முடியாத பெருமதிப்பிற்குரிய விடயம் எனலாம். இவ் ஆய்வுரையில் "திரு.ஆ. வேலுப்பிள்ளை அவர்களின் வாழ்வும் வள மும் மங்காத சைவத்தமிழ் வளர்ச்சியும்" என்னும் தலைப்பில் உரையாற்றியமை பாடசாலையின் பெருமையை எடுத்துக்காட் டியது.

1990ஆம் ஆண்டு யூன் மாதம் வலிவடக்கில் ஏற்பட்ட போர்க்கால சூழ் நிலையால் பாடசாலை இடம் பெயர்ந்தது. அத்தோடு 1994ல் பாடசாலை முற்றாக மூடப்பட்டது. பாடசாலை ஊரவர்கள் மாடு கள் கட்டும் இடமாக மாறியது. மீண்டும் 2011ஆம் ஆண்டு யூன் மாதம் இப்பகுதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மக்கள் மீளக்கூடியேற அனுமதிக்கப்பட்ட னர். பாடசாலையை மீளத் திறக்க வேண்டும் எனப் பலர் முயற்சி எடுத்தனர். இந் நிலையில் மாவை கொல்லங்கலட்டி அபிவிருத்திச்சங்கமும் மடத்தடியில் கடை வைத்திருந்த சத்தியலோகநாதனும் (பவளம்) இணைந்து பாடசாலை திறக்கப்பட வேண்டும் என முயற்சி செய்தனர். இதற் காகக் கொல்லங்கலட்டி மக்கள் பலரிடமும் கையெழுத்து வாங்கி வலிகாமம் கல்வி வலயத்தில் சமர்ப்பித்தனர். இவ்வாறு பலர் செய்த முயற்சியின் பயனாக 02.01.2013 இல் மீண்டும் திறக்கப்பட்டது. இப்பாட சாலையில் முன்பள்ளி ஆரம்பிக்கப்படும் போது மாவை கொல்லங்கலட்டி அபிவிருத் திச்சங்க முன்பள்ளி மாணவர்களான குகன்யா, கிருத்திகா, நிவிக்கா, ரிசானா உட்பட ஏழு மாணவர்கள் இணைக்கப்பட்ட னர். அபிவிருத்திச்சங்க முன்பள்ளி மூடப் பட்டது. இந்நிகழ்வு பாடசாலை வளர்ச்சிக்கு உதவிய செயலாகும்.

2013ஆம் ஆண்டு செல்வி த.வசந்தராணி அதிபராகப் பொறுப்பேற் றமையைத் தொடர்ந்து பாடசாலை வளர்ச்சி பெறத் தொடங்கியது.

தற்பொழுது திரு.நா.பிரியந்தன் அவர்கள் பொறுப்பேற்றதுடன் பாடசாலை பல துறைகளிலும் விருத்தி கண்டுள்ளது. விளையாட்டுப் போட்டிகளிலும், விழாக்களி லும், இணை பாடவிதானச் செயற்பாடுகளி லும் முன்பு என்றுமில்லாத வகையில் தர மானதாகவும், முதலாம் தரப் பாடசாலை நிகழ்வுகளுக்குச் சமமானதாகவும் இருப் பதை அவதானிக்க முடிகின்றது. பாடசாலை கல்வி வளர்ச்சியில் ஆர்வமும் ஆளுமை யும் கொண்ட அதிபர் கிடைத்தமை வீரகத்தி விநாயகரின் அருட் செயலென்றே கூறலாம்.

மேலும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு நிறுவியவர் குடும்பமும் உறுதுணையாக இருந்து வருகின்றது. நிறுவியவர் திரு. ஆ.வேலுப்பிள்ளையின் மகன் திரு.வே.சிற றம்பலம் முகாமையாளராக இருந்த காலத்தை இப் பாடசாலையின் பொற்காலம் என்றே கூறலாம். இக்காலத்தில் இவர் மகாஜனக் கல்லூரியில் கல்வி கற்பித்தாலும் காலை நேரங்களில் பாடசாலைக்கு வந்து எல்லாம் கவனித்து விட்டு மகாஜனக் கல் லூரிக்குச் செல்வதைக் காண முடியும். கல் விச் சேவையை மட்டுமல்ல கொல்லங் கலட்டியில் வெங்காயம் விற்பனைச் சங்கத்தைத் தொடங்கி அதன் தலைவராக இருந்து விவசாயிகளுக்குச் சேவை செய்த பெருமை இவருக்கு உண்டு. இவரது பிள்ளைகளான சட்டத்தரணி சி.கணேசலிங் கம், திரு.பாஸ்கரலிங்கம், திரு.கமலக்கண் ணன் ஆகியோர் அன்றும் இன்றும் பாடசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றனர். பாடசாலை நிறு வுனரின் பேரனான திரு.கமலக்கண்ணன் "அன்னம்மா அறக்கட்டளை" என்ற அமைப் பினை உருவாக்கி பாடசாலைக்கும், மக்களுக்கும், நாட்டுக்கும் சேவை செய்து வருகின்றார். பூட்டனான திரு.கா.காங் கேயன் பாடசாலையுடன் இணைந்த விஜய தசமி விழாவைச் சிறப்பாக நடத்துவதிலும் பாடசாலையின் பாரம்பரியங்களை பேணிக் காப்பதிலும் ஆர்வத்துடன் அக்கறை காட்டி வருவது பாடசாலையை மேலோங்கச் செய்யும் செயற்பாடுகளாகக் கூறலாம். வீர கத்தி விநாயகர் அருள் பெற்ற இவ்வித்தி யாலயம் எல்லா வளமும் பெற்று வளர இறைவனை வேண்டி விடை பெறுகின் றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





திருமதி.ஜெயலக்சுமி ஸ்ரீதரன் B.A, PGDE SLT S-1
(ஆரம்பக் கல்வி)
ஆசிரியர், யா/கொல்லங்கலட்டி
சைவத்தமிழ் வித்தியாலயம்.

# ஆரம்பக் கல்வியில்
# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை
## மாணவருக்கான பதினான்கு திறன்களை வழிநடத்துதலும் அவற்றுக்கான செயற்பாடுகளும்

ஆரம்பக்கல்வி என்பது மாணவர்களின் அடிப்படை சார்ந்த கல்வியறிவையே குறித்து நிற்கின்றது. இங்கே "ஆரம்பம்" என்ற பதம் அனைத்து விடயங்களிலும் முக்கியத்துவம் பெற்றது. எந்த விடயத்தை ஆரம்பித்தபோதும் அது சிறப்பான முடிவைத் தேடிய பயணமாகவே அமையவேண்டும். இதனடிப்படையிலேதான் ஆரம்பக் கல்வியும் எதிர்கால முன்னேற்றத்தை நோக்கிய பயணத்தை ஆரம்பித்து அத்திவாரமிடுவதாக அமைந்துவிடவேண்டும் என்பதுகண்கூடு.

ஆரம்பக்கல்வி எவ்வாறு கல்வியின் அடி அத்திவாரமாக அமைகின்றதோ அதேபோல் வாழ்க்கையில் ஓர் உறுதியான ஆரம்பமாகக் கூறப்படுகிறது. வளர்ந்து வரும் வருங்காலத்திற்கு வழிவகுக்கும் கல்வியாக இருக்கவேண்டும் என உணரப்பட்டது. ஆரம்பக்கல்வியைப் பிள்ளைகள் எப்படிக் கற்பது? அவர்களைச் சுற்றியுள்ள ஏனைய மக்களுடனும் உலகத்துடனும் சிறந்த பயனுள்ள உறவுகளை எப்படி விருத்தி செய்வது? என்பதையும் கற்றுக் கொடுக்க வேண்டும். சீரான ஆரம்பக் கல்வி இல்லாமல் உயர்தரக் கல்வி அர்த்தமற்றதாகிவிடும் எனக் கண்டறிந்துள்ளனர். தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை கற்கும் ஆரம்ப நிலைக்கல்வி வருடங்கள், முழுப்பாடசாலை வாழ்க்கையில் மிக முக்கிய காலப்பகுதியாக வற்புறுத்தப்படுகின்றது. அம் மாணவர்களின் அடிப்படை எண்ணக்கருக்கள் வளர்ப்பதில் ஆரம்பக்கல்வி அவசியமாகி நிற்கின்றது. இங்கே மாணவர்களின் வயதடிப்படையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பார்க்கின்றபோது 6-10 வரையான வயதிலே குறிப்பாக 5 வருடங்கள் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுடன் சிறார்கள் கூடிக்குலாவி அறிவைப்பகிர்ந்து கொள்கின்றார்கள். இச் செயற்பாட்டு நிகழ்விலே நாம் பற்பல விடயங்களைக் கவனத்திற்கொண்டு அவர்களின் அறிவுத் திறனைக் கட்டியெழுப்பவேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

புதிய கல்விச் சீர்திருத்தம் உங்கள் பிள்ளைகளிடம் உள்ளடங்கிய விசேட சாமர்த்தியம், உள்ளார்ந்த ஆற்றல் ஆகியவற்றை இனங்கண்டு அவற்றை அபிவிருத்தி செய்ய முயல்கின்றது. விரிவடைந்துவரும் உங்கள் பிள்ளையின் மனதை மேலும் விருத்தி செய்ய, சிந்தித்து வினாக்களைப் பிறப்பித்து அவற்றிற்கான பதில்களைக் கண்டுபிடிக்கும் ஆற்றலை விருத்தி செய்யவேண்டும். இச் செயற்பாட்டிற்கு எடுத்துக்காட்டாக தரம் 5 மாணவர்களிற்கு மேற்கொள்ள வேண்டிய வழிநடத்தற் செயற்பாடுகள் பற்றியதாக இக்கட்டுரையானது அமைகின்றது.

**புலமைப்பரிசில் தேர்வு பற்றிய அறிமுகம்,**

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் சுற்று நிருபப்படி "பாடசாலைக்கு மாணவர் களைத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை" என இப்பரீட்சை வழங்கப்படுகின்றது,

அரசாங்கத்தினால் வரையறுக்கப்பட்ட குறிப்பிட்டதொரு அளவான மாணவர்களுக்கு மாவட்ட அடிப்படையில் உதவிப் பணத்தை வழங்குவதற்கும், தேசிய மட்டத்திலே மேலும் சிறந்த வசதிகளையுடைய பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கும் இப்பரீட்சையிலே கிடைக்கப்பெற்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையாகக் கொள்ளப்படும்.

புலமைப் பரிசில் பரீட்சை 1995ஆம் ஆண்டுக்கு முன்னர் தாய்மொழி, கணிதம் ஆகிய பாடங்களில் மட்டும் தனித்தனி இரண்டு வினாத்தாள்கள் உள்ளடங்கியதாக நடைபெற்று வந்தது. 1995ம் ஆண்டிலிருந்து இந்தப் பரீட்சை முறை மாற்றியமைக்கப்பட்டு பின்வரும் அடிப்படைகளில் பரீட்சை நடைபெறுகின்றது.

தற்போது 2022 ஆம் ஆண்டிலிருந்து மாணவர்களின் மனநிலைகளைக் கருத்திற் கொண்டு வினாத்தாள் II முதலாவதாகவும் [ஒரு மணி 15 நிமிடங்கள்- 100 புள்ளிகள்]. வினாத்தாள் I இரண்டாவதாகவும் [ஒரு மணித்தியாலம் - 100 புள்ளிகள்] என்ற அடிப்படையில் நடைபெற்று வருகின்றது. வினாத்தாள்கள் தனித்தனியே வழங்கப்பட்டுப் பரீட்சை நடைபெறுகின்றது.

வினாத்தாள் I பரீட்சிக்கப்படும் வினாக்கள் எந்த வகையில் தொகுக்கப்படுகின்றன என்பதைப் பின்வரும் அமைப்புக் காட்டுகின்றது.

**வினாப்பத்திரம் I**

இவ்வினாப்பத்திரத்தின் மூலம் மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்குகள் மதிப்பிடப்படும்.

1. **அவதானிப்பு**

   படம், இலக்கம், குறியீடு, எழுத்து, வரைவு, உருவம் என்பவற்றின் குறைநிறைகளை அவதானித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. **புலக்காட்சி**

படம், உருவம், தகவல் ஆகியவற்றின் கோலங்களை உடைய கருத்துப்பற்றிப் புலக்காட்சி பெறுதல்.

3. **அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல்,**

ஒரு அறிவுறுத்தலை, ஆலோசனையை வாசித்து அதற்கேற்றவாறு செயலாற்றுதல்,

4. **தகவல்களை ஒழுங்கமைத்தல்**

ஒரு தகவற் தொகுதியில் அடங்கியுள்ள விடயங்களை ஓர் ஒழுங்கமைப்பின் கீழ் அமைத்தல்

5. **காரண காரியத் தொடர்பு**

ஒரு காரியத்தினது அல்லது ஓர் விடயத்தினது காரணத்தை இனங்காணல்.

6. **உள்ளடக்க இடைத் தொடர்பு**

ஒரு தகவல் அல்லது தகவற் தொகுதி ஒரு பொதுமையான விடயத்தின் பகுதி என்பதை இனங்காணல்,

7. **நியாயப்படுத்தல்**

தரவுகளை, தகவல்களை மையமாகக் கொண்டு ஒரு முடிவை எடுத்தல்

8. **தூல வெளித் தொடர்புகளை இனங்காணல்**

உள்ளத்தின் கோலங்கள் மனத்திலே தோன்றும் உருவங்கள் மூலம் பெறப்படும் தகவற் தொகுதியின் நுட்பமான தொடர்புகளைக் கண்டுபிடித்தல்,

9. **பிரதியீடு செய்தல்**

ஒரு விடயத்தின் குறியீடு, நிலைமை செயற்றிறன் என்பவற்றிற்கு மாற்றீடாக வேறொரு விடயத்தின் குறியீடு, நிலைமை செயற்பாட்டுத்திறன் ஆகியவற்றை இனங்கண்டு தெரிதல்

10. **பொருளுரைத்தல்**

ஒரு நிகழ்வை, சந்தர்ப்பத்தை, செயற்பாட்டை அல்லது ஒரு தரவை வரைவிலக் கணப்படுத்தும் அல்லது விளக்கும் ஆற்றலை மதிப்பிடுதல்.

11. **எதிர்வு கூறல்**

கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் தரவுகளை மையமாகக் கொண்டு எதிர்காலத்தில் நிகழத்தக்க ஒரு நிலையைப் பற்றி எதிர்வு கூறல்

12. **மொழிபெயர்ப்பு**

ஒரு சொல்லின், ஒரு கூற்றின், ஒரு படத்தின், ஒரு வரைபின் கருத்தைப் பொருள் வேறுபடாத வகையில் மாற்றி அமைத்தல்

13. **பிரச்சினை தீர்த்தல்**

ஒரு மாணவன் தான் பெற்ற அறிவு, திறன், மனப்பாங்குகளை வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பிரச்சினைகளை எதிர்நோக்கும் போது பயன்படுத்தல்.

14. **தொடர்பு காணுதல்**

ஒரு ஆள், ஒரு பொருள், ஒரு கூற்று சந்தர்ப்பம் ஆகியவற்றை வேறொரு ஆளுடன், பொருளுடன் கூற்றுடன் சந்தர்ப்பத்துடன் பொருத்தி ஒற்றுமை வேற்றுமைகளை இனங்காணல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**வினாப்பத்திரம் II**

**இவ்வினாப்பத்திரத்தின் இலக்குகள் பின்வருபவை ஆகும்.**

1. தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரை உள்ள வகுப்புக்களில் கற்பிக்கப்படுகின்ற எல்லாப் பாடப் பரப்புக்களிலும் அடங்கியுள்ள விடயங்களின் துணை கொண்டு மாணவர்கள் பெற்ற அறிவு, திறன், மனப்பாங்குகளை நுணுகி ஆராய்தல்.
2. பாட நூல்கள் மூலம் மாணவர்கள் பெறுகின்ற அனுபவங்களை ஆராய்தல்.
3. கற்பித்தற் சாதனங்களைப் பயன்படுத்திக் கற்பித்தல் மூலம் மாணவர்கள் பெற்றுள்ள அறிவு, திறன், மனப்பாங்குகளை அவர்களின் வயதுக்கேற்ப மதிப்பீடு செய்தல்
4. பாடங்களின் ஊடாக மாணவர்கள் கற்ற கோட்பாடுகள் பற்றிய அறிவினைத்தமது வாழ்வின் நிகழ்ச்சிகளுடன் தொடர்புபடுத்துகின்ற ஆற்றல்களை மதிப்பீடு செய்தல்.
5. வகுப்பறையில் கற்கும் கோட்பாடுகளைத் தமது வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்துகின்ற ஆற்றல்களை மதிப்பீடு செய்தல்.
6. வகுப்பறையில் பல்வேறு குழு நடவடிக்கைகள், தனிப்பட்ட செயற்பாடுகள் ஆகியவற்றின் மூலம் அவர்கள் பெறுகின்ற கற்றல் அனுபவங்களை ஆராய்தல்
7. பாடத்திட்டம், பல்வேறு தொழிற்பாடுகள், அனுபவம் மூலம் மாணவர்கள் பெறுகின்ற ஆக்கத்திறன்களை மதிப்பீடு செய்தல்.

இவ் ஒழுங்குமுறையாவும் மாணவர்களை எப்படி வழிப்படுத்தவேண்டும் என்கின்ற அடிப்படைகளைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. எனவே இவற்றுக்கான அடித்தளங் களை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும்? என்பதைப் பின்வருமாறு கண்டு கொள்ளலாம்.

பாடசாலைகளைப் பொறுத்தவரையில் அங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் தன்னம்பிக்கை, திறமை, நிதானம் உடையவர்களாகவும், பாடசாலையில் ஏற்படும் சகல பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து அதனைச் சுயமாக வெற்றிகொண்டு பாடசாலையின் தூரநோக்கினை அடையக்கூடிய உளநலம் கொண்டவர்களாகவும் இருக்கவேண்டியது மிக அவசியமாகும். அவர்கள் உளநலம் மிக்கவர்களாகத் திகழும்போது அவர்கள் உடல்நலம் மிக்கவர்களாகவும், ஆன்மீக சிந்தனை கொண்டவர்களாகவும், தமது செயற்பாடுகளில் திருப்தியும் மகிழ்ச்சியும் கொண்டவர்களாகவும் இருப்பர். அத்துடன் தமது மாணவர்களை யும் அதிபர் ஆசிரியர்களையும் வெகுவாக நேசிப்பவர்களாகவும் இருப்பர்.

பிள்ளைகளின் உள்ளத்தில் அமைதியை உண்டுபண்ணும் சீரிய நோக்கில் செயற் படும் ஆசிரியர்கள் தம் மனதில் ஆழமான சமாதான அனுபவத்தைப் பெறும்போது மட்டுமே அவர்களின் கற்றல் கற்பித்தல் ஊடாகப் பிள்ளையின் உளநலத்தை விருத்தி செய்யமுடியும்.

**புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய பிள்ளைகளின் உளநலத்தில் அதிக சிரத்தை காட்டுதல்,**

உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் ஆரோக்கியமான நிலையில் உள்ள ஒருவர் பூரண சுகமுடையவராவார். ஆயினும் ஒருவர் உடல் நலத்தில் சிறந்து விளங்கியபோதும் உளநலத்தில் சிறந்து விளங்காது இருத்தல் கூடும். ஒருவரின் உளம் சார்ந்த தன்மையை அவருடைய நடத்தைகள் மனவெழுச்சித் தன்மைகள் மூலமே அறிந்துகொள்ள முடிகின்றது. பிள்ளையின் சுற்றாடலும், நடத்தைக் கோலங்களும் உளநலத்தின் பால் அதிக விளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாக்கம் செய்கின்றன. அன்பு, காப்பு, கணிப்புப் போன்ற அடிப்படை உளத் தேவைகள் கிடைக்காமல் போவதனால் பிள்ளைகளிடையே விரக்தி, தாக்கும் தன்மை, முரண்பாட்டுச் சுபாவம் போன்ற துர்ப்பழக்கவழக்கங்கள் ஏற்பட வாய்ப்பேற்படுகின்றது. அதிகரித்த வேலைப்பளு காரணமாகப் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் பற்றிக் கவனம் செலுத்துவதற்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. ஆகையால் பிள்ளைகள் தொடர்பாகக் கருத்தூன்றி ஆராய்ந்து அவர்களின் உளநலனைச் சீர்ப்படுத்தவேண்டிய பாரிய பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்து நிற்கின்றது.

ஆசிரியர்கள் இவ் உள்ளம் சார்ந்த பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரங்குசார் செயற்பாடுகளை மேற்கொண்டு இதற்கான பரிகாரங்களைத் தேடலாம். இங்கே மனங்களை மகிழ்ச்சிப்படுத்தி உளத்தாக்கத்திலிருந்து மாணவர்களைப் பாதுகாக்க வேண்டும். இது தொடர்ச்சியாகவும், அதேவேளை நம்பிக்கைக்குரியதாகவும் இருத்தல் சாலச் சிறந்தது.

மாணவர்களின் அடிப்படை அறிவுத் திறனைப் பெருக்கிக் கொள்வதற்கு முதலிலே மாணவர்களின் மனதை வெல்லவேண்டும். மனதை வெல்லும்போது அதற்கே உண்டான அறிவுத்திறனும் வெல்லப்பட்டுவிடும். மாணவர்களின் மனம் என்பது ஆரம்பக்கல்வி மாணவர்களைப் பொறுத்தவரை மென்மையானது, பக்கம் சாயக்கூடியது, தாக்கமடையக் கூடியது, குதூகலத்தையும், அரவணைப்பையும் எதிர் பார்த்து நிற்பது எடுத்துக்காட்டாக ஒரு பரீட்சையை எழுதி அதற்குக் கிடைக்கும் குறைந்த புள்ளியினால் சோர்வடைந்து நடுக்க மடைந்து தன்னிலை மறந்து நிற்கின்றபோது இத்தருணத்தைக் கையாண்டு அவனுக்கு ஆறுதல் மொழியையும், அதிலிருந்து அடுத்த வெற்றிக்குக் கிளர்ந்து எழவேண்டும் என்பதையும், நாங்கள் பசுமரத்தாணிபோல் பதிய வைக்க வேண்டும். இங்கே மடியிலே இருத்திக் கொடுக்கும் அரவணைப்பும், ஆறுதல் மொழியும், கிளர்ச்சியும் இன்னொரு புதிய உலகத்தையும் உத்வேகத்தையும் கொடுக்க அவன் சாதனை படைக்க உறுதி பூணுவான். இச் செயற்பாடு அவனின் ஆழ்மனதிலே பதிந்து அவனை வெற்றிப்பாதைக்கு இழுத்துச் செல்லும், எங்கள் அரவணைப்பு அவன் மனதிற்கு ஓர் ஆறுதலைக் கொடுத்து அவனைச் சாந்தப்படுத்தும், அவனது பெறுபேறு அவனது வாழ்க்கையின் முடிவல்ல ஆரம்பமும், தடை தாண்டல்களுமே என்பதை இச்செயற்பாடுகள் இலகுவாக உணர்த்திவிடும்.

மேற்கூறிய விடயங்களைக் கருத்திற் கொண்டு செயற்படும் ஆசிரியர் நிச்சயமாகப் பிள்ளையின் உள்ளத்தில் பிரவேசிக்கத் தக்கவராகின்றார். பிள்ளையின் உள்ளத்துள் பிரவேசித்த ஆசிரியரினால் வைக்கப்படும் முன்வைப்புக்கள் பசுமரத்தாணி போலப் பிள்ளையிடத்தே பதிந்துவிடுகிறது. இதுவே ஆரம்ப நிலையில் மாணவர் கல்வியில் ஆசிரியர்களின் பணி எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைத் துல்லியமாகக் காட்டி நிற்கும் சான்றாகும்.

ஆசிரியர்கள் முதலில் இந்தப்பரீட்சைக்குரிய பாட உள்ளடக்கங்களை அறிந்திருத்தல் மிக அவசியமாகும் வினாக்கள் தொகுக்கப்படும் முறைகள் பற்றியும் எவ்வாறானவினாக்கள் இடம்பெறும் என்பதையும் அறிந்திருத்தல் வேண்டும்.

மாணவர்களுக்கு வாசிப்பதற்குச் சந்தர்ப்பத்தையும், வாசித்தவற்றை கிரகித்துள்ளார் களா? என அறிவதற்கு வழிவகைகளையும் மேற்கொண்டு மாணவர்கள் அதிலே மேம்பாடடைய வழிகாட்டல் செய்யவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வினாத்தாள் I ஆனது 1 மணித்தியால நேரத்திற்குள் செய்துமுடிக்க வேண்டியது அதிலே 40 வினாக்கள் இடம்பெறுகின்றன. இங்கே வேகமும், விவேகமும் மாணவரிடத்தே ஏற்படுத்தப்பட வேண்டும். ஏனெனில், அந்த நேர அவகாசத்திற்குள் செய்துமுடிக்கும் திறனை மாணவரிடத்தே வளர்க்கவேண்டும். அதற்கான பல நுணுக்கமான இலகு பரீட்சை வழிகளைத் தொடர்ச்சியாக அவர்கள் பின்பற்ற உதவவேண்டும்.

தரம் 5 மாணவர்களுக்குப் பொருத்தமான நுண்ணறிவு. புதிர்கள் போன்ற மாணவருக்கு மிகவும் விருப்பமான பொது விவேகத்தை வளர்க்கும் விடயங்களைத் தேடிச் சேகரித்து வழங்கும் முயற்சி ஆசிரியர்களிடத்தே இருக்கவேண்டும்.

1. தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பொருத்தமான கண்ணோட்டத்தில் நோக்காமை,
2. பிரச்சினைகளைச்சரியாகப் பகுத்தாராயாமை, பொருத்தமான தீர்வுகளை அமுல்படுத்தத் தயங்குதல்.
3. பொருத்தமான முடிவுகளை விரைவாக எடுக்க முடியாமை.
4. எதிர்கொள்ளும் சவால்களுக்கு விரை வாக முடிவு காணமுடியாமை.
5. தனியாள் இடைத் தொடர்புகளை ஆரோக்கியமாகப் பேண முடியாமை.
6. ஏனையோரின் தேவைகளையும், உரிமை களையும் கருத்திற்கொள்ளாது. செயற்பட முனைகின்றமை.
7. பாடசாலையின் சமாதானச் சூழல் பாதிக் கப்படுவது பற்றிக் கவலைப்படாமை.
8. மனித வளங்களினதும், பௌதீக வளங்களினதும் பெறுமானத்தை அறியாமை. தனது பலவீனங்கள் பற்றிய விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளாமை.
9. தொடர்ச்சியான பிரதிபலிப்புச் சிந்தனை இல்லாமை. என்பனவாகும்.

மேற்கண்ட நிலைமைகளில் இருந்து ஆசிரியர்கள் விடுபடும்போதுதான் ஆரம்ப நிலையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடு வினைத்திறனுடையதாக விருத்தி செய்யப்படும். ஆசிரியர்களின் பணி வாழ்க்கைத் தரத்தையும், உளநலத்தையும் விருத்தி செய்வதை முதல் நோக்காகக் கொண்டு ஆசிரியர்கள் தாமாகவே முன்வந்து தரவட்ட அமைப்பை ஏற்படுத்தல் மூலம் இக்குறைபாடுகளை விருத்தி செய்யமுடியும். தரவட்ட அமைப்பின் மூலம். ஒன்றுகூடுதல் ஊடாக மகிழ்ச்சியடைதல் ஆசிரியர்களுக்கு அவசியமானதாகும் நிரந்தர மகிழ்ச்சியும் மற்றவர்களின் நலனில் அக்கறையும் மானுட ஆக்கத்தின் மதிப்பையும் பெறுவதாக அமையும்,

வினாக்களை அறிமுகப்படுத்தும் போதும் அல்லது பயிற்சிப் பரீட்சை வினாக்களுக்கு விளக்கம் கொடுக்கும் போதும் அந்த வினாவின முழுமைத்தன்மையை வெறும் செய்கை வழிகள் மூலம் விடைகாண முயற்சிப்பதை விடுத்து முதலில் அனுபவ ரீதியாக அதற்கு விடைகளை காண வழிகாட்டிய பின்பு செய்கைவழிகளைப் பயன்படுத்துவதன் மூலம் மாணவர்கள் அதனை நம்பகத் தன்மையுடன் இலகுவாகப் புரிந்து கொள்ள வழிசமைக்க வேண்டும்.

சரியான விடைகளின் கீழ்க் கோடிடும் போது பொருத்தமில்லாத விடைகளை நீக்கி பின்பு உள்ளவற்றில் மிகச் சரியானதை முயற்சியுடன் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பங்களை இனங்காண வழிகாட்டுவதும் அவசியம்,

எனவே இவ்வாறான நடைமுறையில் விளக்கம் பெற்ற பின்பு தான் இலகுவழிகளை இனங்காண வழிகாட்டுவதால் மாணவர்கள் அவ்வழிகளைப் பின்பற்றலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வினாத்தாள் II இற்கு வழிகாட்டலில் ஆசிரியர்களின் பங்கு

இவ்வினாப்பத்திரம் தரம் 1-5 வரையுள்ள சமயபாடம் தவிர்ந்த ஏனைய எல்லா பாடப்பரப்புக்களையும் உள்ளடக்கியிருக்கும்

முதலில் அடிப்படை விடயங்களான மொழி வாசிப்பு, எழுத்து, கணித கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் என்பவற்றில் போதிய விளக்கமும் தெளிவும் ஏற்பட வழிகாட்டல் அவசியமாகின்றது.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்ற கூற்றுக்கமைய ஒரு மாணவனின் அடிப்படை அம்சமாக எண்ணும் எழுத்தும் அமைய வேண்டும் குறிப்பாக "எழுத்து" என்பது முக்கியம் பெறவேண்டிய ஒன்று. ஒருவன் எழுத்தைத் திறம்பட வரிவடிவிலே எழுத முடியவில்லை என்ற எண்ணம் அவன் மனதிலே தோன்றுகின்றபோது அதனைக் கண்டறிந்து அழகுற உறுப்பமைய எழுதவைத்தல் ஆசிரியர், பெற்றோர் கடமையாகும். இங்கே எழுத்து வடிவில்லை என்ற மாத்திரத்தே பிரம்பை எடுத்து தண்டிப்பதை விடுத்து அவனின் மன எழுச்சிகளைத் தட்டிவிடும் வார்த்தைப் பிரயோகத்தைக் கையாள்வது மிகச் சிறந்த பெறுபேற்றைத் தரும். ஒரு மாணவனின் எழுத்தை உறுப்பமைய எழுத வைப்பதும் ஆசிரியருடைய தலையாய கடமையாகும்.

தமிழ் அரச பாடத்திட்டத்தில் உள்ள விடயங்களை மிகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் கற்பதற்கு வழிகாட்ட வேண்டும். இதற்காக ஆசிரியர்கள் நகைச்சுவையாள ராகவும் நடிகனாகவும் செயற்பட வேண்டும்.

எழுத்துப் பிழையில்லாது எழுதுவதற்கு நாள்தோறும் பாடசாலையிலும் அத்தோடு பெற்றோர்களுக்கு ஊடாக வீட்டிலும் போதிய பயிற்சி அளிக்கப்படுவதுடன் மாணவன் தனது எழுத்து அழகாக வருகின்றது என எண்ணி எழுதிவரும்போது நாமும் அதை ஏற்றுக் கொண்டு இதை விட அழகுற எழுதிக்காட்டு என ஊக்கப்படுத்த வேண்டும்.

தரம்-5 மாணவர்களுக்குப் பொருத்தமான இலக்கண விடயங்களை மட்டும் கற்பித்தல் வேண்டும்.

### கணித பாடம்

இதேபோன்று கணிதம் சார்ந்த அடிப்படை விடயங்கள் ஒரு மாணவனுக்குத் தெரிந்திருக்கிறதா? என்ற விடயம் ஆசிரியர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இதன் அடிப்படையிலே வாய்ப்பாடுகள். கணிதக் குறியீடுகள் அதன் செயன்முறை விளக்கங்கள் சரியான முறையிலே மாணவர்களைச் சென்றடைந் திருக்கின்றதா? என்ற வினாவுக்கு விடை கூறக்கூடிய வகையிலே கற்பித்தல் செயற் பாடுகள் அமைய வேண்டும் ஆசிரியர் கைநூலில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் வழிகாட்டல் விளக்கங்களுக்கு ஏற்ப மிகவும் ஆழமான முறையில் விளக்கங்களையும் உபகரணப் பயன்பாட்டையும் கொண்டு கற்றலுக்கு வழி காட்டுவது ஆசிரியர்களது கடப்பாடு ஆகும். ஆசிரியர்கள் வெறும் கரும்பலகை விளக் கத்துடன் வழிகாட்டுவார்கள் எனில் மாணவர்கள் கணித எண்ணக்கரு விருத்தி மிகவும் பின் தங்கிய நிலையிலே காணப்படும். இதனால் கணித வினாக்களுக்கு விடை காணமுடியாத நிலையும் ஏற்படும். எனவே மிக முக்கியமாக ஆசிரியர் கைந்நூல்களில் தரப்படும் கணித எண் ணக்கரு முறையில் வழிகாட்டவேண்டும் கணித எண்ணக்கரு விருத்தி அதிகம் இருந்தால் வினாத்தாள் 1 இலும் அதிக வினாக்களுக்கு விடையளிக்கும் சந்தர்ப்பமும் ஆற்றலும் ஏற்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அத்தோடு இதற்கான செயற்பாடுகளாக புதிய முறைகளையும், நுட்பங்களையும் செயற்பாட்டினையும் ஆசிரியர்கள் கையாள வேண்டும். குறிப்பிட்ட ஒவ்வொரு கணித வினாவிலும் போதிய தேர்ச்சியும் பயிற்சியும் எடுப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கவேண்டும்.

**அடுத்து ஆங்கில பாட வினாக்களில்...**

பாடப்புத்தக ஆங்கில சொற்கள் அத்தியாவசியமாக அறிந்திருத்தல் வேண்டும். அத்தோடு வாய் மொழி மூல ஆங்கிலச் சொற்களையும் வசனங்களையும் கையாளச் சந்தர்ப்பம் ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக விளையாட்டு முறைகளூடாக அவற்றை ஞாபகப்படுத்தவும் வாய்ப்புக்கள் வழங்க வேண்டும்.

**சிங்களம்...**

ஆசிரியர் கைந்நூலில் தரப்பட்டுள்ள சிங்கள விடயங்களை மட்டும் அறிமுகப்படுத்தி அவற்றைச் சுற்றாடல் பாட அலகுகளினூடாக கற்றலில் புகுத்தவேண்டும். அத்தோடு நடைமுறையில் அவற்றினைப் பயன்படுத்து வதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

**சுற்றாடல்...**

இப்பாடப் பரப்பில் மாணவர்கள் தாவரங்கள், விலங்குகள் மற்றும் தம்மைச் சூழ உள்ள பொருட்கள், தாங்கள் கையாளும் பாவனைப் பொருட்களில் உள்ள விடயங்கள், தகவல்கள் என்பவற்றை முற்றுமுழுதாக அனுபவ ரீதியில் அறியவேண்டும்.

குறிப்பாகத் தாவர, விலங்குகளை நேரடியாகப் பார்த்து அறிவதுடன் மட்டுமல்ல, அதைப் புகைப்படத்திலும், கோட்டுப்படத்திலும் இனங் காணும் திறன்களை வளர்ப்பதற்கு வழிகாட்டுவது அவசியமாகும். வீட்டுப்பாவனைப் பொருட்கள், தகவல் தொடர்பு சாதனங்கள் என்பவற்றின் தகவல்களை நேரடியாகப் பார்த்து அறிய வேண்டும்.

உதாரணமாக உப்புப் பைக்கற்றில் உள்ள விடயம். இது போன்று தீப்பெட்டி, சவர்க்கார உறை, கடித உறை, மின்சாதனப் பெட்டிகள் போன்ற வற்றிலுள்ள விடயங்களை அன்றாட தேவைகளுக்காக அறியவேண்டும். அதற்கு ஆசிரியர் களும் பெற்றோர்களும் உதவ வேண்டும்.

இவற்றோடு சூழலில் உள்ள தாவரங்கள், பிராணிகளின் அசைவுகளின் தொழிற்பாடுகளையும் அறியவேண்டும். எனவே இவ்வாறான சூழல் அவதான அனுபவங்களூடாகப் பெறப்படும் விடயங்களும் புலமைப்பரிசில் பரீட்சையில்வினாக்களாக வருகின்றன.

அழகியல், உடற்கல்வி, தையல், ஆக்கம் என்பனவற்றிலும் வினாக்கள் வருகின்றன. எனவே அவ்வாறான விடயங்களிலும் முக்கிய கவனம் செலுத்தவேண்டும்.

**மாணவர் கடமைகளும் அவர்களின் தயார் நிலையும்**

மாணவர்கள் தமது கல்வி மேம்பாட்டிற்கு ஆசிரியர்கள், பெற்றோர்களின் வழி நடத்தல்களை விருப்புடன் ஏற்கும் மனப்பக்குவத்தினைக் கொண்டிருக்க வேண்டும். இது உள, உடல் சார்ந்த வளர்ச்சிக்கும், மகிழ்ச்சிகரமான கற்றலுக்கும் உந்துசக்தியாக அமையும். இவ்விருப்பினை உருவாக்குகின்ற சிந்தனைப்போக்கும், பக்குவம் நிறைந்த மனப்பாங்கும் பெற்றோர். ஆசிரியர்களிடம் இருப்பது சாலச் சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே குறித்த ஒரு மாணவர் சமுதாயத்தை அறிவுத்திறன் வளர்ச்சியில் புலமைசார் நிறைவிற்குக் கொண்டு வருவதற்குச் சமூகம் சார்ந்த இணைப்போடு யாவருமே ஒன்று சேர்ந்த முன்னேற்றகரமான முயற்சியை மனவிருப்புடன் செய்யவேண்டும். இதற்குத் தொடர்ச்சியான பயிற்சிகளும், அதனூடாகக் கிடைக்கும் அனுபவங்களைப் பரீட்சைகளுமாக நடாத்தி அதன் பெறுபேறுகளைப் பெற்றோர்களுடன் சேர்ந்து கண்டுகொண்டு அப்பெறு பேற்றின் ஏற்ற இறக்கங்களை எல்லோரும் சேர்ந்து நிமிர்த்துவதற்கான முயற்சிகளைச் செயற்பாட்டடிப்படையில் செய்து வெற்றிகளையும் குவித்துக்கொள்வோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



ஆசிரியர்தின விழாவின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



சிறுவர்தின விழாவின் போது...

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



சிறுவர் சந்தையின் போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



**திருமதி ஜெ.மயில்வாகனம்**
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்
(ஆரம்பக் கல்வி)
வலிகாமம் கல்வி வலயம்.





# எமது பாடசாலை

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற ஆன்றோரின் வாக்கிற்கு அமைவாக, வளம் நிறைந்த ஈழமணித் திருநாட்டில் தெல்லிமணியூரில் கொல்லங்கலட்டி என்ற சிறப்புமிகு பதியிலே வீரமுடன் வீற்றிருக்கும் வீரகத்தி விநாயகப் பெருமானின் திருவருள் துணையுடன் கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாசாலை எழிலுடன் காணப்படுகின்றது. இப் பாடசாலையின் பழமையும் பெருமையையும் எண்ணி என் பள்ளி பருவகால நினைவுகளைப் பின்னோக்கி நகர்த்தினால் அக்காலத்தில் இனிமையும்,புதுமையும், சேவையின் மகிமையும், ஒழுங்கும், ஒழுக்கமும் என என்னை இன்று பிரமிக்க வைக்கின்றது.

இத்தகைய சிறப்புமிக்க செம்மண் பூமியிலே வெற்றிலையும் வெங்காயமும், வாழையும் ஓங்கி உயர்ந்த தென்னை மரங்களும், பனையு மென இயற்கை வளமும் செல்வமும் நிறைந்த பதியிலே கொல்லங்கலட்டி என்ற கிராமம் ஆகும். இங்கே சைவமும் தமிழும் கமழ நல்ல பாடசாலையாக இப்பாடசாலை காணப்பட்டது. இதனை நிறுவியவர் திருவாளர். ஆ. வேலுப்பிள்ளை என்ற பெருமகன் ஆவார். இவரால் இக் கிராமத்துப் பிள்ளை களுக்குக் கல்வி வழங்கும் நோக்கத்துடனேயே இது நிறுவப்பட்டது.

இப் பாடசாலையில் ஆரம்பக் கல்வி முதல் க.பொ.த சாதாரண தரம் வரை கற்ற மாணவர்களோ எண்ணில் அடங்காது. அந்த வகையில் இப்பாடசாலை வளாகம் சிறிதெனினும் அறிவைப் புகட்டும்பாங்கினால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



பெரிதாகவே காணப்பட்டது.

இந்தப் பாடசாலையும் கல்விமுறை யும் என்ற வகையில் எனது எண்ணங் களை உள்ளே மீட்டுப் பார்க்கும் பொது ஒரு வகையான ஆனந்தமும், ஏக்கமும் பொங்கு கிறது. இப் பாடசாலையின் பழைய மாணவி என்ற பெருமிதம் ஏற்படுகின்றது. இனி நினைத்தாலும் மீண்டும் இந்த பள்ளியிலே கற்க முடியாது என்ற சோகம் தோன்றுகிறது. அத்தனை பசுமையான நினைவுகள்.

எனக்கு இப் பாடசாலையில் ஆரம் பப் பிரிவில் கற்பதற்கு வாய்ப்புக் கிடைக்க வில்லை. ஆனால் நான் தரம் ஆறு தொடக் கம் க.பொ.த சாதாரணம் வரை கற்ற காலத் தில் சேவையாற்றிய ஆரம்பக்கல்விக் கற் றல் கற்பித்தல் பணியில் ஈடுபட்டிருந்த ஆசிரி யர்கள் அனைவரையும் மனக்கண் நிறுத் திப் பார்க்கின்றேன். அவ்வளவு புனிதமான பணியாளர்கள். அக்காலத்தில் பேருக்கேற்ற அழகான சுந்தரி ரீச்சர் திருமதி சுப்பிரமணி யம் செல்வி கொங்காமலர் ஆசிரியை இவரது வகுப்பில் எல்லாப் பாடங்களுக்கும் உபகர ணங்களுடன் கற்பிப்பார்.

திருமதி சரஸ்வதி ஆசிரியை ஒவ் வொரு பிள்ளைகளையும் தேவாரம், வாய்ப் பாடு மனனத்திற்காக வழிப்படுத்துவார். திரு.கனகரட்ணம் ஆசிரியர், இவரைப் பெரிய கனகர் என்று எம்மவருள் பேசப்படு பவர். போட்டிகள் என்றால் முன்னின்று பழக்குவார், பழக்க வழக்கத்தில் உச்சமான காவலனும் அவரே. பெற்றோருடன் உசித மாகப் பேசி கச்சிதமாக காரியமாற்றுபவர். சின்னக் கனகரட்ணம் ஆசிரியர். அவர் களின் அன்பாலும் கசடறக் கற்பித்தலாலும் அனைத்து மாணவர்களும் சொற்பிழை, பொருட்பிழை இன்றி கல்வி கற்றார்கள். திருமதி.சரஸ்வதி ஆசிரியை ஒவ்வொரு பிள்ளைகளையும் தேவாரம், வாய்ப்பாடு மனனத்திற்காக வழிப்படுத்துவார். திரு. கனகரட்ணம் ஆசிரியர், இவரைப் பெரிய கனகர் என்று எம்மவருள் பேசப்படுபவர். போட்டிகள் என்றால் முன்னின்று பழக்கு வார், பழக்க வழக்கத்தில் உச்சமான காவல னும் அவரே. பெற்றோருடன் உசிதமாகப் பேசி கச்சிதமாக காரியமாற்றுபவர். சின்னக் கனகரட்ணம் ஆசிரியர். அவர்களின் அன் பாலும் கசடறக் கற்பித்தலாலும் அனைத்து மாணவர்களும் சொற்பிழை, பொருட்பிழை இன்றி கல்வி கற்றார்கள்.

என் வாழ்வில் அன்றொரு நாள் யா/மாவிட்டபுரம் வடக்கு அ.மி.த.க பாட சாலையில் கல்வியை முடித்து ஆறாம் வகுப்பை தேடி எனது தந்தையார் கந்தப் பிள்ளை நடராஜா அவர்களின் இரண்டு சக்கர வண்டியில் ஏறியிருக்க தந்தையார் யா/யூனியன் கல்லூரி, யா/மகாஜனக் கல்லூரி இரண்டிலே எங்கு சேர்ப்பது என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



ஒரு தந்தையின் ஸ்தானத்தில் இருந்து நன்றாக யோசித்தார். அவரது மனதிலே அங்கே சென்று கற்பதிலும் பார்க்க எனது மகள் கிராம பாடசாலையில் கல்வி கற்பதே சிறந்தது என்று கருதினார். அந்தப் பதினோராவது வயதில் படிக்க வேண்டிய பாடசாலை இப்பாடசாலையே என முடி வெடுத்தார். அருகில் உள்ள பாடசாலையே சிறந்தது என்று கருதினார். அவ்வாறே பாடசாலையிலும் சேர்த்துக்கொண்டார்.

அக்காலத்தில் அதிபராக இருந்தவர் திருவாளர். மகாலிங்கம் ஐயா அவர்கள். மிடுக்கான அறிவு ஒளி வீசும் தோற்றமும் ஆளுமைக் கோலமும், உளவியல் தேக்க மும் மிகுந்த பொலிந்த தேகமும், நெற்றியில் விபூதி பட்டையும், சந்தனம்,குங்குமம் பொட்டுடன் என்னை வரவேற்றார். அவர் எனது தேர்ச்சி அறிக்கையை பொறுப் பேற்கையில் என்னைப் பார்த்து அன்பான புன்னகையுடன் மகளே! என அழைத் தமை என் காதிலிருந்தும், என் மனக்கண் ணில் இருந்தும் இன்றுவரை நீங்க வில்லை. அதில் மகாலிங்கம் ஐயா அதிபர் பணியில் முடிசூடியிருந்த வேளை பிள்ளை களின் கல்வி கேள்விகளிலும், போட்டி களிலும் மிகுந்த அக்கறை காட்டினார். ஐயாசேர் என அழைக்கப்படும் ஆசிரியரும் நிமிர்ந்த நடை, நேரிய பார்வை, பிள்ளை களின் ஒழுக்கத்திலும் மேன்மை அடையச் செய்தது. பாட வேளைகளில் அதிபர் வகுப் பறைகளை வலம் வந்து அவதானிப்பார். எந்த ஒரு மாணவரும் ஆசிரியரை ஏமாற் றிக் கொண்டிருக்காதபடி கவனிப்பார். அக் காலத்தில் கற்பித்த ஆசிரியர்களும் அதி பரின் சேவையை மதித்து இணைந்து பணியாற்றினார்.

இப் பாடசாலையில் 99% மான மாணவர்கள் கமக்காரர்களின் பிள்ளைகள் என்பதால் பெற்றோரின் கவனிப்பு அரி தாகும் என்பதற்காக முழு நேரமும் கற் பித்தலுடன் இணைப்பாடவிதானத்தையும் வழிப்படுத்தினார். தொடர்ந்து நானறிந்தள வில் அனைத்து ஆசிரியர்களும் பாடசாலை நேர ஒதுக்கீடு என்பதிலும் பார்க்க தமது குடும்பத்தையோ, குடும்ப உறவினர்களின் நலமான வாழ்க்கையையோ கருத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொள்ளாது அதிபருடன் இணைந்து பங்கு கொண்டு பணியாற்றினர். தலைமைத்து வம் எதைச் சிந்தித்து நெறிப்படுத்துகிறதோ அதற்குக் கட்டுப்பட்டனர். இனி எனது வகுப் பறை சிறப்பை முன்னிறுத்தினால் எனக்கு தரம் ஆறு தொடக்கம் க.பொ.த சாதாரண தரம் வரை கற்பித்தவர்களில் தமிழை இனிமையாகவும், சுவையாகவும் திருமதி சுப்பிரமணியம், திரு.வே.தனபாலசிங்கம் திருமதி.ஜீவதயாபரி,திரு.செனகரட்ணம், திரு.மு.நடராஜா ஆகிய ஆசிரியப் பெருந் தகைகளும் எமது வாழ்வை முன்னிறுத்தி எழுத்துமொழி, பேச்சுமொழி போன்ற மொழியின் திறன்களையும் நன்றாகப் பயிற்றுவித்து மொழிப்பிழையகற்றியும், இலக்கணத்தின் சிக்கலை விடுவித்தும் இலக்கியத்தை இனிப்பாக ஊட்டியும் செம் மொழியாம் எம் மொழியை எவ்வளவுக்கு எவ்வளவு எளிதாக கற்பிக்க முடியுமோ அவ் வளவுக்கு எளிதாக்கி,தெளிவாக்கி, இனிதாக் கிக் கற்பித்தனர். எம்மினிய தமிழ் ஆசான் கள் என்றால் மிகையில்லை.

கணிதபாடம் என்றால் வேப்பங் காயாய் கசக்கும் வேளை திரு.க.சுப்பிர மணியம், திரு.மகாலிங்கம் ஆசிரியர் ஆகியோர் வாய்ப்பாட்டுடன் பயிற்சிகள் பலதந்து எமக்குத் தெளிவாக விளக்கினர். அது மட்டுமா! எமது பாடசாலைக்கென விஞ்ஞான ஆசிரியர் இல்லாத வேளையில் திரு. வை.சிவராஜா ஆசிரியர் விஞ்ஞா னத்தை மிகவும் சுவையான பாடமாக்கி ஆய்வுகூடத்தில் ஆய்வுகள் மூலமும், செய் முறைப் பயிற்சிகள் ஆகவும் தொண்டை மானாறு வெளிக்கள ஆய்வு நிலையத்திற் குச் சென்று மாதந்தோறும் பல செய்முறை பயிற்சிகள் மூலமும் எங்களுக்கு நன்றாகக் கற்பித்த ஒரு நல்ல ஆசிரியராவார். ஆங்கில பாடத்தின் இடர்பாட்டை நீக்குவதற்காக சின்னமணி வாத்தியார் எனச் செல்லமாக அனைவராலும் அழைக்கப்படும் திரு. சரவணமுத்து ஆசிரியரையும் சித்திரத்தின் கலைநயத்தை நகைச்சுவையுடன் பயிற்று வித்த ஆசான் திரு. நாகமுத்துவும் சமூகக் கல்வி வரலாற்றினை மிகச்சிறப்பாகக் கற்பிக்க வல்ல ஆசிரியையாகி அக்காலத் தில் விளங்கியவர் வரதா என அழைக்கப் படும் திருமதி கனகபவான் ஆசிரியையா வார்.

நெசவு, கைப்பணிப் பாடத்தை அரச சம்பளம் இல்லாத போதும் தான் செய்யும் பணியில் திருப்திகாண வேண்டும் என்ற ஆர்வத்துடன் திருமதி.கமலா நடராஜா அவர்கள் கற்பித்தார். சமய பாடத்தை திருமதி சரஸ்வதி ஆசிரியையும் திரு.கன கரட்ணம் ஆசிரியரும் பக்திபூர்வமாகக் கற்பித்தனர். பண்பான பழக்கங்களும் பண் ணுடன் தேவாரம் பயில்வதற்காக விளக்கத் துடன் வினாக்களையும், விடைகளையும் கேட்டு மனதிருத்திப் பக்குவமாய் கதை கூறிக் கலகலப்பாய்க் கற்க வைத்தார்கள். அனைவரும் நாம் எல்லோரும் உயர்கல்வி பெற வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட் டார்கள்.

இணைபாடவிதானச் செயற்பாடு களுக்கு முழுமூச்சாய் நின்றனர். நாடகத்தி லும், பாட்டும், பண்ணிசையிலும் ஆர்வத்து டன் எம்மை ஈடுபடுத்தினர். மகாலிங்கம் ஐயா ஆசிரியரைத் தொடர்ந்து திரு. மு.நட ராஜா அவர்களும், அவருக்குப் பின் திரு. வே.தனபாலசிங்கம் ஆசிரியரும் அதிபர் பதவியை ஏற்று சிறப்பாக நடத்தி வந்தனர். ஒவ்வொரு போட்டிகளிலும் எமது பாட சாலை பங்குபற்றி பரிசில்களைத் தட்டிக் கொண்டது. நாடகத்துறையை திரு.சென கரட்ணம் ஆசிரியர் அவர்கள் பொறுப்பேற்று பயிற்றுவித்தும், அவரால் நெறிப்படுத்தப்பட்ட நாடகங்கள் அத்தனையும் போட்டிக்குச் சென்று வெற்றி பெற்று வருவதைக்கண்டு பாடசாலைச் சமூகம் பூரிப்படைந்தது. விளையாட்டுப் போட்டியில் தாச்சிப் போட்டி போன்றவற்றிலும் சிறப்பான முறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போட்டியாக விளையாடப்பட்டது. எமது பாடசாலையில் ஆங்கில நாடகங்கள், பேச்சுப் போட்டிகள் என்றால் ஒவ்வொரு தலைப்புகளிற்கேற்ப பெரிய கனகரட்ணம் என அழைக்கப்படும் திருவாளர் கணகரட் ணம் ஆசிரியரும் திருவாளர். செனகரட் ணம் ஆசிரியரும் இணைந்து தாமும் நடிகர்களாக மாறிப் பயிற்றுவித்தனர்.

கூட்டுறவு தினப் போட்டிகள், இல்ல ரீதியான பேச்சுப்போட்டிகள், வகுப்பறை மாணவர் மன்றம், பாடசாலை மாணவர் மன்றம், நவராத்திரி கலை நிகழ்வுகள் என எத்தனை போட்டிகளிலும் பங்குபற்றுதல் இடம்பெற்றன.

அதுமட்டுமல்லாது நான் பேச்சுப் போட்டி ஒன்றில் வெற்றி பெற்றதால் இலங்கை ஒலிபரப்புச் சேவையில் தேசிய வானொலிச் சேவைப் போட்டியிலும் ஒலிப் பதிவு செய்து எமது பாடசாலையின் கீர்த்தி யின் வாசனை நாடெங்கும் பரவுவதற்கு துணை செய்தவர்களே எமது ஆசான்கள். நாங்கள் பெறுகின்ற வெற்றிகள் அனைத்தி லும் தாம் பெற்ற வெற்றியாக எண்ணி மகிழ்ந்தனர். எமது ஆசான்கள் ஒவ்வொரு வரும் கல்வி அழகே தமது அழகு என மதித்தனர். ஒவ்வொரு விடயத்திற்கும் ஆக்கமும், ஊக்கமும் வழங்கினர். மாண வர்களின் கல்வியில் அக்கறை காட்டாத பெற்றோரையும் வலிந்து வரவழைத்து கூட்டங்கள் போட்டுத் தெளிவுபடுத்தினர் பாடசாலையையும் பெற்றோர்,பழைய மாணவர் சங்கத்தையும் சிரமதானங்கள் போட்டிகள் விழாக்களில் வேலைப்பகிர் வுடன் இணைந்தனர். மாணவர்கள் செய் யும் குற்றங்களை அவரவர் பெற்றோரை அலுவலகத்தில் அழைத்து யாருக்கும் தெரி யாதபடி இனிமையாகவும் சுமூகமாகவும் பேசி குறை குற்றங்களைக் கழைந்தனர். இதனால் பெற்றோரிடத்தில் புரிந்துணர்வும் நம்பிக்கையும் பாடசாலை மீது அதிகரித்தது.

பாடசாலையைப் பெறுப்பேற்று விருத்தியுடன், ஒழுக்கம், விழுமியம், பண்பாடு கலந்து வீறுநடை போட்டது. துர திஸ்டவசமாக காலக்கோலம் மாற்றத்தால் இதன் செழிப்புப் பொலிவிழந்தது. இன்று மீண்டும் தொடர்ந்து "மீண்டும் தொடங்கும் மிடுக்கென" இக்கிராமத்தின் சொத்தாகவும் வரப்பிரசாதகமாவும் மிளிர்கின்றது. இந்த கலைக்கூடம், கல்வியாலயம் வளரச் செய்த வளரச் செய்கின்ற அனைத்து நல் லுள்ளங்களையும் மனதார மெச்சுகின் றேன்.இதில் இருத்து "அருகிலே உள்ள பாடசாலையே மிகச் சிறந்தது".

என்றும் வாழியகொல்லங்கலட்டி சைவ மாதா வாழிய! வாழிய!

வீரகத்தி விநாயகர் துணையுடனே....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



திருமதி விஜயகுமாரி
முருகேசபிள்ளை SLTES
முகாமையாளர்
ஆசிரியவாண்மை விருத்தி நிலையம்
மானிப்பாய்.



# மனிதன் மனிதனாக வாழ மனவளக்கலை யோகா

"மனதை வளப்படுத்திக் கொண்டால் மனித வாழ்வு வளமாகும்." மக்கள் அனைவரும் இன்பமாக வாழ விரும்புகின்றனர். இயற்கை அனைத்தும் இன்பமயமாகவே உள்ளது, விஞ்ஞானம் மனிதர்களுக்கு எல்லா வசதிகளையும் பெற்றுக் கொடுத்திருக்கிறது. இருப்பினும் மனித குலம் பெரும்பாலும் உடலாலும் மனதாலும் துன்பங்களை அனுபவித்து வருகிறது. இத்துன்பங்களைப் போக்கி உலக மக்கள் அனைவரும் நல்ல உடல் நலமும் மனவளமும் பெற்று அமைதி, அன்பு நிறைவு ஆகியன பெற்று இன்பமுடன் வாழ ஏற்ற ஆன்மீகக்கல்வி மற்றும் பயிற்சிகளாக sky யோகா எனும் மனவளக்கலை யோகாவை (Simplity kundalini yoga) என அருட் தந்தை வேதாத்திரி மகரிஷி வகுத்துத் தந்துள்ளார்.

"தத்துவஞானி வேதாத்திரி அவர்கள் இங்கு வாழ்ந்த ஆயிரமாயிரம் மக்களுக்கு அறிவு ஒளி பரப்பினார். அந்த அறிவு ஒளிதான் நாம் கடைபிடிக்க வேண்டிய நல்லொழுக்கம் என விஞ்ஞானி அப்துல் கலாம்" ஐயா அவர்கள் வியந்து போற்றும் மாபெரும் ஞானகுருவே அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களாவார்.

ஒவ்வொரு தனிமனிதனும் அமைதியாக இருந்தால் தான் அவனது குடும்பமும் அமைதியாக இருக்கும், தனிமனித அமைதி குடும்ப அமைதி யாகி, குடும்ப அமைதி உலக அமைதியை கொண்டு வரும் என்பதுதான் மகரி ஷியின் கனவு அந்த கனவை நனவாக்க வடிவமைத்து உருவாக்கப்பட்டதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனவளக்கலை யோகா எனும் அற்புதக் கலை மனவளக்கலை என்பது மனிதனை முழுமையாக்கும் கலை. விஞ்ஞானத்தால் கூட "மனம்" என்ற அரூபமான ஒன்றைப் பற்றி இன்று வரை ஆராய்ந்த முடிவை எட்ட முடியவில்லை. மனம் பற்றிய தெளிவான அறிவு எமக்கு இருப்பது அவசியம். அதை நாம் செய்யத் தவறியதால் தான் மன உளைச்சல்நிறைந்த மனிதர்களையே எங்கேயும் காணமுடிகிறது.

அவசரமான உலகத்தில் அல்லல் பட்டு அலைகிறோம் ஆகவே மனதை வளப் படுத்த வேண்டியது மிகமிக அவசியமாகும். உடல் நலமாக இருந்தால் தான் மனமும் வளம்பெறும். உலக சமுதாய சேவா சங்கத் தின் அடிப்படைக்கொள்கையே உளப்பயிற் சிக்கு முன் உடற்பயிற்சி தேவை என்ப தாகும். அதற்காக,

1. உடல் ஆரோக்கியத்திற்காக உடற் பயிற்சியும்
2. உயிரை வளப்படுத்த காயகல்ப பயிற்சியும்
3. மனதை செம்மையாக்கத் தியானப் பயிற்சியும்
4. தன்னைப்போல் பிறரையும் மதித்து வாழ அகத்தாய்வுப் பயிற்சியும்

என பயிற்சிகளை வடிவமைத்து போதனை யுடன் மட்டும் நிற்காது ஒவ்வொன்றையும் பயின்று சாதனையாக்க வேண்டும். தினசரி ஆரோக்கிய வாழ்வுக்காக குடும்பங்களில் இப்பயிற்சிக்காக நாம்நேரத்தை ஒதுக்க வேண்டும், குடும்ப தலைவர்களாகிய நாம் T.v, Phone பார்ப்பது போல உடற் பயிற்சியை யும் செய்வோமானால் எமது குழந்தை களும் அதையே பழக்கமாக்கி கொள்வார் கள். இதுவே வழக்கமாகிவிட்டால் அது எமக்கும் எமது எதிர்கால சந்ததியினருக்கும் நன்மையே தரும். ஏதிர்காலத்தின் விருட் சங்களாகிய இன்றைய மாணவர்களை திறன்மிக்க ஒழுக்க சீலர்களாக சமூகத்திடம்



கையளிக்கும் பொறுப்பு நம்மிடமே உண்டு என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

பலவருட ஆராய்ச்சிக்குப் பிறகு அருட் தந்தை அவர்களால் நமக்கு அளிக்கப் பட்ட இந்த எளிய முறை உடற்பயிற்சி விஞ்ஞானிகளாலும் மெய்ஞானிகளாலும் வியந்து பாராட்டும் வகையில் அமைந் துள்ளது. அந்தவகையில் அவை உடலின் ஒவ்வொரு உறுப்பையும் ஊக்குவித்து இயங்க வைக்கும் வல்லமை படைத்த உடற்பயிற்சியானது 9 வகை அவை.

1. கைப்பயிற்சி
2. கால்பயிற்சி
3. நரம்பு தசைநார் மூச்சுபயிற்சி
4. கண்பயிற்சி
5. கபாலபயிற்சி
6. மகராசனம்
7. உடம்பைத் தேய்த்து விடுதல்
8. அக்குபிரஷர்
9. உடம்பைத் தளர்த்தல் - ஓய்வு தரும் பயிற்சி

இப் பயிற்சிகளை எட்டுவயதிலி ருந்தே தொடங்கலாம் செய்யலாம். இந்த உடற் பயிற்சிகள் யாவும்

1. இன்றைய வாழ்க்கைச் சூழலுக்கேற்ற வாறு மருத்துவ ரீதியாக வடிவமைக்கப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



2. நமது உடலிலுள்ள இரத்த ஓட்டம், வெப்ப ஓட்டம், காறோட்டம், உயிரோட்டம் சீரடைகின்றது.
3. உச்சந்தலையிலிருந்த உள்ளங்கால் வரை அனைத்து உறுப்புக்களும் ஆரோக்கியம் பெறுகின்றன.
4. நோய்கள் படிப்படியாக குணமடைகின்றன. நோய் எதிர்ப்பாற்றல் பெருகுகிறது. கடுமையானநோய்கள் கூட தீவிரமடையாமல் தடுக்க உதவுகிறது.
5. உடலை வருத்தாமல் குறைந்த நேரத்தில் செய்து முடிக்கக் கூடிய பயிற்சிகள்
6. எல்லாக் காலநிலைக்கும் ஏற்றது
7. மிகச்சுலபமாக ஆண், பெண், குழந்தைகள், பெரியவர்கள் என அனைத்து தரப்பினரும் செய்யக்கூடிய வகையில் ஒழுங்கமைக் கப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்பும் அற்புதமும் மிக்க உடற்பயிற்சியை "நேரமில்லை" என்ற வார்த்தையை தவிர்த்து நேரம் ஒதுக்கி செய்து வருவது அவசியமான ஒன்று.

அது மட்டுமல்லாது திரைப்படமும், ஊடகங்களும் சமூகவலைத்தளங்களும் இன்றைய இளைஞர்களுக்கு நிறைய விடயங்களை கற்றுத்தருகின்றன. அதில் காமம் சார்ந்தவை மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ஊடலில் உயிர்வித்து உடலிலிருந்து வெளியேறும் போது அவர்கள் புது உணர்வு பெறுகின்றார்கள் இதைப் பற்றிய போதிய அறிவு எமது கல்வி முறை கற்றுக் கொடுக்க தவறி விடுகிறது. இந்த ஆற்றலில் தான் மனித ஆயுள், இளமை, ஆரோக்கியம் இனவிருத்தி எல்லாமே அடங்கிவிடுகிறது.

நமது வித்து சக்தி தான் எமது பௌதீக உடல் அதனுடைய இயக்க ஒழுங்கு, நோயெதிர்ப்பு தன்மை, அதற்கு காரண உயிரையும் வலுவாக்கி உதவுகிறது. அதனால் மனமும் வளமாகிறது. மகரிஷி அவர்கள் புதிதாக கண்டுபிடித்து கொடுத்த பழைய சித்தர் கலையே "காய கல்ப கலை" இதனை உலக சமுதாயசேவர் சங்கத்தின் கீழ் இயங்குகின்ற தலைமைய கங்களுக்குச் சென்று பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடம் பயிற்சி பெற வேண்டும். முறையாக கற்றுக் கொள்ள வேண்டும் இந்த காகல்ப பயிற்சியை நாள் தவறாமல் செய்து வரும் ஒரு நபரால் :

1. நோயின்றி வாழ முடியும். நோய்வராமல் தடுக்க முடியும். வந்த நோயை குணப்படுத்த முடியும்.
2. விரைவில் முதுமை அடைவதை தவீரத்து இளமை காத்து வாழலாம்.
3. மரணத்தை தள்ளிப் போட முடியும்,
4. நாள்முழுக்க உற்சாகத்துடன் செயலாற்ற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இதனை மனித வாழ்வின் பொற் காலமாக்கி இளைஞர் பருவத்திலேயே இந்த அரிய கலையை பயில நாம் வழிப் படுத்த வேண்டும். தப்பான வழிகளில் செல்ல விடாமல் தடுக்கும் இதுவே இளை ஞர்கள் கற்க வேண்டிய முதல் பாடம். அடுத்து மனவளக்கலையில் சக்தி வாய்ந்த தவங்கள் (தியானங்கள்) கற்றுக் கொடுக்கப் படுகிறது. அவற்றுள் ஆக்கினை, சாந்தி, துரிய தவம் என்பன அடிப்படைப் பயிற்சி களாக கற்றுக் கொடுக்கப்படுகிறது. இவை விலை மதிக்க முடியாத பலன்களை தருகிறது.

போட்டி, பொறாமை, கவலை, சினம் நிறைந்த எமது அன்றாட வாழ்க் கையை சீர்மைப்படுத்த அகத்தாய்வுப் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. எமது எண் ணங்களை ஆராய்ந்து எம்மை வழிபடுத்த இவை உதவுகிறது.


இத்தகைய பயிற்சிகளை பட்டப் படிப்பாக ஆய்வு ரீதியாகக் கற்றுத்தேர்வதற் காகவும் ஆன்மீக வாழ்வில் உயர்வு பெற வும் பல்கலைக்கழகங்களில் இணைக்கப் பட்டுள்ளது. கல்வித்துறையைப் பொறுத்த மட்டில் ஆரம்பக்கல்வி மாணவர்கள் தொடக் கம் இத்துறையின் உயர்நிலை உத்தியோ கத்தர்வரை நிறைவான நோக்கத்தில் மனவளக்கலை இன்றியமையாத தாகிறது. இன்றைய காலத்தைப் பொறுத்தளவில் முக்கிய பிரச்சினையாக நோக்கப்படும் போதை தொடக்கம் இளமட்டங்களில் இடம் பெறும் தவறான முடிவுகளால் ஏற்படும் மரணங்கள் வரை முடிவுக்கு வர மனவளக் கலை நிகரில்லா அருமருந்தாகும். இரைப் பையையோ சிறுநீரகத்தையோ பாதிக்காது மறுபுறமாக உடலின் சகல பாகங்களையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக ஆக்கி பூரண செயல் திறனுக்கு வழிகாட்டும் மன வளக்கலை வாழ்வை வளமாக்கும் என்பது உறுதி!

**வாழ்க வளமுடன்!**





சட்டத்தரணி
அப்பாப்பிள்ளை கணேசலிங்கம்
(B.COM, LLB, ACMA (UK), CGMA)



# எங்களது கிராமத்துப் பாடசாலை

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதில் குரு என்ற சொல்லுக்கு அறியாமையை நீக்குபவர் என்பதே பொருளாகும். சமய நூல்கள் வித்தியாகுரு, பிரதிஷ்டா குரு,ஞான குரு எனக் குருவை மூன்று வகையாகப் பிரித்துக் கூறுகின்றன. வீடு பேறடைய வழிகாட்டுபவர் ஞானகுரு ஆவார். ஆலயக் கிரிகைகளைச் செய்பவர் பிரதிஷ்டாகுரு ஆவார். கல்வியறிவைத் தருபவர் வித்தியாகுரு ஆவார். ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் இடம் பாடசாலையாகும். கிராமத்தின் பண்பாட்டு நிலையங்களில் ஆலயங்களைப் போன்று பாடசாலைகளும் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் நோக்கில் அரச உதவியுடன் ஆங்கிலக் கல்வி முறைக்காக வடக்கு மாகாணத்தில் பல பாடசாலைகளில் ஆரம்பிக்கப் பட்டன. இச்சூழ்நிலை தமிழ் மக்களின் தனித்துவத்தை அழித்துவிடும் என உணர்ந்த நாவலர் பெருமான் சைவத்தையும் தமிழையும் வளர்க்கத் தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்டுப் பாடசாலைகளை நிறுவினார்.

அவரின் பணியைத் தொடர்ந்த அமரர் ஆறுமுகம் வேலுப்பிள்ளை அவர்கள் தமது ஊரான கொல்லங்கலட்டியில் ஒரு பாடசாலையை நிறுவ வேண்டும் என விரும்பி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் கிழக்குப் பக்கத் திலே 1872ஆம் ஆண்டு ஒரு பாடசாலையை நிறுவினார். ஆரம்பத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



இப்பாடசாலை சிறிய கொட்டிலாக அமைக்கப்பட்டது. இங்கு மூன்று ஆசிரியர்களிடம் 40 மாணவர்கள் கல்வி பயின்றனர்.

இப் பாடசாலை தெல்லிப்பழைக் கோவிற்பற்றில் ஆரம்பிக்கப்பட்ட முதற் பாடசாலை என்பது எங்களது கிராமத்தின் பெருமைக்குரியதாகும். நிறுவியவரின் மகனான அமரர் வே.சிற்றம்பலம் ஆசிரியர் அவர்கள் முகாமையாளராகப் பொறுப்பேற்றுக் கொட்டிலாக இருந்த பாடசாலையைப் பெரிய மண்டபமாக அமைத்தார். இவர் காலத்தில் 300 மாணவர்களும், 10 ஆசிரியர்களும் கொண்ட பாடசாலையாக வளர்ச்சி பெற்றது. இவ் வித்தியாயலயத்திற்கும் வீரகத்தி விநாயகர் கோவிலுக்கும் உள்ள உறவு மிகவும் நெருக்கமானதாகும். இப்பாடசாலை, 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர்ச் சூழலால் மூடப்பட்டது. 2011 ஆம் ஆண்டு இப்பகுதியில் மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டதன் விளைவாக அழிவடைந்திருந்த கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு மீண்டும் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றது.

ஒரு மாணவனுடைய உருவாக்கத்தில் குடும்பமும், பாடசாலையும் முக்கிய இடம்பெறுகின்றன. மாணவனுக்குப் பாடசாலை இரண்டாவது வீடாக அமைகின்றது.


பாடசாலைகள் ஒரு சமூகத்தின் இதயம் போன்றவை. பண்பாட்டு விழுமியங்களை ஒரு தலைமுறையினரிடமிருந்து தொடர்ந்து வரும் தலைமுறையினருக்குக் கொண்டு செல்வதில் குடும்பத்திலும் பார்க்கப் பாடசாலைகளே கூடிய செல்வாக்குச் செலுத்துகின்றன. அறிவை வளர்க்கும் இடமாக மட்டுமல்லாமல் முழுமையான ஆளுமை வளர்ச்சிக்குத் துணைபுரியும் இடமாகவும் பாடசாலைகள் அமைகின்றன. மக்களுக்குப் பயன்படக்கூடிய முழு மனிதனை உருவாக்கித் தரும் ஆதார நிலையங்களாகப் பாடசாலைகளை இயங்க வைப்பது ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், கல்வி அதிகாரிகள் அனைவரதும் கூட்டுப் பொறுப்பாகும்.

இங்கு கல்வி கற்ற மாணவர்கள் மருத்துவர்களாக,பொறியியலாளர்களாக, சட்டத்தரணிகளாக, கணக்காளர்களாக, விரிவுரையாளர்களாக, ஆசிரியர்களாக, தொழிநுட்ப உத்தியோகத்தர்களாக இலங்கையில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் சேவையாற்றி வருகின்றனர்.

இப்பாடசாலை சிறப்பாகச் செயற்படப் பழைய மாணவர்கள் தொடர்ந்தும் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து வருதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



New Evergreen Printers (Pvt) Ltd, Jaffna. Tel : 021 221 9893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media